
# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

மே 2009

விலை ரூ.10/-





# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2040

சித்திரை - வைகாசி

மே 2009

மலர் : 40 இதழ் : 11

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

**திரு. சி.காமராஜ், இ.ஆ.ப.,**
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு.ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**இரா. சுரேஷ்**
**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in



**உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.**

நினைப்பதெல்லாம் உயர்ந்த நினைப்பாகவே இருக்க வேண்டும். அது கைகூடாவிட்டாலும் அதற்காக அந்த நினைப்பை விடக்கூடாது.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...



## இந்த இதழில்...

- தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நியமனம் ........ 2
- புதிய பூங்கா - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார் ........ 5
- தகடூரான் தந்த கனி - கலைஞரின் சங்கத்தமிழ் ........ 12
- வேலைவாய்ப்பினை அடிப்படையாகக் கொண்டு தொகுப்புச் சலுகைகள் வழங்க வகை செய்யும் புதிய கொள்கை........ 16
- நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் - 2009 ........ 18
- இருளகல - அறிஞர் அண்ணா ........ 33
- அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு ........ 49
- பள்ளி வளாகங்களிலேயே வேலைவாய்ப்புப் பதிவினை மாணவ, மாணவிகள் பதிவு செய்து கொள்ளலாம் ........ 63
- விவசாயிகளைப் பொருளாதார மேம்பாடு அடையச் செய்யும் செம்மை நெல் சாகுபடி ........ 66
- வேளாண்மைப் பொறியியல் துறையின் சீர்மிகு திட்டப் பணிகள் ........ 74
- பயன் அளிக்கும் பால் வளம் ........ 79

| | | |
|---|---|---|
| முதலாம் அட்டை | : | புதுடெல்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்தார்.(19.5.2009) |
| இரண்டாம் அட்டை | : | மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களை துணை முதலமைச்சராக நியமிக்கப்பட்ட திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார் (30.5.2009) |
| மூன்றாம் அட்டை | : | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை துணை முதலமைச்சராக நியமிக்கப்பட்ட திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்(30.5.2009) |
| நான்காம் அட்டை | : | புதுடெல்லியில் திருமதி. சோனியா காந்தி அவர்களை அவரது இல்லத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்தார்.(19.5.2009) |

# தமிழ்நாட்டின்

# துணை முதலமைச்சராக

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்

## திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் நியமனம்



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பரிந்துரையை ஏற்று, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் 29-05-2009 அன்று துணை முதலமைச்சராக நியமித்துள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் இதுவரை ஏற்று வந்த துறைகளில் பொது நிருவாகம், மாவட்ட வருவாய்த்துறை அலுவலர்கள், தொழில்கள், சிறுபான்மையினர் நலம், பாஸ்போர்ட், சமூக சீர்திருத்த நடவடிக்கைகள் உள்ளிட்ட துறைகளை இதுவரை வகித்து வந்த துறைகளுடன் சேர்த்து இனி திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நிருவகிப்பார்.

திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சர் என அழைக்கப்படுவார்.

❖



உழைக்கும் தொழிலாளர் சமுதாயத்தின் உரிமையை உலகுக்கு உணர்த்திடும் மே தினம் உலக நாடுகளால் எழுச்சியுடன் கொண்டாடப்படுகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் "திராவிட இனமே பாட்டாளி இனம்; திராவிடர் கலாச்சாரம் உழைத்து வாழ்வதையே வலியுறுத்துகிறது." என்று கூறி மே தின விழாவை உரிமையுடனும், உவகையுடனும் கொண்டாட வேண்டியதில் நமக்குள்ள உரிமையை வலியுறுத்தினார். அவரது கொள்கை வழிநின்று தொண்டாற்றிடும் இந்த அரசு தொழிலாளர் நலன்களைக் காக்கும் உணர்வோடு தனி அமைச்சகத்தை ஏற்படுத்தி தொழிலாளர் உரிமைகளைப் பேணிக் காப்பதில் எப்பொழுதும் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

இந்தியத் திருநாட்டிலேயே முதன்முதலாக மே தினத்திற்கு ஊதியத்துடன் அரசு விடுமுறை

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
## **கலைஞர்** அவர்களின்
## '**மே தின**' வாழ்த்துச் செய்தி



வழங்கி தொழிலாளர் சமுதாயம் மே தின விழாவை சிறப்புடன் கொண்டாடி மகிழ்ந்திட வழிவகை செய்தது. மேலும் விவசாயத் தொழிலாளர் நல வாரியம் முதலிய பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களை அமைத்து இலட்சக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. கடந்த காலங்களில் தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்ட 20 சதவீத போனஸ், ஊக்கத் தொகை முதலிய பல்வேறு சலுகைகள் மீண்டும் வழங்கப்படுகின்றன.

நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம்;

விவசாயக் கூலிகளாகவும், வேறுபல தொழில்களில் உழைப்பாளிகளாகவும் திகழும் ஏழை எளிய கர்ப்பிணிப் பெண்களுக்கு 6,000 ரூபாய் நிதியுதவி;

உழைப்பாளி வர்க்கம் ஓய்வு நேரங்களில் உளம் களிக்க இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்;

தொழிலாளர் குடும்பங்களின் பசிப்பிணி போக்கிட 1 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி;

50 ரூபாய்க்கு மலிவு விலையில் மாதந்தோறும் மளிகைப் பொருள்கள்;

– எனப் பல்வேறு உதவிகளை இந்த அரசு வழங்கி, நாளும் உழைத்திடும் ஏழை எளிய தொழிலாளர் குடும்பங்கள் நலம் பெறவேண்டும்; வளம் பெறவேண்டும் எனத் தொடர்ந்து பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த உணர்வோடு தமிழகத்தில் வாழும் தொழிலாளர் சமுதாய மக்கள் அனைவருக்கும் எனது மே தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

**வாழ்க தொழிலாளர் சமுதாயம்!**

* * *

## பள்ளி, கல்லூரி விடுதிகளில் சேரும் சிறுபான்மை இஸ்லாமிய மாணவியரின் குடும்ப வருமான வரம்பு ரூ.1 இலட்சமாக உயர்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் உத்தரவு

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் சிறுபான்மை இஸ்லாமிய மாணவியர் தங்கிப் படிப்பதற்காக இந்த அரசு கடந்த ஆண்டில் திருநெல்வேலி, திண்டுக்கல், திருச்சி, கோவை, வேலூர் ஆகிய இடங்களில் புதிதாக ஐந்து மாணவியர் விடுதிகளைத் தொடங்கியுள்ளது.

இந்த விடுதிகளில் சேருவதற்கான சிறுபான்மை இஸ்லாமிய மாணவியரின் பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு 50 ஆயிரம் ரூபாய் என்பதை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 27.5.2009 அன்று ஆணையிட்டுள்ளார். இந்த ஆணையின் காரணமாக ஆண்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை குடும்ப வருமானம் கொண்ட ஏழை இஸ்லாமிய சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்த மாணவியர் பெரிதும் பயனடைவர்.

தலைமைச் செயலகம் எதிரில்

# புதிய பூங்கா

## மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் திறந்து வைத்தார்

**செ**ன்னைக் கடற்கரையை அழகுபடுத்தும் பணிகளில் முதற்கட்டமாக, கோட்டையின் எதிரில் ரிசர்வ் வங்கி முதல் போர் நினைவுச் சின்னம் வரை ஏறத்தாழ 10 கோடி ரூபாய் செலவில் அமைந்துள்ள பொலிவுபெறும் பூங்காவை 29.5.2009 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலும் 21 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் 339 இடங்களில் பூங்காக்கள் அமைக்கப் பட்டுள்ளன. மேலும், 17 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் 15 இடங்களில் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.



சென்னை மாநகரை அழகுபடுத்தும் நோக்கிலும், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நோக்கிலும் மாநகரெங்கும் பூங்காக்கள் பல உருவாக்கப்பட்டு வருகின்றன. 100 கோடி ரூபாய் செலவில் அடையாறு பூங்கா அமைக்கும் பணி நடைபெறுகிறது.

இவையல்லாமல் உலகின் மிகச் சிறந்த கடற்கரைகளில் ஒன்றாகிய சென்னைக் கடற்கரையை 40 கோடி ரூபாய் செலவில் அழகுபடுத்தும் பணி நடைபெறுகிறது.

அதன் முதல்கட்டமாக, சென்னை – கோட்டையின் எதிரில் இராஜாஜி சாலையில்

ரிசர்வ் வங்கி முதல் போர் நினைவுச் சின்னம் வரை இருபுறமும் அழகு மிளிரும் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்கா அமைந்துள்ள இராஜாஜி சாலையின் இருபுறமும், 935 மீட்டர் நீளத்திற்கு கிரானைட் கற்கள் பதிக்கப்பட்ட நடைபாதைகள் அமைக்கப்பட்டு; இந்த நடைபாதைகளின் ஓரத்தில் துருப்பிடிக்காத இரும்புக் குழாய்களுடன் கிரானைட் தூண்களும் அமைக்கப்பட்டுள்ளன.

18 ஏக்கர் பரப்புள்ள நிலப்பகுதியில் 12 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இப்பூங்காவின் உட்புறத்திலும் கிரானைட் கற்கள் பதிக்கப்பட்ட நடைபாதைகளுடன், இடையிடையே பொதுமக்கள் அமர்வதற்காக 20 இடங்களில் கிரானைட் கற்களால் இருக்கைகளும்; மரங்கள் நெருங்கியுள்ள பகுதிகளில் 10 மீட்டருக்கு 10 மீட்டர் அளவில் சதுரவடிவில் பொதுமக்கள் அமர்ந்து ஓய்வெடுப்பதற்கு வசதியாக 18 இடங்களில் கிரானைட் கல் மேடைகளும் அமைக்கப் பட்டுள்ளன.

பூங்காவின் பின்புறம் உள்ள சுவர்ப் பகுதிகளில் குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவரையும் கவரும் வகையில் அழகிய சித்திரங்களும் தீட்டப்பட்டுள்ளன.

தலைமைச் செயலகத்தின் நேர் எதிரில் ஏறத்தாழ 30 மீட்டர் விட்டமுள்ள வட்ட வடிவ நீரூற்று ஒன்றும், அதேபோல, போர் நினைவுச் சின்னம் அருகில் கிரானைட் கற்களால் ஆன மற்றொரு நீரூற்று ஒன்றும் உயர்தர கிரானைட் கற்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

உடற்பயிற்சி மற்றும் யோகாசனப் பயிற்சிகள் செய்வதற்கு வசதியாக நான்கு பெரிய கிரானைட் மேடைகளும், வாகனங்களை நிறுத்துவதற்கு வசதியாகக் கான்கிரீட் தரையுடன் நிறுத்துமிடங்களும், ஓட்டுநர்கள் அமர்ந்து ஓய்வெடுப்பதற்கு வசதியாக கிரானைட் கல் மேடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. அருகிலுள்ள அன்னை சத்தியாநகர் குடிசைவாழ் மக்களின் பயன்பாட்டிற்குத் தேவையான வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

ஏறத்தாழ 9 கோடியே 74 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இப்பூங்கா பகுதியில், அழகிய வடிவமைப்பில் 83 மின் கம்பங்கள் 400 வாட் திறனுள்ள சிறப்பு வகை விளக்குகளுடன் 50 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப் பட்டுள்ளன.


மேலும், கொடிமரச் சாலை சந்திப்பில் 30 மீட்டர் உயரமுள்ள உயர்கோபுர மின்விளக்குக் கம்பம் ஒன்று 5 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவிலும்; தலைமைச் செயலகத்தின் முன்புறம் உள்ள வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் 30 மீட்டர் உயரமுள்ள மற்றொரு உயர் கோபுர மின்விளக்குக் கம்பம் 7 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன. மாலை நேரங்களில், பொதுமக்களுக்கு வசதியாக பூங்கா முழுவதிலும் மின் விளக்கு வசதிகள் போதுமான அளவில் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகருக்கு அழகையும், பொதுமக்களுக்கும், குழந்தைகளுக்கும் மகிழ்ச்சியையும், மனநிறைவையும் அளிக்கத்தக்க இப்பூங்காவை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 29.5.2009 அன்று திறந்து வைத்தார். அத்துடன், இப்பூங்கா மேலும் பொலிவு பெற வேண்டும் என வாழ்த்துக் கூறி புதிய மரக்கன்றுகளையும் நட்டார்.

இந்நிகழ்வின்போது மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், மாண்புமிகு குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு அமைச்சர் திரு. சுப. தங்கவேலன், சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வி.எஸ்.பாபு, திரு.மாலைராஜா, திரு.மகேஷ் கிருஷ்ணசாமி, திரு.துரை சந்திரசேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.மதிவாணன், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும், அரசின் உயர் அலுவலர்களும் உடனிருந்தனர்.

❖ ❖ ❖

# 22 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையாளர்களுக்கு ரூ.84 இலட்சம் பரிவுத்தொகை வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உத்தரவு



சிறந்த தமிழறிஞர்களின் நூல்கள் அனைவரையும் சென்றடைதல் வேண்டும் எனும் சீரிய நோக்கில் அந்நூல்களை நாட்டுடைமையாக்கி, அவற்றைப் படைத்த தமிழறிஞர்களின் மரபுரிமையாளர்களுக்குப் பரிவுத் தொகை வழங்கும் திட்டம் அரசால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் பரிதிமாற் கலைஞர், புலவர் குழந்தை, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் முதலான 65 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்களுக்கு 4 கோடியே 86 இலட்சம் ரூபாய் பரிவுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, 2009–2010ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 28 தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்கள் உருவாக்கிய நூல்களின் எண்ணிக்கை – அவை சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கம், அவற்றின் பெருமை ஆகியவற்றின் அடிப்படையில் அவர்தம் மரபுரிமையருக்குப் பரிவுத்தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைச் செயல் படுத்தும் வண்ணம் குழந்தைக்கவிஞர் அழ.வள்ளியப்பா, பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார், இராய

சொக்கலிங்கனார், முனைவர் ச.அகத்திய லிங்கம், பாவலர் நாரா. நாச்சியப்பன், புலியூர்க்கேசிகன், சின்ன அண்ணாமலை, வடுவூர் துரைசாமி அய்யங்கார், பேராசிரியர் மு.இராகவையங்கார் ஆகிய 9 தமிழ்ச் சான்றோர்களின் படைப்புகளை அரசுடைமையாக்கி அவர்களின் மரபுரிமையருக்கு தலா ஐந்து இலட்சம் ரூபாய் பரிவுத்தொகை வழங்கப்படும் என்றும் ;

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, பம்மல் சம்பந்தனார், டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார், மு.சு.பூரணலிங்கம் பிள்ளை, தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், பாலூர் கண்ணப்பமுதலியார், வை.மு.கோதை நாயகி, பூவை எஸ். ஆறுமுகம், என்.வி.கலைமணி, கவிஞர் முருகுசுந்தரம், புலவர் த.கோவேந்தன், திருக்குறள் மணி, அ.க.நவநீத கிருட்டிணன் ஆகிய 12 தமிழ்ச் சான்றோர்களின் படைப்புகளை அரசுடைமையாக்கி அவர்களின் மரபுரிமையருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் பரிவுத்தொகை வழங்கப்படும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.5.2009 அன்று ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் படைப்புகள் அரசுடைமை யாக்கப்படுமென அறிவிக்கப்பட்ட 28 தமிழறிஞர்களில் எஞ்சிய 7 தமிழறிஞர் களில் கவியரசு கண்ணதாசன், டாக்டர் மு.வரதராசனார், எழுத்தாளர் சாண்டில்யன், எழுத்தாளர் சுந்தர ராமசாமி, திருமதி இலட்சுமி ஆகிய 5 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவதற்கு அவர்களுடைய மரபுரிமையர்கள் இசைவு அளிக்கவில்லை.

ஜெ.ஆர்.ரெங்கராஜு, ஜமதக்னி ஆகிய இருவரின் மரபுரிமையர்களிடம் சான்றாவணம் பெறுவதற்கு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், சாகித்ய அகாடமி விருது மற்றும் தமிழக அரசின் விருது ஆகியவைகளைப் பெற்றுள்ள சிறந்த தமிழ் எழுத்தாளரான திருமதி.ராஜம் கிருஷ்ணன் அவர்கள் உடல் நலிவுற்று சிகிச்சை பெற்றுவரும் நிலையில் அவரது வேண்டுகோளை ஏற்று, தனிநேர்வாகக் கருதி அவரது படைப்புகளை அரசுடைமை யாக்கி மரபுரிமையர் ஒருவருமில்லாத காரணத்தால் அவருக்கு 3 இலட்சம் ரூபாய் பரிவுத்தொகையாக வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இந்த ஆணைகளின் பயனாக மொத்தம் 22 தமிழறிஞர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு மொத்தம் 84 இலட்சம் ரூபாய் பரிவுத்தொகையாக வழங்கப்படுகிறது.

❖

பள்ளிக் கல்வியில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்து தமிழக அரசின் தேர்வுத் துறை நடத்தும் 12–ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் குவித்து, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றுச் சாதனைகள் படைக்கும் மாணவ – மாணவியருக்கு, பி.இ., எம்.பி.பி.எஸ்., உட்பட அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு, தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பள்ளிப் படிப்பில் முழுமையாகக் கவனம் செலுத்தி, கடுமையாக உழைத்து மாநில அளவில் சிறப்பாகத் தேர்ச்சி பெறும் மாணவ மாணவியர்க்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் மாநில அளவில் முதல் இடம் பெறுபவருக்கு வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகையை 50 ஆயிரம் ரூபாய்

# மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் சாதனை படைத்த மாணவ – மாணவியருக்கு பரிசுத் தொகை – பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டினார்

விரும்பிப் பயிலும் பட்டப் படிப்பிற்கான உயர்கல்விச் செலவு என்று உயர்த்தியும், இரண்டாம் இடம் பெறுபவருக்கு வழங்கப்படும் 12 ஆயிரம்



முழுவதையும் தமிழக அரசு ஏற்கும் திட்டம் 1996–ஆம் ஆண்டில் ரூபாய் பரிசுத் தொகையை 30 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தியும், மூன்றாம் இடம் பெறுபவருக்கு வழங்கப்படும் 10 ஆயிரம்

> மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இந்த மகத்தான திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 12ஆம் வகுப்புத் தேர்வுகளில் மட்டும் மாநில, மாவட்ட அளவில் சாதனைகள் படைக்கும் ஏறத்தாழ 100 மாணவ, மாணவியர் ஆண்டுதோறும் அரசின் செலவிலேயே படித்து முன்னேறும் அருமையான வாய்ப்புகள் கிடைக்கின்றன

ரூபாய் பரிசுத் தொகையை 20 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தியும் இந்த ஆண்டு முதல் வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 25.5.2009 அன்று அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, 2009 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் 1200க்கு 1183 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் முதல் இடம் பெற்றுள்ள தென்காசி, இலஞ்சி, பாரத் மாண்டிசோரி மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி மாணவர் பா. ரமேஷ்; ஈரோடு, விஜயமங்கலம், பாரதி மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி மாணவர் எம். லிங்கேஸ்வரன்; கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, ஸ்ரீ வித்யா மந்திர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி மாணவி கே.சி. சிஞ்சு; கரூர், சேரன் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி மாணவன் ஆ. பிரவின் ஆகிய நால்வருக்கும் பரிசுத்தொகையாக தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்; 1200க்கு 1182 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றுள்ள கிருஷ்ணகிரி, ஓசூர், ஸ்ரீ விஜய் வித்யாலயா மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி மாணவி எஸ். ஐஸ்வர்யா; தருமபுரி, காந்திநகர் ஸ்ரீ விஜய் வித்யாலயா பெண்கள் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி மாணவன் பி.சுகவனேஷ் ஆகிய இருவருக்கும் பரிசுத்தொகையாக தலா 30 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்;

1200க்கு 1181 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்றுள்ள சேரன் மாதேவி, இருதயகுளம், அமலி பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மாணவி சை. ஜஸிமா சுலைகா; தூத்துக்குடி, ஸ்பிக் நகர் மேல்நிலைப்பள்ளி மாணவி யாழினி சி பிரதீப்; நாமக்கல், காவேட்டிப்பட்டி, குறிஞ்சி மேல்நிலைப்பள்ளி மாணவன் எம். வைத்தீஸ்வரன்; ராசிபுரம், எஸ்.ஆர்.வி. பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி எம். மீரா ரஷீபா ஆகிய நால்வருக்கும் பரிசுத் தொகையாக தலா 20 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள்; என 10 சாதனையாளருக்கும் மொத்தம் 3 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 25.5.2009 அன்று வழங்கிப் பாராட்டியதுடன், பரிசு பெற்ற மாணவ, மாணவியர் எந்தக் கல்லூரியில், எந்தப் பட்டப்படிப்பில் சேர்ந்து படித்தாலும், அதற்குரிய செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கும் என்பதற்கான

சான்றிதழ்களையும் வழங்கி, வாழ்த்துகள் தெரிவித்தார்.

பரிசு பெற்ற மாணவ மாணவியரும், உடன் வந்த பெற்றோரும், ஆசிரியரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இந்த மகத்தான திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 12ஆம் வகுப்புத் தேர்வுகளில் மட்டும் மாநில, மாவட்ட அளவில் சாதனைகள் படைக்கும் ஏறத்தாழ 100 மாணவ, மாணவியர் ஆண்டு தோறும் அரசின் செலவிலேயே படித்து முன்னேறும் அருமையான வாய்ப்புகள் கிடைக்கின்றன என்றும், இந்த ஆண்டில் அந்த வாய்ப்புகளைத் தங்களுக்கு வழங்கியமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத் தங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதாகவும் மனம் நெகிழ்ந்து கூறி மகிழ்ந்தனர்.

மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் திரு.எம். குற்றாலிங்கம், இ.ஆ.ப., பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் பி.பெருமாள்சாமி, அரசுத் தேர்வுகள் இயக்குநர் திருமதி வசந்தி ஜீவானந்தம் ஆகியோர் இந்நிகழ்வின்போது உடனிருந்தனர்.

❖ ❖ ❖

தமிழகத்தில் இதுவரை அரசு சார்பில் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள், கட்டுமானத் தொழிலாளர்கள், கைத்தறித் தொழிலாளர்கள், தூய்மைப் பணிபுரிவோர், மீனவர், சீர்மரபினர், நரிக்குறவர், தையல் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர்கள், அரவாணிகள், ஊனமுற்றோர், வணிகர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள், உலமாக்கள் போன்றவர் களுக்காக தனித்தனியே 28 நல வாரியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியத் திற்கு இலக்கியச் செல்வர் திரு. குமரி அனந்தன் அவர் களும், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியத்திற்கு திரு. சேம.நாராயணன் அவர்களும் தலை வர்களாக ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

## நான்கு வாரியங்கள் தவிர மற்ற வாரியங்களை கண்காணிக்கும் ஒருங்கிணைப்பாளராக

மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர்
திரு. **ஆர்க்காடு நா. வீராசாமி** அவர்கள் நியமனம்

இது தவிர, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் நல வாரியத்திற்கு முழு நேரத் தலைவராக திரு.கே.பி. ராமலிங்கம் அவர்களையும்; இந்த வாரியத்தின் இணைத் தலைவராக கு.செல்லமுத்து அவர்களையும்;

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் முழு நேரத் தலைவராக திரு. பொன்குமார் அவர் களையும் நியமனம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.5.2009 அன்று ஆணையிட்டுள்ளார்.

திரு. கே.பி. ராமலிங்கம் அவர்கள் தலைமையில் இயங்கவுள்ள தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் நலவாரியம், திரு. பொன்குமார் தலைமையில் இயங்கவுள்ள தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், திரு. குமரி அனந்தன் தலைமையில் இயங்கி வரும் தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நலவாரியம் மற்றும் திரு. சேம.நாராயணன் தலைமையில் இயங்கும் தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம் ஆகிய நான்கு நல வாரியங்கள் தவிர – மற்ற வாரியங்களை ஆய்வு செய்யவும், ஆக்கப் பணியாற்றவும் ஏற்கெனவே உள்ள வாரியங்களுடன் தொடர்புடைய துறை அமைச்சர்களுடன் இணைந்து; மேற்பார்வையிட்டு, கண்காணிக்கும் ஒருங்கிணைப்பாளராக மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி அவர்களை நியமனம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.5.2009 அன்று ஆணையிட்டுள்ளார்.

❖

# தகடூரான் தந்த கனி

கலைஞர்

அணிலின் வால் போல மீசை கொண்ட மன்னவன்
அதியமான் நெடுமான் அஞ்சி யெனும் தென்னவன்
ஆதிநாளில் தமிழ் மண்ணில் முதன்முதலாய்
அருங் கரும்பைக் கொண்டு வந்து விளைச்சல் செய்தார்



அதன் இனிப்பைத் தமிழில் கண்ட அவனின் முன்னோர்
அதியர் குடிப்பிறந்ததாலே அதியமான் ஆனான்,
தகடூரைத் தலைநகராய்க் கொண்டு - அந்தத்
தமிழூரில் தலைநிமிர்ந்து ஆண்டான்.
திண்தோளில் வலிமைதனைத் தேக்கிக்
கண் அசைவில் பகைப்புலத்தைப் போக்கி
மண் மீது புகழ் நிலைக்க மார்பில்
புண் ஏந்தி வீழ்வதையே விரும்பி
அஞ்சியெனப் பெயர் பூண்ட போதும்
அஞ்சாத வரிப்புலியாய் மானமுடன் வாழ்ந்தான்
அவ்வையாம் கவியரசி அவனுக்காக
அணிமணிகள் தமிழால் செய்து
அகமாரப் பூட்டி மகிழ்ந்தாள் - அவன்
அறம் வியந்து திறம் புகழ்ந்தாள்.
'களம்' புக எண்ணுகின்ற பகைவர் அறிக – எம்
உளம் நிறை வீரன் ஒருவன் இருக்கின்றானய்யா
ஒரு நாளில் எட்டுத்தேர் செய்கின்ற தச்சன்
ஒரு திங்கள் உழைத்தமைத்த ஒரு தேர்க்காலுக்கொப்ப
உடல்வலிவும் உரமும் பெற்றோன்
அடலேறு அதியமான்; தெளிக என்றே
அவ்வை பாடிய செய்யுள் இஃதே...!

**"களம்புக ஓம்புமின் தெவ்விர் போர் எதிர்த்து**
**எம்முளும் உளன்ஒரு பொருநன் வைகல்**
**எண் தேர் செய்யும் தச்சன்**
**திங்கள் வலித்த கால்அன் னோனே"**

அவ்வீரன் அதியமான் ஒரு நாட் காலை
அடவியிற் சென்று அலைந்து திரிந்து
விலங்குகள் மீது வேல்களைப் பொழிந்து
வேட்டையை நிகழ்த்திவிரைந்து திரும்பினான்
வழியில் மலையிடைப் பிளவொன்று கண்டு
விழியினைச் செலுத்தி வியப்பாய் நோக்கினான்
தனிமையிலே நெல்லி மரமொன்றுயர்ந்து





தன் கிளையினில் சிறு இலைகளுக்கிடையே
கனியொன்றே யொன்றைத் தாங்கி நின்றது
'இனிப்பாக இருக்குமென்றும் அதனையுண்டால்
இறப்பேதும் அணுகாதென்றும் இ ஃதுண்மை'யென்றும்
தலைப்பா கைத் துறவியொருவர் புதுமையாகப் புகன்றவுடன்
இமைப் போதும் தயங்காமல் அக்கனியைப்

பறித்துக் கொண்டான்

தனைக் காக்க மன்னவனும் அக்கனியை உண்பான் என்ற
தகடூர் வீரரெல்லாம் எண்ணிக் கொண்டு
தடந்தோள் உயர்ந்திடவே தலைவன் பின் நடைபோட்டார்
மாளிகைக்கு வந்தவுடன் நெடுமானஞ்சி
மாணிக்கத் தமிழ்பாடும் அவ்வையை அழைக்கலுற்றான்
"மன்னவனே ஏன் அழைத்தாய் எனத்தெரியும்;
மாற்றானாம் தொண்டைமானிடம் எனைத்தூதாக
அனுப்பத்தானே ?"
என்று கேட்ட அவ்வை அம்மை
"சென்று வரத் தயார்தான்" என்றாள் – தூதில்
வென்று வருவதற்கு முன்னே – இதைத்
தின்று சுவைத்திடுக என வேண்டி,
நெல்லிக்கனியை நீட்டினான் வேந்தான் – நிலவில்
அல்லி மலர்வது போல் முகமலர்ந்தாள் அவ்வை!
"சுவையான கனிதான்" என்று சுவைத்துப் பார்த்து; அரசு
அவைக்கவியான அவ்வை சொன்னார்.
"அருமையாய்க் கிடைத்திட்ட இக்கனியுண்டால்
ஆயுள் நீளுமென்று அடவியில் துறவி சொன்னார்.
"அடியேனின் உயிர் அதிக நாள் இருந்தென்ன பயன் ?
அவ்வையின் ஆயுள் வளர்ந்தால் தமிழ் வளரும்
தகடூரின் பெயர் உள்ளளவும் நான் வாழ்வேன்
தமிழ் உள்ளளவும் வாழ்க அவ்வையே" என்றான்.
உண்மையை முன்கூட்டி உரைத்திட்டால்
உண்ணாமல் மறுத்திடுவாள் அவ்வையென்று
தான் வாழக் கருதாமல் தமிழ்த்தாய் வாழத்
தகடூரான் தந்தகனி நெல்லிக்கனி;

அதியமான் தமிழ் ஆர்வம் போற்றி
அவ்வை தந்த நன்றிக்கனி; இந்த செய்யுட்கனி!

**"வலம்படு வாய்வாள் ஏந்தி, ஒன்னார்
களம்படக் கடந்த கழல் தொடி தடக்கை
ஆர்கலி நறவின், அதியர் கோமான்
போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி!
பால் புரை பிறை நுதல் பொலிந்தசென்னி
நீலமணி மிடற்று ஒருவன்போல
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறுயிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே"**

(புறநானூறு – பாடல் 87,91 – அவ்வையார்)

**கலைஞரின் சங்கத்தமிழ் நூலிலிருந்து...**

## பொருள் விளக்கம்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| தெவ்விர் | = | பகைவீர் | வலம்படுவாய் வாள் | = | வெற்றி தரத் தவறாத வாள். |
| பொருநன் | = | வீரன் | ஒன்னார் | = | பகைவர். |
| வைகல் | = | ஒருநாள் | ஆர்கலிநறவு | = | ஆரவாரம் செய்கின்ற மது. |
| வலித்த | = | செய்யப்பட்ட | | | |



# வேலைவாய்ப்பினை அடிப்படையாகக் கொண்டு தொகுப்புச் சலுகைகள் வழங்க வகைசெய்யும் புதிய கொள்கை

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொழில் துறை அதிகாரிகளுடன் 31.5.2009 அன்று ஆய்வு செய்தார். தொழில் துறையின் பல்வேறு திட்டங்கள் மற்றும் செயற் குறிப்புகள் குறித்து அவருக்குத் தெரிவிக்கப்பட்டன. இக்கூட்டத்தில் நடந்த விவாதத்தின் அடிப்படையில், அவர் பின்வரும் முக்கிய இனங்களின் மீது ஆணை பிறப்பித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தொழில்கள் அமைக்க முன் வரும் நிறுவனங்களுக்கு வேலைவாய்ப்பினை அடிப்படையாகக் கொண்ட தொகுப்புச் சலுகைகள் வழங்கக் கோரும் செயற்குறிப்பினை அவர் ஏற்றுள்ளார்.



இதுவரையில், பொறுப்பேற்கப்பட்ட முதலீட்டின் அடிப்படையில்தான் தொகுப்புச் சலுகைகள் வழங்கப்பட்டு வந்துள்ளன. ஒரு முன்னோடி முயற்சியாக, வேலைவாய்ப்பின் அடிப்படையிலேயே தொகுப்புச் சலுகைகள் வழங்க இப்புதிய கொள்கை வகை செய்கிறது. இதனால், அதிக அளவில் வேலை வாய்ப்பளிக்கக்கூடிய தொழில்களை ஊக்கப்படுத்துவதோடு மாநிலத்தில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் பெரிதும் துணை புரியும்.

மேலும், ஃபோர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட், செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டல மேம்பாட்டாளர் நிறுவனம், செயிண்ட் கோபேன், டெல்பி டி.வி.எஸ். மற்றும் கங்கோத்ரி டெக்ஸ்டைல்ஸ் ஆகிய ஐந்து முதலீட்டுத் திட்டங்களுக்கு அமைப்பு முறையிலான தொகுப்புச் சலுகைகள் வழங்கும் செயற்குறிப்புகளுக்கு அவரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த 5 திட்டங்களிலும் மொத்தம் ரூ.2,450 கோடி முதலீடு செய்யப்படுவதுடன் சுமார் 17,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் உருவாக்கப் படும்.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலை ஆகியவற்றுக்கான புனரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும் செயற்குறிப்பு விவாதிக்கப் பட்டு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் இவ்விரு சர்க்கரை ஆலைகளிலும் தன்பயன் மின் உற்பத்தி ஆலை மற்றும் எத்தனாலுடன் கூடிய வடிசாலைப் பிரிவு அமைக்கப்பட்டு புனரமைக்கப்படுவதோடு கடன் பொறுப்புகள் மறு சீரமைக்கப்படும். புனரமைப்பதற்கான மொத்தச் செலவு 408 கோடி ரூபாயாகும்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.எப்.பாரூகி, இ.ஆ.ப., மற்றும் டிட்கோ, சிப்காட், டான்செம், டாமின், டி.என்.பி.எல்., டெல், டன்சால்ட், டிக் போன்ற நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் மேலாண்மை இயக்குநர்களும், சர்க்கரைத் துறை மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத் துறைத் தலைவர்களும் பங்கேற்றனர். ❖

---

# தமிழகத்தில் பன்னாட்டுத் தரத்துடன் ஏழு பாலிடெக்னிக் கல்லூரிகள்

**தொ**ழில்நுட்பக் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. ஐ.டி.ஐ., பாலிடெக்னிக் கல்லூரிகள் மூலம் உலகத் தரத்தில் தரம் வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்கப்பட வேண்டும்; அதற்காக கல்லூரிகளின் தரத்தை உயர்த்தி மாணவர்களுக்கு கல்வி கற்று தரவேண்டும்; பன்னாட்டு அளவில் போட்டி போடக்கூடிய அளவிற்குத் தொழில்நுட்பக் கல்வி அளிக்க வேண்டும் என்ற மத்திய அரசின் குறிக்கோளை மையமாகக் கொண்டு தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

அந்த அடிப்படையில் தமிழகத்திற்கு பன்னாட்டுத் தரத்துடன் 7 புதிய பாலிடெக்னிக் கல்லூரிகள் தொடங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒரு கல்லூரிக்கு ரூ.12.85 கோடி வீதம் மொத்தம் ரூ.85 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

எந்த மாவட்டங்களில் புதிய பாலிடெக்னிக் கல்லூரியை அமைப்பது, அதற்கான இடம் போன்றவற்றைத் தேர்வு செய்ய அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் கடிதம் எழுதியுள்ளது.

நவீன தொழில்நுட்பம், புதிய கருவிகள் அடிப்படை வசதிகளுடன் உலகத்தரத்துடன் இக்கல்லூரிகள் அமைய உள்ளன. ஐ.டி.ஐ.க்கு இணையாக இந்தப் புதிய பாலிடெக்னிக் கல்லூரிகள் நிறுவப்பட உள்ளன.

# நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் – 2009

**2009 மே 13 அன்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளுக்கான முடிவுகள் பின்வருமாறு : –**

## 1. திருவள்ளூர்

**பி. வேணுகோபால் (அஇஅதிமுக) வெற்றி**

| | | | |
|---|---|---|---|
| 1) | பி. வேணுகோபால் | அஇஅதிமுக | — 3,72,466 |
| 2) | எஸ். காயத்ரி | திமுக | — 3,39,299 |
| 3) | ஆர். சுரேஷ் | தேமுதிக | — 1,08,797 |
| 4) | பி. ஆனந்தன் | பிஎஸ்பி | — 10,750 |
| 5) | எம்.எஸ். சுதர்சன் | ஜேடி (யு) | — 3,699 |
| 6) | வி. இளங்கோஇன்பராஜ் | சுயே | — 922 |
| 7) | ஏ. எத்திராஜ் | சுயே | — 1,095 |
| 8) | ஏ. சம்பத் | சுயே | — 675 |
| 9) | ஏ. செல்வராஜ் | சுயே | — 764 |
| 10) | கே.எம்.நாகலிங்கம் | சுயே | — 1,018 |
| 11) | வி.பாண்டுரங்கன் | சுயே | — 866 |
| 12) | கே. ராஜன் | சுயே | — 2,143 |
| 13) | பி.வேணுகோபால் | சுயே | — 2,766 |
| 14) | எம். ஜீவரத்தினம் | சுயே | — 4,860 |

## 2. வட சென்னை

**டி.கே.எஸ். இளங்கோவன் (திமுக) வெற்றி**

| | | | |
|---|---|---|---|
| 1) | டிகேஎஸ். இளங்கோவன் | திமுக | — 2,81,055 |
| 2) | தா. பாண்டியன் | இகம்யூ | — 2,61,902 |
| 3) | வி.யுவராஜ் | தேமுதிக | — 66,375 |
| 4) | தமிழிசை சௌந்தரராஜன் | பாஜக | — 23,350 |
| 5) | ஜே.ஒ.ஆர். சாந்தாசீனி | பிஎஸ்பி | — 3,952 |
| 6) | கே. ஆனந்து | லோக் ஜனதா | — 1,442 |
| 7) | கே.பி. சதிஷ்குமார் | எம்எம்கேஎ | — 814 |
| 8) | என்.பழனிமோஸஸ் | பிகேஎம்கே | — 728 |
| 9) | மொகமது அப்துல்லா | ஆர்பிஐ(எ) | — 1,619 |
| 10) | கே.ஆறுமுகம் | சுயே | — 509 |
| 11) | ஜி. ஆனந்தராஜ் | சுயே | — 313 |
| 12) | எம். கதிரவன் | சுயே | — 502 |
| 13) | டி. கிரிராஜ் | சுயே | — 709 |
| 14) | கே. சங்கர் | சுயே | — 315 |
| 15) | சி. சதீஷ் | சுயே | — 331 |
| 16) | டி.பி. சதீஷ் | சுயே | — 1,444 |
| 17) | எம். சரவணன் | சுயே | — 1,915 |
| 18) | வி. சிவகுமார் | சுயே | — 972 |
| 19) | வி. தியாகராஜன் | சுயே | — 538 |
| 20) | தீபா | சுயே | — 1,886 |
| 21) | ஏ. நிர்மல்குமார் | சுயே | — 531 |
| 22) | வி. பாஸ்கரன் (எ) ஆவின் வி. பாஸ்கரன் | சுயே | — 3,458 |
| 23) | பி. மாரிமுத்து | சுயே | — 440 |
| 24) | டி. ரமேஷ் | சுயே | — 338 |
| 25) | ஆர். ராஜாராம் | சுயே | — 551 |
| 26) | எம். ருத்ரமூர்த்தி | சுயே | — 371 |
| 27) | சி.எச். வினோபகாந்தி | சுயே | — 375 |
| 28) | எம்.ஜீனத் உன்னிசாபேகம் | சுயே | — 528 |
| 29) | கே. ஜெயசந்திரன் | சுயே | — 2,626 |

## 3. தென் சென்னை

**சி. ராஜேந்திரன் (அஇஅதிமுக) வெற்றி**

| | | | |
|---|---|---|---|
| 1) சி. ராஜேந்திரன் | அஇஅதிமுக | — | 3,08,567 |
| 2) ஆர்.எஸ். பாரதி | திமுக | — | 2,75,632 |
| 3) வி.கோபிநாத் | தேமுதிக | — | 67,291 |
| 4) இல. கணேசன் | பிஜேபி | — | 42,925 |
| 5) எம். சத்தியசீலன் | எஸ்ஜேபி | — | 520 |
| 6) ஜே. மோகன்ராஜ் | ஜேஜே | — | 278 |
| 7) ஆர். ரவீந்திர தாஸ் | கேடிசி | — | 268 |
| 8) எஸ். ஜே. ராஜாமனிதர் | பிகேஎம்கே | — | 252 |
| 9) என்.எஸ்.வெங்கட்ராமன் | டிபிகே | — | 2,153 |
| 10) எஸ். ஜெயராமன் | எஸ்எச்எஸ் | — | 492 |
| 11) ஜி.எம். ஜோதி | பிபிஐஜெ | — | 233 |
| 12) கே. அஸ்வதாமன் | சுயே | — | 197 |
| 13) ஏ. இருதயதாஸ் | சுயே | — | 218 |
| 14) கே. இளங்கோவன் | சுயே | — | 435 |
| 15) ஜி. கார்த்திகேயன் | சுயே | — | 254 |
| 16) எம். கிரிராஜன் | சுயே | — | 1,198 |
| 17) என். கிறிஸ்துதாஸ் | சுயே | — | 804 |
| 18) வி.ஏ. குமார் | சுயே | — | 255 |
| 19) ஆர். சந்திரசேகரன் | சுயே | — | 258 |
| 20) கே. சந்திரன் | சுயே | — | 412 |
| 21) பி.டி. சண்முகசுந்தரம் | சுயே | — | 530 |
| 22) வி. சண்முகராஜ் | சுயே | — | 225 |
| 23) எஸ். சம்பத்குமார் | சுயே | — | 355 |
| 24) இ. சரத்பாபு | சுயே | — | 15,890 |
| 25) என். ஜியாயுதின் | சுயே | — | 363 |
| 26) வி.ஆர். சீனிவாசன் | சுயே | — | 207 |
| 27) ஜே. சுந்தர் | சுயே | — | 243 |
| 28) எம். சுரேஷ்குமார் | சுயே | — | 184 |
| 29) தன்மை | சுயே | — | 303 |
| 30) எம். தமிழ்செல்வன் | சுயே | — | 180 |
| 31) ஜி. தேவதாஸ் குப்பால் | சுயே | — | 257 |
| 32) எஸ். பி. பழனி | சுயே | — | 629 |
| 33) எம். பாலாகிருஷ்ணன் | சுயே | — | 597 |
| 34) வி. பாலசுப்பிரமணியன் | சுயே | — | 293 |
| 35) பி. பாலன் | சுயே | — | 270 |
| 36) ஜே. எஸ். மகாலிங்கம் | சுயே | — | 145 |
| 37) பி. மதிக்கரசு | சுயே | — | 1,779 |
| 38) சி. மணிவண்ணன் | சுயே | — | 150 |
| 39) டிராபிக் ராமசாமி | சுயே | — | 1,693 |
| 40) எல்.டி. ராஜா | சுயே | — | 118 |
| 41) வி. ராஜேந்திரன் | சுயே | — | 263 |
| 42) எஸ். வீரமணி | சுயே | — | 209 |
| 43) டி. வெங்கடேசன் | சுயே | — | 588 |

## 4. மத்திய சென்னை

**தயாநிதிமாறன் (திமுக) வெற்றி**

| | | | |
|---|---|---|---|
| 1) தயாநிதிமாறன் | திமுக | — | 2,85,783 |
| 2) எஸ்.எம்.கே.முகமது அலி ஜின்னா | அஇஅதிமுக | — | 2,52,329 |
| 3) வி.வி.ராமகிருஷ்ணன் | தேமுதிக | — | 38,959 |
| 4) எஸ். ஹைதர் அலி | எம்எம்கே | — | 13,160 |
| 5) ஏ.ஒய். யூனிஸ்கான் | பிஎஸ்பி | — | 2,108 |
| 6) ஜி. கங்காதுரை | ஜேஜே | — | 295 |
| 7) தாமஸ் டி. ஜேக்கப் | ஒய்எஸ்பி | — | 2,582 |
| 8) ஜே. நாகமணி | ஜேஎம்எம் | — | 201 |
| 9) வி. ரெங்கநாதன் | ஏபிகேஎம்எம் | — | 305 |
| 10) கே.வி. ரமணாரெட்டி | கேடிசி | — | 503 |
| 11) ராஜ்ராம்சந்த் | எஸ்எச்எஸ் | — | 613 |
| 12) எஸ். வாசு | எஸ்பி | — | 468 |
| 13) விஜயகுமார் | பிபிஐஜெ | — | 924 |
| 14) இ. விஸ்வநாதன் | எம்எம்கேஎ | — | 1,246 |
| 15) எம்.எஸ். அரசகுமார் | சுயே | — | 526 |
| 16) என். அறிவுடைநம்பி | சுயே | — | 839 |
| 17) எச். அனிஸ்உசேன் | சுயே | — | 940 |
| 18) டி. ரவிகுமார் | சுயே | — | 672 |
| 19) உதய்குமார் | சுயே | — | 383 |
| 20) ஆர்.கிரிஜாசங்கர் | சுயே | — | 844 |
| 21) பி.ஆர். கிருஷ்ணன் | சுயே | — | 283 |
| 22) எம். குணசேகரன் | சுயே | — | 232 |
| 23) எஸ். சிவகுமார் | சுயே | — | 259 |
| 24) பி. செந்தில் | சுயே | — | 225 |
| 25) டிடீக்ராஜ் | சுயே | — | 165 |
| 26) டி. தாமோதரன் | சுயே | — | 179 |
| 27) வி. பரிமளம் | சுயே | — | 169 |
| 28) வி. பிரபு | சுயே | — | 248 |
| 29) ஜி. மணி | சுயே | — | 1,914 |
| 30) இ. மாரிமுத்து | சுயே | — | 170 |
| 31) முகமது அலி | சுயே | — | 420 |
| 32) ஏ.முகமது அலி ஜின்னா | சுயே | — | 1,061 |
| 33) கே. மோகன் | சுயே | — | 422 |
| 34) எஸ். ராஜகுமார் | சுயே | — | 211 |
| 35) வி. லோகநாதன் | சுயே | — | 126 |
| 36) எஸ். வில்சன் ஃபால் | சுயே | — | 208 |
| 37) எஸ். ஸ்ரீதர் | சுயே | — | 380 |

## 5. திருப்பெரும்புதூர்

### டி.ஆர். பாலு (திமுக) வெற்றி

| | | | |
|---|---|---|---|
| 1. | டி.ஆர். பாலு | திமுக | — 3,52,641 |
| 2. | ஏ.கே. மூர்த்தி | பாமக | — 3,27,605 |
| 3. | எம். அருண்சுப்பிரமணியன் | தேமுதிக | — 84,530 |
| 4. | பி. ராஜப்பா | பி.எஸ்.பி | — 4,483 |
| 5. | பி. சுவர்ணஸ்ரீ | பிபிஐஜ | — 756 |
| 6. | தாயுமானகுரு அய்யனார் | எஐவிபி | — 376 |
| 7. | கே. பாரதி | சிபிஐ(எம்) (எல்எல்) | — 1,138 |
| 8. | மாயா ராமச்சந்திரன் | டிஎச்பிஐ | — 834 |
| 9. | டி. வரதராஜன் | எஸ்எச்எஸ் | — 753 |
| 10. | எஸ். விஜயகுமார் | எல்ஜேபி | — 352 |
| 11. | சி. ஜேம்ஸ் செல்வம் | ஜெஜெஎம்கே | — 270 |
| 12. | எல். அயோத்தி | சுயே | — 337 |
| 13. | எம். எழிலரசு | சுயே | — 451 |
| 14. | டி. கலைசெல்வன் | சுயே | — 841 |
| 15. | சி. கரிகாலன் | சுயே | — 2,304 |
| 16. | என். காட்டுராஜா | சுயே | — 1,595 |
| 17. | டி. கார்த்திகேயன் | சுயே | — 1,858 |
| 18. | எஸ். குமார் | சுயே | — 1,254 |
| 19. | ஜி. சண்முகம் | சுயே | — 3,027 |
| 20. | கே. சந்துரு | சுயே | — 440 |
| 21. | டி. சம்பத் | சுயே | — 251 |
| 22. | வி.தர்மசத்யமூர்த்தி | சுயே | — 1,348 |
| 23. | எல். துரைராஜ் | சுயே | — 2,109 |
| 24. | பி. நாகராஜன் | சுயே | — 503 |
| 25. | எஸ். பத்மநாபன் | சுயே | — 445 |
| 26. | டி. பாலு | சுயே | — 758 |
| 27. | எஸ். மணிமாறன் | சுயே | — 246 |
| 28. | கே.வி. மாதவராஜ் | சுயே | — 639 |
| 29. | மின்னல் சீனிவாசன் | சுயே | — 214 |
| 30. | எஸ். லட்சுமி | சுயே | — 492 |
| 31. | டி.என். வேல்முருகன் | சுயே | — 929 |
| 32. | ஆர். ரமேஷ் | சுயே | — 273 |

## 6. காஞ்சிபுரம்

### பி. விஸ்வநாதன் (இ.தே.காங்கிரஸ்) வெற்றி

| | | | |
|---|---|---|---|
| 1. | பி. விஸ்வநாதன் | இதேகா | — 3,30,237 |
| 2. | டாக்டர் இ. ராமகிருஷ்ணன் | அஇஅதிமுக | — 3,17,134 |
| 3. | டி. தமிழ்வேந்தன் | தேமுதிக | — 1,03,560 |
| 4. | கே. உத்திரபதி | பிஎஸ்பி | — 5,663 |
| 5) | ஏ. சிவசங்கரன் | எஐஜேஎம்கே | — 4,625 |
| 6. | கே.வி.பக்கிரி | அம்பேத்கர்ஜெஎம்எம் | — 1,615 |
| 7. | பி. ஜவஹர்லால்நேரு | எல்ஜேபி | — 696 |
| 8. | ஆர்.கே. அன்புராஜ் | சுயே | — 877 |
| 9. | எம்.வி. சத்தியவாசன் | சுயே | — 1,185 |
| 10. | டி. சிவலிங்கம் | சுயே | — 1,019 |
| 11. | ஜி. செல்வம் | சுயே | — 974 |
| 12. | எடி. தக்ஷணா மூர்த்தி | சுயே | — 761 |
| 13. | எம். தியாகராஜன் | சுயே | — 862 |
| 14. | இ. மகேஷ்குமார் | சுயே | — 2,181 |
| 15. | கே. மணிமாறன் | சுயே | — 955 |
| 16. | கே. மதியழகன் | சுயே | — 5,161 |
| 17. | மின்னல் சீனிவாசன் எம்.ஏ.எம்.பில் | சுயே | — 3,894 |
| 18. | பி. முருகேசன் | சுயே | — 754 |
| 19. | ஆர்.வி. ரூபாதேவி | சுயே | — 2,952 |
| 20. | பி.எஸ். ஜெயகுமார் | சுயே | — 1,805 |

## 7. அரக்கோணம்

### ஜெகத்ரட்சகன் (திமுக) வெற்றி

| | | | |
|---|---|---|---|
| 1 | ஜெகத்ரட்சகன் | திமுக | — 4,16,243 |
| 2 | ஆர். வேலு | பாமக | — 3,06,160 |
| 3 | எஸ். சங்கர் | தேமுதிக | — 81,814 |
| 4 | டி. பஞ்சாட்சரம் | சுயே | — 7,088 |
| 5 | மேரிஜான் | பி.எஸ்.பி | — 6,687 |
| 6 | எஸ்.சி. அண்ணாமலை | எஐவிபி | — 4,315 |
| 7 | ஐசக் ஜெப குமார் | எஜஜேஎம்கே | — 2,798 |
| 8 | கே. சண்முகம் | ஜேடி (யு) | — 1,537 |
| 9 | கே. சீனிவாசன் | எல்ஜேபி | — 776 |
| 10 | டபிள்யு. பி. பழனி | பிஎன்கே டிஏவிஎடி | — 6,036 |
| 11 | வெங்கடேசனார் | எஸ்எம்கே | — 632 |
| 12 | கே. மணவாளன் | எஸ்.பி. | — 984 |
| 13 | என். சுதா | சுயே | — 1,884 |
| 14 | ஜி. துளசி | சுயே | — 1,090 |
| 15 | இ. பாண்டியன் | சுயே | — 2,306 |
| 16 | எம். முத்தியாலு | சுயே | — 4121 |
| 17 | என்.டி. மாத்யூ | சுயே | — 1,256 |
| 18 | ஜே. ஜானகிராமன் | சுயே | — 4,026 |
| 19 | ஜே. ஜெகதீஸ்வரன் | சுயே | — 3,779 |
| 20 | எஸ். ஜெகன் | சுயே | — 1,617 |

## :. வேலூர்

### அப்துல்ரகுமான் (திமுக) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அப்துல்ரகுமான் | திமுக | — | 3,60,474 |
| 2. | எல்.கே.எம்.பி. வாசு | அஇஅதிமுக | — | 2,53,081 |
| 3. | சௌகத் செரீப் | தேமுதிக | — | 62,696 |
| 4. | ஏ.கே. ராஜேந்திரன் | பாஜக | — | 11,184 |
| 5. | மன்சூர் அகமது | பிஎஸ்பி | — | 2,818 |
| 6. | பி. ராஜன் பாபு | எம்எம்கேஎ | — | 2,352 |
| 7. | இ. ஏ. ஏகாம்பரம் | என்எம்கே | — | 1,114 |
| 8. | பி.வி. கோவிந்தராஜி | எஸ்பி | — | 1,161 |
| 9. | தாகீர் அகமது | எல்ஜெபி | — | 854 |
| 10. | ஆர். நாராயணன் | எஜவிபி | — | 521 |
| 11. | கே. முனியப்பன் | எடிஎஸ்எம்கே | — | 560 |
| 12. | அப்துல் மஜீத் ஒசி | சுயே | — | 1,312 |
| 13. | டி. அறிவுடை நம்பி | சுயே | — | 1,059 |
| 14. | ஆர். ஈஸ்வரன் | சுயே | — | 1,018 |
| 15. | டி. குபேந்திரன் | சுயே | — | 5,143 |
| 16. | சி. கோபாலகிருஷ்ணன் | சுயே | — | 4,822 |
| 17. | சி. சந்திரன் | சுயே | — | 6,046 |
| 18. | பி. சுரேஷ்குமார் | சுயே | — | 508 |
| 19. | டி. தண்டபானி | சுயே | — | 621 |
| 20. | பி. நடராஜன் | சுயே | — | 1,612 |
| 21. | ஆர். டி. பழனி | சுயே | — | 974 |
| 22. | டி. பெருமாள் | சுயே | — | 542 |
| 23. | ராமன் | சுயே | — | 923 |
| 24. | விஜயகுமார் | சுயே | — | 2,134 |

## 9. கிருஷ்ணகிரி

### இ.ஜி. சுகவனம் (திமுக) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இ.ஜி. சுகவனம் | திமுக | — | 3,35,977 |
| 2. | கே. நன்சகவுடு | அஇஅதிமுக | — | 2,59,379 |
| 3. | டி. அன்பரசன் | தேமுதிக | — | 97,546 |
| 4. | ஜி. பாலகிருஷ்ணன் | பிஜேபி | — | 20,486 |
| 5. | வி.வி. மூர்த்தி | பிஎஸ்பி | — | 2,896 |
| 6. | பி. சக்திவேல் | எல்ஜேபி | — | 1,633 |
| 7. | எம். செல்வராஜ் | கேஎன்எம்கே | — | 4,044 |
| 8. | எம். குமரேசன் | சுயே | — | 1,248 |
| 9. | கே. கவுரப்பா | சுயே | — | 1,075 |
| 10. | வி. கோவிந்தராஜன் | சுயே | — | 1,885 |
| 11. | எஸ். சங்கர் | சுயே | — | 3,766 |
| 12. | பி.எஸ். சந்திரன் | சுயே | — | 6,396 |
| 13. | மீனா | சுயே | — | 1,473 |
| 14. | ராமசுவாமி | சுயே | — | 2,559 |
| 15. | ஜி. லதா | சுயே | — | 3,763 |
| 16. | கே. வெங்கடேசன் | சுயே | — | 8,452 |

## 10. தருமபுரி

### ஆர். தாமரைச்செல்வன் (திமுக) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஆர். தாமரைச்செல்வன் | திமுக | — | 3,65,812 |
| 2. | டாக்டர். ஆர்.செந்தில் | பாமக | — | 2,29,870 |
| 3. | வி. இளங்கோவன் | தேமுதிக | — | 1,03,494 |
| 4. | ஜி. அசோகன் | கேஎன்எம்கே | — | 15,333 |
| 5. | வி. புருஷோத்தமன் | பிஎஸ்பி | — | 5,445 |
| 6. | கே. அண்ணாதுரை | யுஎம்கே | — | 2,434 |
| 7. | டி. குணசேகரன் | மமகேஏ | — | 1,726 |
| 8. | பி. அறிவழகன் | சுயே | — | 1,285 |
| 9. | கே. ஆனந்தகுமார் | சுயே | — | 4,589 |
| 10. | எஸ். கருப்பசாமி | சுயே | — | 1,293 |
| 11. | எஸ். கோவிந்தராஜ் | சுயே | — | 1,944 |
| 12. | ஆர். சம்பத்குமார் | சுயே | — | 3,092 |
| 13. | எஸ். சரவணன் | சுயே | — | 1,553 |
| 14. | கே. சிவன் | சுயே | — | 2,411 |
| 15. | டாக்டர். கே. பத்மராஜன் | சுயே | — | 5,571 |
| 16. | ஆர். மணி | சுயே | — | 9,982 |
| 17. | ஜி. முருகன் | சுயே | — | 4,153 |
| 18. | ஆர். ராதாகிருஷ்ணன் | சுயே | — | 4,004 |
| 19. | ஏ. ராஜா | சுயே | — | 10,561 |
| 20. | பி. வேல்முருகன் | சுயே | — | 898 |
| 21. | ஸ்ரீராமச்சந்திரன் | சுயே | — | 2,652 |

## 11. திருவண்ணாமலை

### டி. வேணுகோபால் (திமுக) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | டி. வேணுகோபால் | திமுக | — | 4,36,866 |
| 2, | குரு (எ) ஜே. குருநாதன் | பாமக | — | 2,88,566 |
| 3. | எஸ். மணிகன்டன் | தேமுதிக | — | 56,960 |
| 4. | கே.எஸ். அப்ரோஸ் அஸ்னா | எல்ஜேபி | — | 5,798 |
| 5. | பி. கோவிந்தசாமி | பசக | — | 4,731 |
| 6. | பி. செல்வராஜ் | எஸ்பி | — | 1,523. |
| 7. | எஸ்.ஏ. ராஜாராம் | பிஎன்கே | — | 3,026 |
| 8. | ஏ.ஏ. ஆறுமுகம் | சுயே | — | 753 |
| 9. | ஆர். ரவி | சுயே | — | 5,432 |
| 10. | பி. இர்ஷாத் | சுயே | — | 816 |
| 11. | எம்.எம். குமார் | சுயே | — | 747 |
| 12. | சி. குரு | சுயே | — | 2,903 |
| 13. | பி. குருசாமி | சுயே | — | 1,426 |
| 14. | குரு (எ) எஸ். குருமூர்த்தி | சுயே | — | 4,927 |
| 15. | ஏ. சண்முகராஜன் | சுயே | — | 1,424 |
| 16. | எம். சண்முகவேல் | சுயே | — | 5,126 |
| 17. | எ. சம்பத் | சுயே | — | 4,575 |
| 18. | பி. சிங்காரவேலன் | சுயே | — | 808 |
| 19. | என். சிவாதேவன் | சுயே | — | 3,056 |
| 20. | எம். செந்தில் | சுயே | — | 1,836 |
| 21. | எ. செல்வம் | சுயே | — | 371 |
| 22. | ஜே. செல்வராஜு | சுயே | — | 490 |
| 23. | எஸ். தயாநிதி | சுயே | — | 633 |
| 24. | ஆர். நாகமலை | சுயே | — | 382 |
| 25. | எஸ். பாலசுந்தர் | சுயே | — | 467 |
| 26. | பி. மணிகண்டன் | சுயே | — | 558 |
| 27. | எஸ். முருகன் | சுயே | — | 929 |
| 28. | எ. ரவீந்திரன் | சுயே | — | 2,480 |
| 29. | எஸ். ஆர். வேணுகோபால் | சுயே | — | 826 |
| 30. | எஸ். ஹரிகிருஷ்ணன் | சுயே | — | 2,110 |

## 12. ஆரணி

### எம். கிருஷ்ணசாமி (இ.தே.காங்கிரஸ்) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எம். கிருஷ்ணசாமி | இ.தே.கா | — | 3,96,728 |
| 2. | என். சுப்பிரமணியன் | அ.இ.அதிமுக | -- | 2,89,898 |
| 3. | ஆர் ஏ. மோகனம் | தேமுதிக | — | 1,05,729 |
| 4. | எம். வேலாயுதம் | சுயே | — | 14,919 |
| 5. | ஏ. சங்கர் | பிஎஸ்பி | — | 9,700 |
| 6. | டிவி. அரிராஜ் | எஸ்பி | — | 5,178 |
| 7. | கே. சரவணகுமார் | பிஎன்கே | — | 6,022 |
| 8. | எஸ். சண்முகம் | சுயே | — | 1,793 |
| 9. | ஜி. சுப்பிரமணி | சுயே | — | 1,118 |
| 10. | பி. சுப்பிரமணி | சுயே | — | 1,163 |
| 11. | எம். துரைராஜ் | சுயே | — | 1,252 |
| 12. | வி. முருகன் | சுயே | — | 2,770 |
| 13. | ஜி. லோகேஷ் | சுயே | — | 4,934 |

## 13. விழுப்புரம்

### எம். ஆனந்தன் (அஇஅதிமுக) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எம். ஆனந்தன் | அஇஅதிமுக | — | 3,06,826 |
| 2. | கே. சுவாமிதுரை | விசிக | — | 3,04,029 |
| 3. | பி.எம். கணபதி | தேமுதிக | — | 1,27,476 |
| 4. | எம். குமார் | சுயே | — | 14,770 |
| 5. | எஸ். பொய்யாது | பிஎஸ்பி | — | 4,382 |
| 6. | ஜி. தேவராஜ் | எல்ஜேபி | — | 3,317 |
| 7. | ஆர். பஞ்சநாதன் | ஜெஎம்எம் | — | 1,607 |
| 8. | எஸ்.எஸ். வெங்கடேசன் | எஜவிபி | — | 816 |
| 9. | எம்.வெங்கடேசன் | சிபிஐ(எம்எல்) (எல்) | — | 2,672 |
| 10. | வி. அன்பழகன் | சுயே | — | 2,368 |
| 11. | பி. ஆனந்தன் | சுயே | — | 1,212 |
| 12. | எம். சந்திரலேகா | சுயே | — | 3,053 |
| 13. | எம். சாமிதுரை | சுயே | — | 4,773 |
| 14. | எம். செட்டி | சுயே | — | 2,635 |
| 15. | ஆர். மாசிலாமணி | சுயே | — | 1,234 |
| 16. | ஏ. முருகவேல் | சுயே | — | 7,522 |
| 17. | கே. ரமேஷ் | சுயே | — | 3,906 |
| 18. | ஆர். லட்சுமணன் | சுயே | — | 825 |
| 19. | எஸ்.ஏ. விஸ்வநாதன் | சுயே | — | 2,991 |

## 14. கள்ளக்குறிச்சி

### ஆதி சங்கர் (திமுக) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஆதி சங்கர் | திமுக | — | 3,63,401 |
| 2. | கே. தனராஜு | பாமக | — | 2,54,762 |
| 3. | எல்.கே. சுதிஷ் | தேமுதிக | — | 1,32,126 |
| 4. | எஸ். ரமேஷ் | கேஎன்எம்கே | — | 17,816 |
| 5. | அருண் கென்னடியா | சுயே | — | 13,209 |
| 6. | கே. செந்தில்குமார் | பிஎஸ்பி | — | 6,028 |
| 7. | சி. ஆனந்ததாஸ் | எல்ஜேபி | — | 3,411 |
| 8. | கேசவன் அண்ணா | ஜெஎம்எம் | — | 3,411 |
| 9. | கே.எம்.கோவிந்தராஜன் | எஜவிபி | — | 2,081 |
| 10. | ஜி.இனியதயாளன் | சுயே | — | 1,530 |
| 11. | கே. கணேசன் | சுயே | — | 1,170 |
| 12. | ஏ. சதிஷ் | சுயே | — | 3,100 |
| 13. | எஸ். சதிஷ்பாபு | சுயே | — | 7,127 |
| 14. | ஜி. சிவராமன் | சுயே | — | 7,455 |
| 15. | கே. செல்வம் | சுயே | — | 1,785 |
| 16. | ஜே. செல்வராஜீ | சுயே | — | 7,009 |
| 17. | டி. தனராஜ் | சுயே | — | 5,786 |
| 18. | எம். திணேஷ் | சுயே | — | 760 |
| 19. | சி. நல்லதம்பி | சுயே | — | 3,464 |
| 20. | ஏ. நவரத்தினம் | சுயே | — | 836 |
| 21. | எம்.பி. மன்னன் | சுயே | — | 659 |
| 22. | வி. மாணிக்கம் | சுயே | — | 1,626 |
| 23. | ஆர். யுவராஜ் | சுயே | — | 1,155 |
| 24. | பி.எம். ராமஜெயம் | சுயே | — | 619 |
| 25. | சி. ராஜமாணிக்கம் | சுயே | — | 1,620 |
| 26. | டி. ராஜேந்திரன் | சுயே | — | 1,195 |
| 27. | எம். ராஜேந்திரன் | சுயே | — | 1,824 |
| 28. | வி. வாசு | சுயே | — | 3,174 |
| 29. | டி. விஜயராஜேந்தர் | சுயே | — | 8,209 |

## 15. சேலம்

### செ. செம்மலை (அஇஅதிமுக) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | செ. செம்மலை | அஇஅதிமுக | — | 3,80,460 |
| 2 | கே.வி. தங்கபாலு | இதேகா | — | 3,33,969 |
| 3 | அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் | தேமுதிக | — | 1,20,325 |
| 4 | சி. செல்லதுரை | சுயே | — | 23,056 |
| 5 | ஆர். பாலசுப்பிரமணி | பிஎஸ்பி | — | 4,858 |
| 6 | எம். அசோக் சாம்ராஜ் | கேஎன்எம்கே | — | 3,642 |
| 7 | எம். அண்ணாதுரை | எஜவிபி | — | 2,041 |
| 8 | ஏ. ஆந்திராபிரகாஷ் | பிபிஐஇ | — | 1,713 |
| 9 | எஸ். கணேஷ் எம்.ஏ., | எஜடிசி | — | 755 |
| 10 | எம். கிருஷ்ணன் | சுயே | — | 775 |
| 11 | கே.எஸ். கோவணம் தங்கவேல் | சுயே | — | 854 |
| 12 | சி. கௌசல்யா | சுயே | — | 1,059 |
| 13 | ஜி. சந்திரசேகரன் | சுயே | — | 658 |
| 14 | என். சின்னன் | சுயே | — | 1,297 |
| 15 | என்.பி. தாமோதரன் | சுயே | — | 3,111 |
| 16 | கே. நந்தகோபால் | சுயே | — | 4,451 |
| 17 | பொ. நல்லதம்பி | சுயே | — | 4,441 |
| 18 | டி. பெரியசாமி | சுயே | — | 3,010 |
| 19 | வி. மகேஸ்வரன் | சுயே | — | 658 |
| 20 | பி. முத்துசாமி | சுயே | — | 1,026 |
| 21 | ஏ. முனியப்பன் | சுயே | — | 614 |
| 22 | சிடி. ஜெயவேணுகோபால் | சுயே | — | 949 |
| 23 | எம். ஏ. ஷாஜாகான் | சுயே | — | 1,832 |

## 16. நாமக்கல்

### எஸ். காந்திசெல்வன் (திமுக) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | எஸ். காந்திசெல்வன் | திமுக | -- | 3,71,476 |
| 2 | வி. வைரம் தமிழரசி | அஇஅதிமுக | — | 2,69,045 |
| 3 | என். மகேஸ்வரன் | தேமுதிக | — | 79,420 |
| 4 | ஆர். தேவராசன் | கேஎன்எம்கே | — | 52,433 |
| 5 | கே. சுரேஷ்காந்தி | பாஜக | — | 7,939 |
| 6 | டி.ஏ. ஹரிகர சிவம் | பிஎஸ்பி | — | 3,487 |
| 7 | கே. செல்வராஜ் | எஸ்பி | — | 1,239 |
| 8 | வி. லிங்கப்பன் | யுஎம்கே | — | 6,907 |
| 9 | பி. கார்த்திகேயன் | சுயே | — | 839 |
| 10 | குமார் | சுயே | — | 1,241 |
| 11 | எஸ். சுப்ரமணி | சுயே | — | 1,059 |
| 12 | ஆர்.பி. சுப்ரமணியம் | சுயே | — | 1,284 |
| 13 | பி. செங்கோடன் | சுயே | — | 2,489 |
| 14 | எஸ். தங்கவேல் | சுயே | — | 2,549 |
| 15 | எம். தர்மலிங்கம் | சுயே | — | 1,503 |
| 16 | யு. தனியரசு | சுயே | — | 24,230 |
| 17 | ஏ.என். நாவல்மணி | சுயே | — | 4,311 |
| 18 | எஸ். பன்னீர்செல்வம் | சுயே | — | 799 |
| 19 | என். மதியழகன் | சுயே | — | 2,292 |
| 20 | வி. முரளி | சுயே | — | 745 |
| 21 | ஆர். யோகராஜ் | சுயே | — | 3,279 |
| 22 | ஏ. ரவி | சுயே | — | 786 |
| 23 | ஆர். ரவி | சுயே | — | 1,755 |
| 24 | என். ராசாமி | சுயே | — | 1,841 |
| 25 | கே.எஸ். விவேகானந்தம் | சுயே | — | 2,296 |

## 17. ஈரோடு

**அ. கணேசமூர்த்தி (மதிமுக) வெற்றி**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ. கணேசமூர்த்தி | மதிமுக | — 2,84,148 |
| 2 | ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் | இதேகா | — 2,34,812 |
| 3 | சி. பாலசுப்பிரமணியம் | கேஎன்எம்கே | — 1,06,604 |
| 4 | கே.ஜி. முத்து வெங்கடேஸ்வரன் | தேமுதிக | — 91,008 |
| 5 | சிவகுமாரி | பிஎஸ்பி | — 3,980 |
| 6 | என்.பி. பழனிசாமி | பாஜக | — 8,429 |
| 7 | எம். தேவி | எல்ஜேபி | — 1,446 |
| 8 | எம். ரவிச்சந்திரன் | சுயே | — 1,659 |
| 9 | கே.கே.எஸ். இளங்கோவன் | சுயே | — 1,297 |
| 10 | ஏ. கதிர்வேல் | சுயே | — 1,889 |
| 11 | எம். கிறிஸ்துராஜ் | சுயே | — 2,866 |
| 12 | ஆர். குப்புசாமி | சுயே | — 1,146 |
| 13 | கே.எஸ். கோவணம் தங்கவேல் | சுயே | — 1,055 |
| 14 | பி. கோவிந்தசாமி | சுயே | — 2,037 |
| 15 | என். சண்முகசுந்தரம் | சுயே | — 1,842 |
| 16 | பி.என். சண்முகம் | சுயே | — 3,749 |
| 17 | எஸ். சிவசங்கர் | சுயே | — 6,802 |
| 18 | இ.ஆர். சுகுமார் | சுயே | — 2,808 |
| 19 | கே. சுப்பிரமணியம் | சுயே | — 1,388 |
| 20 | எம். செந்தில்ராஜா | சுயே | — 720 |
| 21 | எஸ். பெருமாள் | சுயே | — 1024 |
| 22 | வி. மனோகரன் | சுயே | — 1156 |
| 23 | ஆர். மின்னல் முருகேஷ் | சுயே | — 805 |
| 24 | எஸ். விமலாதேவி | சுயே | — 1413 |
| 25 | டி. ஜோ டேவிட் | சுயே | — 2917 |

## 1:. திருப்பூர்

**சி. சிவசாமி (அஇஅதிமுக) வெற்றி**

| | | | |
|---|---|---|---|
| 1. | சி. சிவசாமி | அஇஅதிமுக | — 2,95,731 |
| 2 | எஸ்.கே.கார்வேந்தன் | இதேகா | — 2,10,385 |
| 3. | கே. பாலசுப்பிரமணியன் | கேஎன்எம்கே | — 95,299 |
| 4. | என். திணேஷ்குமார் | தேமுதிக | — 86,933 |
| 5. | எம். சிவகுமார் | பாஜக | — 11,466 |
| 6. | என். சிவகுமார் | யுஎம்கே | — 3,852 |
| 7. | எம். தங்கவேல் | எல்ஜேபி | — 1,533 |
| 8. | சி. கணேஷ்குமார் | சுயே | — 1,613 |
| 9. | ஐ. கருணாகரன் | சுயே | — 941 |
| 10 | எ.எம். கார்த்திகேயன் | சுயே | — 3,726 |
| 11 | எஸ். செல்வராஜ் | சுயே | — 1,437 |
| 12 | எ.டோமினிக் பாபு | சுயே | — 1,674 |
| 13 | பாண்டியன் ஆர். (எ) கலைமகள் பாண்டியன் | சுயே | — 10,356 |
| 14 | பி. பாலசுப்பிரமணியக் | சுயே | — 2,393 |
| 15 | பி. மலர்விழி | சுயே | — 1,171 |

## 19. நீலகிரி

**ஆ. ராசா (திமுக) வெற்றி**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆ. ராசா | திமுக | — 3,16,802 |
| 2 | சி. கிருஷ்ணன் | மதிமுக | — 2,30,781 |
| 3 | எஸ். செல்வராஜ் | தேமுதிக | — 76,610 |
| 4. | எஸ். பத்ரையன் | கேஎன்எம்கே | — 32,779 |
| 5 | எஸ். குருமூர்த்தி | பாஜக | — 18,690 |
| 6 | எம். கிருஷ்ணன் | பிஎஸ்பி | — 3,600 |
| 7 | எம். விஜயராஜ் | ஆர்பிஐ(எ) | — 1,355 |
| 8 | பி. ஆறுமுகம் | சுயே | — 1,244 |
| 9 | பி. சிவராஜ் | சுயே | — 1,204 |
| 10 | சி. சுஜித் குமார் | சுயே | — 1,285 |
| 11 | கே. செல்வம் | சுயே | — 1,261 |
| 12 | ஆர். தங்கபாண்டியன் | சுயே | — 3,294 |
| 13 | ஜி. நாகராஜு | சுயே | — 8,821 |
| 14 | சி. வேல்முருகன் | சுயே | — 11,979 |

## 20. கோயம்புத்தூர்

**பி.ஆர். நடராஜன் (இ.கம்யூ(மா) வெற்றி**

| | | | |
|---|---|---|---|
| 1 | பி.ஆர். நடராஜன் | இ.கம்யூ(மா) | — 2,93,165 |
| 2 | ஆர். பிரபு | இதேகா | — 2,54,501 |
| 3 | இ.ஆர். ஈஸ்வரன் | கேஎன்எம்கே | — 1,28,070 |
| 4 | ஆர். பாண்டியன் | தேமுதிக | — 73,188 |
| 5 | கே.ராமசுப்பிரமணியன் | பி.எஸ்.பி | — 2,937 |
| 6 | ஜி.கே.எஸ். செல்வகுமார் | பாஜக | — 37,909 |
| 7 | பி.கதிர்மணி | எஸ்பி | — 1,396 |
| 8 | எம். செல்வம் | எஸ்எச்எஸ் | — 2,007 |
| 9 | எஸ்.கே. ராஜன் | பிபிஐஜ | — 2,340 |
| 10 | எஸ். ஸ்டீபன் கணேசன் | ஏஐஜேஎம்கே | — 859 |
| 11 | கே.வி. அருணாச்சலம் | சுயே | — 1,237 |
| 12 | ஜி. ஈஸ்வரன் | சுயே | — 1,677 |
| 13 | சி. கதிரேசன் | சுயே | — 1,333 |
| 14 | வி. சிவராஜ் | சுயே | — 1,747 |
| 15 | எல். நடராஜன் | சுயே | — 913 |
| 16 | எ. நூர்முகமது | சுயே | — 4,172 |
| 17 | ஜே. பிரேம்ஆனந்த் | சுயே | — 3,872 |
| 18 | என். மார்கண்டன் | சுயே | — 1,274 |
| 19 | எம். முருகன் | சுயே | — 3,424 |
| 20 | கே. முருகேசன் | சுயே | — 1,690 |
| 21 | பி.இராமசாமி | சுயே | — 1,833 |
| 22 | என். ராஜப்பன் | சுயே | — 1,088 |
| 23 | ராஜ்கிரன் | சுயே | — 1,069 |
| 24 | சி. விஜயகுமார் | சுயே | — 907 |
| 25 | எ. வெங்கடாச்சலம் | சுயே | — 1,439 |

## 21. பொள்ளாச்சி

### கே. சுகுமார் (அஇதிமுக) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | கே. சுகுமார் | அஇதிமுக | — | 3,05,935 |
| 2 | கே. சண்முகசுந்தரம் | திமுக | — | 2,59,910 |
| 3 | பெஸ்ட். எஸ். ராமசாமி | கேஎன்எம்கே | — | 1,03,004 |
| 4 | கே.பி.தங்கவேல் | தேமுதிக | — | 38,824 |
| 5 | வி.எஸ். பாபா ரமேஷ் | பாஜக | — | 16,815 |
| 6 | டி. மூர்த்தி | பிஎஸ்பி | — | 1,318 |
| 7 | இ. உம்மர் | எம்எம்எகே | — | 13,933 |
| 8 | எஸ். கிருஷ்ணகுமார் | டிடிகே | — | 1,929 |
| 9 | பி. சுரேஷ் | எஸ்பி | — | 992 |
| 10 | எஸ்.டி. ரமேஜாபேகம் | எஸ்எபி | — | 1,620 |
| 11 | வி.வேல்முருகன் | எஜவிபி | — | 1,330 |
| 12 | கே.எஸ். அப்பாஸ் | சுயே | — | 1,406 |
| 13 | கே. சண்முகசுந்தரம் | சுயே | — | 1,693 |
| 14 | பி.சண்முகசுந்தரம் | சுயே | — | 1,132 |
| 15 | ஆர். சாந்தசிவமூர்த்தி | சுயே | — | 3,735 |
| 16 | பி. சுகுமார் | சுயே | — | 5,660 |
| 17 | எ. நூர்முகமது | சுயே | — | 4,361 |
| 18 | எம். ராமசாமி | சுயே | — | 2,891 |
| 19 | பி.எம். ராமமூர்த்தி | சுயே | — | 1,956 |
| 20 | பி. ராஜன் | சுயே | — | 565 |
| 21 | எம். ராஜேந்திரன் | சுயே | — | 1,001 |
| 22 | ஆர். வெங்கடேஷ் | சுயே | — | 1,469 |

## 22. திண்டுக்கல்

### என். எஸ்.வி. சித்தன் (இ.தே.காங்கிரஸ்) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | என். எஸ்.வி. சித்தன் | இ.தே.காங்கிரஸ் | -- | 3,61,545 |
| 2 | பி. பாலசுப்பிரமணி | அஇஅதிமுக | — | 3,07,198 |
| 3 | பி. முத்துவேல்ராஜ் | தேமுதிக | — | 1,00,788 |
| 4 | எம். சீனிவாசபாபு | பிஎஸ்பி | — | 6,960 |
| 5 | கே.எம். செல்லமுத்து | கேஎன்எம்கே | — | 6411 |
| 6 | ஐ. செல்வராஜ் | எஜஜேஎம்கே | — | 1,245 |
| 7 | எஸ். டெய்ஸி ராணி | ஆர்கேஎஸ்பி | — | 1,399 |
| 8 | வி. லோகரநாதன் | எஸ்பி | — | 1,278 |
| 9 | பி. கருப்பசாமி | சுயே | — | 734 |
| 10 | என். சதாசிவம் | சுயே | — | 749 |
| 11 | ஆர். சுப்பிரமணியன் | சுயே | — | 880 |
| 12 | ஆர். தங்கபாண்டியன் | சுயே | — | 1,148 |
| 13 | கே. தனசீலி | சுயே | — | 3,697 |
| 14 | கே. துரை | சுயே | -- | 6,063 |
| 15 | எஸ். மகாமுனி | சுயே | — | 1,350 |
| 16 | ஜி. மணிண்ட பிரபு | சுயே | — | 5,331 |
| 17 | கே.எ. மோதிலால் | சுயே | — | 6,706 |
| 18 | பி. ராமாராஜ் | சுயே | — | 2,812 |
| 19 | எஸ்.ஷேக் அயுப் கான் | சுயே | — | 4,264 |

## 23. கரூர்

### மு. தம்பிதுரை (அஇஅதிமுக) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | மு. தம்பிதுரை | அஇஅதிமுக | — | 3,80,542 |
| 2 | கே.சி. பழனிச்சாமி | திமுக | — | 3,33,288 |
| 3 | ஆர். ராமநாதன் | தேமுதிக | — | 51,196 |
| 4 | ஆர். நடராஜன் | கேஎன்எம்கே | — | 14,269 |
| 5 | ஆர்.தர்மலிங்கம் | பிஎஸ்பி | — | 5,413 |
| 6 | பி. பிராபகரன் | எல்ஜேபி | — | 1,100 |
| 7 | எஸ். லோகநாதன் | எஸ்எபி | — | 662 |
| 8 | வி.எம். அண்ணாதுரை | சுயே | — | 355 |
| 9 | எம். அமல்ராஜ் | சுயே | — | 398 |
| 10 | ஜி. அருண் | சுயே | — | 581 |
| 11 | ஆர். அருள்ராஜ்குமார் | சுயே | — | 465 |
| 12 | எ. இன்னாசி | சுயே | — | 507 |
| 13 | டி. கனகராஜ் | சுயே | — | 831 |
| 14 | டி. கார்வேந்தன் | சுயே | — | 5,553 |
| 15 | ஆர். கிருஷ்ணன் | சுயே | — | 1,502 |
| 16 | கே. சங்கர் | சுயே | — | 6,519 |
| 17 | எம். சண்முகம் | சுயே | — | 2,592 |
| 18 | எம். சர்புதின் | சுயே | — | 718 |
| 19 | பி. சிவசாமி | சுயே | — | 1,566 |
| 20 | எல். சீனிவாசன் | சுயே | — | 472 |
| 21 | என். செந்தில்குமார் | சுயே | — | 295 |
| 22 | எல். கே. செல்வகுமார் | சுயே | — | 406 |
| 23 | கே. செல்வராஜ் | சுயே | — | 413 |
| 24 | பி. தானியா . | சுயே | — | 1,025 |
| 25 | வி. நாச்சிமுத்து | சுயே | — | 612 |
| 26 | எம். பழனிசாமி | சுயே | — | 479 |
| 27 | எ. பாண்டியன் | சுயே | — | 479 |
| 28 | பி.கே. மனவன் | சுயே | — | 1,598 |
| 29 | எம். மணிகண்டன் | சுயே | — | 617 |
| 30 | எஸ். மணிவண்ணன் | சுயே | — | 937 |
| 31 | வி. மருதைவீரன் | சுயே | — | 2,132 |
| 32 | ஜி. முத்துக்குமார் | சுயே | — | 2,443 |
| 33 | எம். யோகேந்திரன் | சுயே | — | 1,431 |
| 34 | ஆர். ராமமூர்த்தி | சுயே | — | 1,235 |
| 35 | டி. வீரமணி | சுயே | — | 666 |
| 36 | அழ. வெங்கடசாலம் சிவா | சுயே | — | 411 |
| 37 | ஆர். வெற்றிவேல் | சுயே | — | 222 |
| 38 | டி.வேணுகோபால் | சுயே | — | 872 |

## 24. திருச்சிராப்பள்ளி

**பி. குமார் (அஇஅதிமுக) வெற்றி**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பி. குமார் | அஇஅதிமுக | — | 2,98,710 |
| 2 | சாருபாலா ஆர். தொண்டைமான் | இதேகா | — | 2,94,375 |
| 3 | எ.எம்.ஜி. விஜயகுமார் | தேமுதிக | — | 61,742 |
| 4 | லலிதா ஆர். குமாரமங்கலம் | பாஜக | — | 30,329 |
| 5 | என். கல்யாணசுந்தரன் | பிஎஸ்பி | — | 4,897 |
| 6 | பி. ஆசைதம்பி | சிபிஐஎம்(எல்) | — | 2,401 |
| 7 | பி. ரவி | மதிமுக | — | 5,016 |
| 8 | கே. குணசேகரன் | ஏஜவிபி | — | 730 |
| 9 | எம். நீலமேகம் | சவா | — | 872 |
| 10 | பி. பதிநாதன் | சிடிஎப் | — | 1,300 |
| 11 | ஆர். ராகவன் | ஹசுஷழஆ | — | 937 |
| 12 | வி. ஆனந்தராஜா | சுயே | — | 1,184 |
| 13 | எச்.உருமையா | சுயே | — | 588 |
| 14 | வி. சரவணன் | சுயே | — | 1,065 |
| 15 | இ. சாமுவேல் சுவாமிதாஸ் மனோஜ்குமார் | சுயே | — | 1,211 |
| 16 | எ.சின்னதுரை | சுயே | — | 2,110 |
| 17 | எம். திருமாவளவன் | சுயே | — | 1,018 |
| 18 | எ.நாகேந்திரன் | சுயே | — | 1,814 |
| 19 | பி. பழனி | சுயே | — | 1,356 |
| 20 | எம். பேபி கமிதா பானு | சுயே | — | 532 |
| 21 | எ. மன்சூர் அலிகான் | சுயே | — | 2,532 |
| 22 | எ. முகமது இக்பால் | சுயே | — | 1,512 |
| 23 | பி. வேல்மணி | சுயே | — | 638 |
| 24 | எ. ஜாபருன்னிசா | சுயே | — | 133 |

## 25. பெரம்பலூர்

**து. நெப்போலியன் (திமுக) வெற்றி**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | து. நெப்போலியன் | திமுக | — | 3,98,742 |
| 2 | கே.கே.பாலசுப்ரமணியன் | அஇஅதிமுக | — | 3,21,138 |
| 3 | துரை. காமராஜ் | தேமுதிமுக | — | 74,317 |
| 4 | ஜி. செல்வராஜ் | பிஎஸ்பி | — | 5,014 |
| 5 | சி. அருள்மணி | ஏஜவிபி | — | 4,652 |
| 6 | வி. சீனிவாசன் | எம்எம்கோ | — | 986 |
| 7 | ஆர். சுடர்விஜயன் | எஸ்பி | — | 930 |
| 8 | என். செந்தில்குமார் | ஆர்கேஎஸ்பி | — | 716 |
| 9 | ஆர். ஸ்டாலின் | எல்ஜேபி | — | 719 |
| 10 | எஸ். அன்னலட்சுமி | சுயே | — | 741 |
| 11 | கே. இராமசாமி | சுயே | — | 802 |
| 12 | ஆர். இளங்கோவன் | சுயே | — | 1,029 |
| 13 | எஸ். கந்தசாமி | சுயே | — | 1,372 |
| 14 | எ. குணசேகரன் | சுயே | — | 2,645 |
| 15 | கே. சிங்காரம் | சுயே | — | 3,577 |
| 16 | பி.எஸ். ஞானபிரகாசம் | சுயே | — | 3,720 |
| 17 | கே. தங்கமணி | சுயே | — | 1,497 |
| 18 | டி. பிரின்ஸ் புட்கா சிங் | சுயே | — | 3,714 |
| 19 | எஸ். பொன்னம்மாள் | சுயே | — | 2,928 |
| 20 | எம். ரெங்கராசு | சுயே | — | 934 |
| 21 | எ. ஜெயராமன் | சுயே | — | 2,043 |

## 26. கடலூர்

**எஸ். அழகிரி (இ.தே.காங்கிரஸ்) வெற்றி**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எஸ். அழகிரி | இ.தே.காங்கிரஸ் | — | 3,20,473 |
| 2 | எம். சி. சம்பத் | அஇஅதிமுக | — | 2,96,941 |
| 3 | எம். சி. தாமோதரன் | தேமுதிக | — | 93,172 |
| 4 | எஸ். வசந்தி | சுயே | — | 13,400 |
| 5 | சி. ஆரோக்கியதாஸ் | பகுச | — | 8,269 |
| 6 | எ. காமராஜ் | எல்ஜேபி | — | 5,045 |
| 7 | கே. கண்ணன் | சுயே | — | 1,644 |
| 8 | பி. சந்திரா | சுயே | — | 1,609 |
| 9 | ஏ.டி. சென்ராயன் | சுயே | — | 1,346 |
| 10 | ஆர். பார்த்திபன் | சுயே | — | 5,492 |
| 11 | கே. ராயர் | சுயே | — | 2,003 |

## 27. சிதம்பரம்

**தொல். திருமாவளவன் (விசிக) வெற்றி**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | தொல். திருமாவளவன் | விசிக | — | 4,28,804 |
| 2 | இ. பொன்னுசாமி | பா.ம.க | — | 3,29,721 |
| 3 | எஸ். சசிகுமார் | தேமுதிக | — | 66283 |
| 4 | வி. மணிகன்டன் | சுயே | — | 9,799 |
| 5 | என்.ஆர்.ராஜேந்திரன் | பி.எஸ்.பி | — | 5718 |
| 6 | சி. செல்வகுமார் | ஆர்.கே.எஸ்.பி | — | 3,140 |
| 7 | என். காவியராசன் | சுயே | — | 6,173 |
| 8 | ஆர். கனகசபை | சுயே | — | 1,398 |
| 9 | பி. சக்திவேல் | சுயே | — | 1,950 |
| 10 | எல். சுசீலா | சுயே | — | 4,178 |
| 11 | கே. செந்தமிழ்செல்வி | சுயே | — | 1,500 |
| 12 | சி. தர்மலிங்கம் | சுயே | — | 2678 |
| 13 | வி. மருதமுத்து | சுயே | — | 8,367 |

## 2:. மயிலாடுதுறை

**ஓ. எஸ். மணியன் (அஇஅதிமுக) வெற்றி**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஓ. எஸ். மணியன் | அஇஅதிமுக | — 3,64,089 |
| 2 | மணி சங்கர் அய்யர் | இதேகா | — 3,27,235 |
| 3 | கே. பாண்டியன் | தேமுதிக | — 44,754 |
| 4 | டாக்டர்.எம்.எச். ஜவாஹிருல்லா | எம்எம்எகே | — 19,814 |
| 5 | எஸ். கார்த்திகேயன் | பாஜக | — 7,486 |
| 6 | எல்.வி.சப்தரிஷி | பிஎஸ்பி | — 5,554 |
| 7 | எஸ். கணேசன் | ஏஜேவிபி | — 4,129 |
| 8 | என். குணசேகரன் | சிபிஐ (எம்எல்) (எல்) | — 2,262 |
| 9 | எ. அப்துல் ஜலீல் | சுயே | — 734 |
| 10 | எஸ். அறிவழகன் | சுயே | — 627 |
| 11 | எம்.எச். அகமது மெரச்சேர் | சுயே | — 610 |
| 12 | ஆர். காளிமுத்து சுடர் | சுயே | — 847 |
| 13 | எ. கிருஷ்ணப்பா | சுயே | — 1,377 |
| 14 | டி. டிமோதி | சுயே | — 2,051 |
| 15 | எம்.தக்ஷிணாமூர்த்தி | சுயே | — 2,700 |
| 16 | கே. நாகராஜன் | சுயே | — 2,599 |
| 17 | வி. பாலாஜி | சுயே | — 848 |
| 18 | எஸ்.எம். பிரபுதாசன் | சுயே | — 646 |
| 19 | பி. ராஜகுமார் | சுயே | — 2,584 |
| 20 | எம். ராஜாமணி | சுயே | — 4,684 |
| 21 | ஆர். வெங்கட்ரமணி | சுயே | — 1,192 |
| 22 | கே.என்.ஜெயகுமார் | சுயே | — 930 |
| 23 | வி. ஜெயராமன் | சுயே | — 1,828 |

## 29. நாகப்பட்டினம்

**ஏ.கே.எஸ். விஜயன் (திமுக) வெற்றி**

| | | | |
|---|---|---|---|
| 1 | ஏ.கே.எஸ். விஜயன் | திமுக | — 3,69,915 |
| 2 | எம். செல்வராஜ் | இ.கம்யூ | — 3,21,953 |
| 3 | எம். முத்துகுமார் | தேமுதிக | — 51,376 |
| 4 | பி. வீராசாமி | சுயே | — 8,769 |
| 5 | ஜி. வீரமுத்து | பிஎஸ்பி | — 5,123 |
| 6 | ஆர். தேவதாஸ் | சுயே | — 1,957 |
| 7 | வி. முனுசாமி | சுயே | — 3,895 |

## 30. தஞ்சாவூர்

**எஸ்.எஸ் பழனிமாணிக்கம் (திமுக) வெற்றி**

| | | | |
|---|---|---|---|
| 1 | எஸ்.எஸ் பழனிமாணிக்கம் | திமுக | — 4,08,343 |
| 2 | துரை. பாலகிருஷ்ணன் | மதிமுக | — 3,06,556 |
| 3 | டாக்டர். பி.ராமநாதன் | தேமுதிக | — 63,852 |
| 4 | டி. முருகராஜ் | சுயே | — 9,805 |
| | எஸ். சரவணன் | பிஎஸ்பி | — 5,811 |
| 5 | எஸ். வீரமணி | எஸ்பி | — 1,650 |
| 6 | கே. கார்த்திகேயன் | சுயே | — 721 |
| 7 | எஸ். சிவகுமார் | சுயே | — 1,222 |
| 8 | கே. சோழமன்னார் கனகராஜா | சுயே | — 742 |
| 9 | பாலு (எ) பாலன் | சுயே | — 819 |
| 10 | எஸ். பிரசன்னா | சுயே | — 1,247 |
| 11 | கே. ராஜாமணி | சுயே | — 2,812 |
| 12 | எஸ். விஜயலட்சுமி | சுயே | — 4,196 |

## 31. சிவகங்கை

**ப. சிதம்பரம் (இ.தே.காங்கிரஸ்) வெற்றி**

| | | | |
|---|---|---|---|
| 1 | ப. சிதம்பரம் | இ.தே.காங்கிரஸ் | — 3,34,348 |
| 2 | ஆர். எஸ். ராஜாகண்ணப்பன் | அஇஅதிமுக | — 3,30,994 |
| 3 | பர்வத ரெஜினா பாப்பா | தேமுதிக | — 60,054 |
| 4 | எம். தூதை செல்வம் | சுயே | — 6,997 |
| 5 | எம். ஜி.தேவர் | பிஎஸ்பி | — 6,600 |
| 6 | கே. சக்திவேல் | எம்எம்கேஏ | — 4,559 |
| 7 | ஆர். எ. ராமசாமி | பிடி | — 1,864 |
| 8 | ஜே. அபுபக்கர் சித்திக் | சுயே | — 1,874 |
| 9 | அரு. அழகப்பன் | சுயே | — 1,028 |
| 10 | பி.எல். அழகப்பன் | சுயே | — 716 |
| 11 | வி.எஸ்.கே.எஸ். ஆனந்தன் | சுயே | — 746 |
| 12 | கே. சமுத்திரம் கலைமணி | சுயே | — 1,965 |
| 13 | கே. கார்மேகம் | சுயே | — 1,230 |
| 14 | பி. குணசேகரன் | சுயே | — 3,001 |
| 15 | எஸ். சிதம்பரம் | சுயே | — 2,497 |
| 16 | எம். அரிமளம் தியாகி சுப்பிரமணியன் முத்திரையர் | சுயே | — 2,334 |
| 17 | பி. மலைராஜ் | சுயே | — 6,481 |
| 18 | எ. ராதாகிருஷ்ணன் | சுயே | — 1,264 |
| 19 | எஸ். ராஜாகோபால் | சுயே | — 4,680 |
| 20 | ஆர். ரவி | சுயே | — 2,021 |

## 32. மதுரை

**மு.க.அழகிரி (திமுக) வெற்றி**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மு.க.அழகிரி | திமுக | — | 4,31,295 |
| 2. | பி. மோகன் | இ.கம்யூ(மா) | — | 2,90,310 |
| 3. | கே.கவியரசு | தேமுதிக | — | 54,419 |
| 4. | எஸ். வீரதுரை | சுயே | — | 4,712 |
| 5 | தர்பார் ராஜா | பிஎஸ்பி | — | 3,752 |
| 6. | கே. ஆனந்த் | சுயே | — | 979 |
| 7 | ஆர்.கோபால் | சுயே | — | 836 |
| 8. | டி. சிவகுமார் | சுயே | — | 1,152 |
| 9. | கே. தங்கபாண்டி | சுயே | — | 597 |
| 10. | எம்.எ. நாகமலை | சுயே | — | 790 |
| 11. | எம். பால்பாண்டி | சுயே | — | 1,404 |
| 12. | டி.ஆர். மோதிலால் | சுயே | — | 1,432 |

## 33. தேனி

**ஜே. எம். ஆரூன் ரசீத் (இ.தே.காங்கிரஸ்) வெற்றி**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஜே. எம். ஆரூன் ரசீத் | இ.தே.காங்கிரஸ் | — | 3,40,575 |
| 2 | தங்க தமிழ்ச்செல்வன் | அஇஅதிமுக | — | 3,34,273 |
| 3 | எம். ஜி. சந்தானம் | தேமுதிக | — | 70,908 |
| 4 | கவிதா | பிஎஸ்பி | — | 8,023 |
| 5 | எ. பார்வதி | பாஜக | — | 7,640 |
| 6 | பி. செல்வராஜன் | பிடி | — | 2,248 |
| 7 | என்.கிருஷ்ணவேனி | சுயே | — | 644 |
| 8 | செல்வராஜ் | சுயே | — | 582 |
| 9 | எஸ். தமிழ்ச்செல்வன் | சுயே | — | 926 |
| 10 | திருமூர்த்தி | சுயே | — | 674 |
| 11 | ஆர். நாகமணி செந்தில் | சுயே | — | 1,969 |
| 12 | பி. நாச்சிமுத்து | சுயே | — | 858 |
| 13 | பாண்டி | சுயே | — | 6,829 |
| 14 | பி. பாண்டியன் | சுயே | — | 2,714 |
| 15 | எஸ். பெருமாள்சாமி | சுயே | — | 917 |
| 16 | எம். பொம்முராஜ் | சுயே | — | 3,345 |
| 17 | எஸ். மணி | சுயே | — | 5,127 |
| 18 | எஸ். பி. முருகேசன் | சுயே | — | 6,394 |
| 19 | ராஜவேல் | சுயே | — | 2,808 |
| 20 | ரெங்கநாதன் | சுயே | — | 893 |
| 21 | வெற்றிசெல்வன் | சுயே | — | 824 |
| 22 | ஜி. ஜேம்ஸ் | சுயே | — | 1,358 |

## 34. விருதுநகர்

**மாணிக்க தாகூர் (இ.தே.காங்கிரஸ்) வெற்றி**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | மாணிக்க தாகூர் | இ.தே.காங்கிரஸ் | — | 3,07,187 |
| 2 | வைகோ | மதிமுக | — | 2,91,423 |
| 3 | கே. பாண்டியராஜன் | தேமுதிக | — | 1,25,229 |
| 4 | எம். கார்த்திக் | பாஜக | — | 17,336 |
| 5 | வி. கனகராஜ் | பிஎஸ்பி | — | 8,198 |
| 6 | எஸ். கண்ணன் | சுயே | — | 1,810 |
| 7 | எஸ். கருணாநிதி | சுயே | — | 1,219 |
| 8 | எம். எ. சிவகுமார் | சுயே | — | 891 |
| 9 | பி. சிவமணி | சுயே | — | 755 |
| 10 | டி. செல்வம் | சுயே | — | 919 |
| 11 | ஜே. சேதுராஜ் | சுயே | — | 869 |
| 12 | எம். தனுஷ்கோடி | சுயே | — | 3,019 |
| 13 | பி. நம்புசாமி | சுயே | — | 1,887 |
| 14 | என். பத்மநாபன் | சுயே | — | 2,313 |
| 15 | எஸ். விஜயன் | சுயே | — | 1,486 |
| 16 | எஸ். எல். ஜவஹர்லால் | சுயே | — | 3,112 |

## 35. இராமநாதபுரம்

**சிவகுமார் (எ) ஜே.கே. ரித்திஷ் (திமுக) வெற்றி**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | சிவகுமார் (எ) ஜே.கே. ரித்திஷ் | திமுக | — | 2,94,945 |
| 2 | வி. சத்தியமூர்த்தி | அஇதிமுக | — | 2,25,030 |
| 3 | சு.திருநாவுக்கரசர் | பா.ஜ.க | — | 1,28,322 |
| 4 | எஸ். சிங்கை ஜின்னா | தேமுதிக | — | 49,571 |
| 5 | பிரசில்லா பாண்டியன் | பிஎஸ்பி | — | 39,086 |
| 6 | எஸ். சலிமுல்லா காண் | எம்எஎம்எகே | — | 21,419 |
| 7 | ஆர்.முகமது அபித்அலி | ஜெஎம்எம் | — | 1,496 |
| 8 | கே.காளிமுத்து | சுயே | — | 1,769 |
| 9 | எஸ். சண்முகையா பாண்டியன் | சுயே | — | 1,119 |
| 10 | எஸ். துரை ஸ்காட்விச் | சுயே | — | 961 |
| 11 | கே. செல்லதுரை | சுயே | — | 1,186 |
| 12 | பாலமுருகன் | சுயே | — | 1,244 |
| 13 | பி. பாஸ்கரன் | சுயே | — | 2,330 |
| 14 | ஜி. முருகேந்திரன் | சுயே | — | 3,471 |
| 15 | எம்.ஐ. ஜஹாங்கீர் | சுயே | — | 5,870 |

## 36. தூத்துக்குடி

### எஸ். ஆர். ஜெயதுரை (திமுக) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | எஸ். ஆர். ஜெயதுரை | திமுக | — | 3,11,017 |
| 2 | டாக்டர். சிந்தியா பாண்டியன் | அஇஅதிமுக | — | 2,34,368 |
| 3 | எம். எஸ். சுந்தர் | தேமுதிக | — | 61,403 |
| 4 | எஸ். சரவணன் | பாஜக | | 27,013 |
| 5 | இ.பா. ஜீவன்குமார் | பிஎஸ்பி | — | 6,737 |
| 6 | எஸ். அருண்குமார் புவியரசு | சுயே | — | 956 |
| 7 | எஸ். ரகுபதி | சுயே | — | 603 |
| 8 | பி. கந்திவேல் | சுயே | — | 5,522 |
| 9 | கே. சுந்தரவேல் | சுயே | — | 580 |
| 10 | பி. பிரபாகரன் | சுயே | — | 576 |
| 11 | டி. பொன்ராஜ் | சுயே | — | 817 |
| 12 | எஸ். முத்து | சுயே | — | 1,246 |
| 13 | எ. முருகன் | சுயே | — | 913 |
| 14 | வி. ராமகிருஷ்ணன் | சுயே | — | 1,402 |
| 15 | வி. ராம்குமார் | சுயே | — | 3,010 |

## 37. தென்காசி

### பி. லிங்கம் (இ.கம்யூ) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பி. லிங்கம் | இ.கம்யூ | — | 2,81,174 |
| 2 | ஜி. வெள்ளைப்பாண்டி | இதேகா | — | 2,46,498 |
| 3 | டாக்டர். கே. கிருஷ்ணசாமி | பு.த | — | 1,16,685 |
| 4 | கே. இன்பராஜ் | தேமுதிக | — | 75,741 |
| 5 | கே. கிருஷ்ணன் | பிஎஸ்பி | — | 6,948 |
| 6 | எம். ஜோதிராஜ் | எஸ்பி | — | 3,984 |
| 7 | எஸ். பாலாகிருஷ்ணன் | சுயே | — | 3,912 |
| 8 | இ. ராமசந்திரன் | சுயே | — | 4,471 |
| 9 | ஆர். லட்சுமணன் | சுயே | — | 6633 |

## 3:. திருநெல்வேலி

### எஸ். ராமசுப்பு (இ.தே.காங்கிரஸ்) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | எஸ். ராமசுப்பு | இ.தே.காங்கிரஸ் | — | 2,74,932 |
| 2 | கே. அண்ணாமலை | அஇஅதிமுக | — | 2,53,629 |
| 3 | எஸ். மைக்கேல் இராயப்பன் | தேமுதிக | — | 94,562 |
| 4 | கரு. நாகராஜன் | பாஜக | — | 39,997 |
| 5 | ரமேஷ் பாண்டியன் | பிஎஸ்பி | — | 4,305 |
| 6 | டி. சங்கரபாண்டியன் | சிபிஐஎல்எல் | — | 3,339 |
| 7 | எஸ். சையத் இமாம் | எஸ்பி | — | 1,504 |
| 8 | என். திருமதி. வேல்மதி | எல்ஜேபி | — | 1,205 |
| 9 | எம். அருணாசலம் | சுயே | — | 912 |
| 10 | என். ஆனந்தராஜ் | சுயே | — | 1,197 |
| 11 | ஐ. குபேந்திரன் | சுயே | — | 703 |
| 12 | சந்திரசேகரன் சக்தி | சுயே | — | 1,586 |
| 13 | டி. செல்வின் | சுயே | — | 1,736 |
| 14 | எ. திருவேங்கடம் | சுயே | — | 1,742 |
| 15 | எஸ். பாலசுப்பிரமணியம் | சுயே | — | 1,574 |
| 16 | சுடரொளி எஸ். முருகன் | சுயே | — | 4,028 |
| 17 | இ. இராமசுப்பு | சுயே | — | 3,804 |
| 18 | எம். இராமலிங்கம் | சுயே | — | 834 |
| 19 | எம். தெங்கலம் ராஜா | சுயே | — | 889 |
| 20 | வெய்யுள்முத்துக்குமார் | சுயே | — | 2,231 |
| 21 | என். ஜெயபாலன் | சுயே | — | 6,079 |

## 39. கன்னியாகுமரி

### ஜே. ஹெலன்டேவிட்சன் (திமுக) வெற்றி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஜே. ஹெலன்டேவிட்சன் | திமுக | — | 3,20,161 |
| 2 | பி.இராதாகிருஷ்ணன் | பாஜக | — | 2,54,474 |
| 3 | ஏ.வி பெல்லார்மின் | இ.கம்யூ(மா) | — | 85,583 |
| 4 | எஸ். ஆஸ்டின் | தேமுதிக | — | 68,472 |
| 5 | பி. சிவகாமி | பிஎஸ்பி | — | 6,400 |
| 6 | டி. அருள் துமிலன் | எல்ஜேபி | — | 2,812 |
| 7 | டி. பாலசுப்பிரமணியன் | எபிஎச்எம் | — | 1,698 |
| 8 | சி.பி. இராதாகிருஷ்ணன் | சுயே | — | 525 |
| 9 | எம்பி | சுயே | — | 445 |
| 10 | சி. குமார் | சுயே | — | 333 |
| 11 | சி. சதிஷ் | சுயே | — | 762 |
| 12 | எஸ். சிவகுமார் | சுயே | — | 996 |
| 13 | சி. தங்கமோனி | சுயே | — | 1,266 |
| 14 | சி. நல்லதம்பி | சுயே | — | 2,448 |
| 15 | சி.எம். பால்ராஜ் | சுயே | — | 619 |
| 16 | எஸ். மனோகரன் | சுயே | — | 5,063 |
| 17 | சி. இராதாகிருஷ்ணன் | சுயே | — | 4,400 |
| 18 | எஸ். லெக்ஷ்மணன் | சுயே | — | 1,065 |
| 19 | வில்சன் | சுயே | — | 2,925 |
| 20 | கே. வேணு | சுயே | — | 3,182 |
| 21 | எஸ். ஜான்சன் | சுயே | — | 764 |

(இந்திய தேர்தல் ஆணையத்தின் www.eciresults.nic.in இணையதளத்திலிருந்து.....)

# மத்திய அமைச்சரவை

## துறைவாரியான விவரம்

| | | |
|---|---|---|
| 1) | மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் **மன்மோகன் சிங்** | : பணியாளர், மக்கள் குறை தீர்ப்பு, ஓய்வூதியம், திட்டம், அணுசக்தி, விண்வெளி மற்றும் கலாச்சாரம் |

**மாண்புமிகு அமைச்சர்களும், அவர்களது துறைகளும் :**

| | **கேபினட் அமைச்சர்கள்** | **துறை விவரம்** |
|---|---|---|
| 2) | திரு.பிரணாப் முகர்ஜி | : நிதி |
| 3) | திரு.சரத் பவார் | : வேளாண்மை, நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோகம் |
| 4) | திரு.ஏ.கே.அந்தோனி | : பாதுகாப்பு |
| 5) | திரு.ப.சிதம்பரம் | : உள்துறை |
| 6) | செல்வி.மம்தா பானர்ஜி | : ரயில்வே |
| 7) | திரு.எஸ்.எம்.கிருஷ்ணா | : வெளியுறவு |
| 8) | திரு.வீரபத்ர சிங் | : உருக்கு |
| 9) | திரு.விலாஸ்ராவ் தேஷ்முக் | : கனரகத் தொழில், பொதுத்துறை நிறுவனங்கள் |
| 10) | திரு.குலாம் நபி ஆசாத் | : சுகாதாரம் மற்றும் குடும்பநலம் |
| 11) | திரு.சுஷில்குமார் ஷிண்டே | : மின்சாரம் |
| 12) | திரு.எம்.வீரப்ப மொய்லி | : சட்டம் மற்றும் நீதி |
| 13) | திரு.ஃபரூக் அப்துல்லா | : புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி |
| 14) | திரு.எஸ்.ஜெய்பால் ரெட்டி | : நகர்ப்புற வளர்ச்சி |
| 15) | திரு.கமல்நாத் | : சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை |
| 16) | திரு.வயலார் ரவி | : வெளிநாடு வாழ் இந்தியர் விவகாரம் |
| 17) | திரு.தயாநிதி மாறன் | : ஜவுளி |
| 18) | திரு.ஆ.ராசா | : தொலைத் தொடர்பு, தகவல் தொழில்நுட்பம் |
| 19) | திரு.முரளி தியோரா | : பெட்ரோலியம், இயற்கை எரிவாயு |
| 20) | திருமதி. அம்பிகா சோனி | : செய்தி மற்றும் ஒலிபரப்பு |

| | | | |
|---|---|---|---|
| 21) | திரு.மல்லிகார்ஜுன் கார்கே | : | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு |
| 22) | திரு.கபில் சிபல் | : | மனித வள மேம்பாடு |
| 23) | திரு.பி.கே.ஹண்டிக் | : | சுரங்கம், வடகிழக்கு மண்டல மேம்பாடு |
| 24) | திரு.ஆனந்த் சர்மா | : | வர்த்தகம் மற்றும் தொழில் |
| 25) | திரு.சி.பி.ஜோஷி | : | ஊரக வளர்ச்சி, பஞ்சாயத்துராஜ் |
| 26) | செல்வி. செல்ஜா | : | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு, சுற்றுலா |
| 27) | திரு.சுபோத் காந்த் சகாய் | : | உணவு பதப்படுத்துதல் தொழில் |
| 28) | டாக்டர். எம்.எஸ்.கில் | : | இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு |
| 29) | திரு.ஜி.கே.வாசன் | : | கப்பல் போக்குவரத்து |
| 30) | திரு.பவன் குமார் பன்சால் | : | நாடாளுமன்ற விவகாரம், நீர்வளம் |
| 31) | திரு.முகுல் வாஸ்னிக் | : | சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் |
| 32) | திரு.காந்திலால் பூரியா | : | பழங்குடியினர் விவகாரம் |
| 33) | திரு.மு.க.அழகிரி | : | ரசாயனம் மற்றும் உரம் |

**இணை அமைச்சர்கள் (தனிப்பொறுப்பு)**

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு.பிரபுஃல் படேல் | : | விமானப் போக்குவரத்து |
| 2) | திரு.பிரித்விராஜ் சவாண் | : | அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், புவி அறிவியல், பிரதமர் அலுவலகம் பணியாளர் மற்றும் மக்கள் குறைதீர்ப்பு, ஓய்வூதியம் மற்றும் நாடாளுமன்ற விவகாரம் |
| 3) | திரு.ஸ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால் | : | நிலக்கரி, புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கம் |
| 4) | திரு.சல்மான் குர்ஷீத் | : | கம்பெனி விவகாரம், சிறுபான்மையினர் நலம் |
| 5) | திரு.தீன்ஷா ஜே.படேல் | : | குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் |
| 6) | திருமதி.கிருஷ்ணா தீரத் | : | மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் / வளர்ச்சி |
| 7) | திரு.ஜெய்ராம் ரமேஷ் | : | சுற்றுச்சூழல் மற்றும் வனம் |

**இணை அமைச்சர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு.ஸ்ரீகாந்த் ஜெனா | : | ரசாயனம் மற்றும் உரம் |
| 2) | திரு.இ.அகமது | : | ரயில்வே |
| 3) | திரு.முள்ளபள்ளி ராமச்சந்திரன் | : | உள்துறை |
| 4) | திரு. வி.நாராயணசாமி | : | திட்டம், நாடாளுமன்ற விவகாரம் |
| 5) | திரு. ஜோதிராதித்ய மாதேவ்ராவ் சிந்தியா | : | வணிகம் மற்றும் தொழில் |
| 6) | திருமதி. டி.புரந்தேஸ்வரி | : | மனித வள மேம்பாடு |
| 7) | திரு. கே.எச்.முனியப்பா | : | ரயில்வே |
| 8) | திரு. அஜய் மக்கேன் | : | உள்துறை |

9) திருமதி.பனபாக லட்சுமி : ஜவுளி

10) திரு. நமோ நாராயண் மீனா : நிதி

11) திரு.எம்.எம்.பல்லம் ராஜு : பாதுகாப்பு

12) திரு.சௌகதா ரே : நகர்ப்புற வளர்ச்சி

13) திரு.எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் : நிதி

14) திரு.ஜிதின் பிரசாத் : பெட்ரோலியம், இயற்கை எரிவாயு

15) திரு.ஏ.சாய் பிரதாப் : உருக்கு

16) திருமதி.பிரணீத் கௌர் : வெளியுறவு

17) திரு.குருதாஸ் காமத் : தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பம்

18) திரு.ஹரீஷ் ராவத் : தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு

19) பேரா.கே.வி.தாமஸ் : வேளாண்மை மற்றும் நுகர்வோர் விவகாரம், உணவு, பொது விநியோகம்

20) திரு.பாரத்சிங் சோலங்கி : மின்சாரம்

21) திரு.மகாதேவ் எஸ்.கண்டேலா : சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை

22) திரு.தினேஷ் திரிவேதி : சுகாதாரம் மற்றும் குடும்பநலம்

23) திரு.சிசிர் அதிகாரி : ஊரக வளர்ச்சி

24) திரு.சுல்தான் அகமது : சுற்றுலா

25) திரு.முகுல் ராய் : கப்பல் போக்குவரத்து

26) திரு.சௌத்ரி மோகன் ஜாதுவா : தகவல் மற்றும் ஒலிபரப்பு

27) திரு.து.நெப்போலியன் : சமூக நீதி, அதிகாரமளித்தல்

28) திரு.எஸ்.ஜெகத்ரட்சகன் : தகவல் மற்றும் ஒலிபரப்பு

29) திரு.எஸ்.காந்திசெல்வன் : சுகாதாரம் மற்றும் குடும்பநலம்

30) திரு.துஷார்பாய் சௌத்ரி : பழங்குடியினர் விவகாரம்

31) திரு.சச்சின் பைலட் : தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம்

32) திரு.அருண் யாதவ் : இளைஞர் நலம் விளையாட்டு

33) திரு.பிரதிக் பிரகாஷ் பாபு பாட்டீல் : கனரகத் தொழில் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள்

34) திரு.ஆர்.பி.என்.சிங் : சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை

35) திரு.சசி தரூர் : வெளியுறவு

36) திரு.வின்செண்ட் பாலா : நீர்வளம்

37) திரு.பிரதீப் ஜெயின் : ஊரக வளர்ச்சி

38) செல்வி.அகதா சங்மா : ஊரக வளர்ச்சி

❖❖❖

# இருளகல!

**• அறிஞர் அண்ணா**



பேரிருளிலிருந்து சிறு சிறு ஒளிச் சிதறல்கள் வெடித்துக்கொண்டு கிளம்பின! கப்பிக் கொண்டிருந்த இருள், ஓட்டை விழுந்த பாண்டம்போல, உருக்குலையலாயிற்று. விடுபட்ட ஒளிச்சிதறல்கள், இங்குமங்குமாக அலையலாயின – ஒன்றை ஒன்று ஈர்த்தன – ஒருரு ஒருருவாவதும், பல உருக்கள் ஒன்றை ஒன்று அணைத்துக்கொண்டு பேருருவாவதுமாகப் பெரும் மாறுதல் நிகழ்ந்தவண்ணம் இருந்தது. தன்னை உருக்குலையவைத்துவிட்டுப், புதுப்புது உருப்பெற்றுக்கொண்டு உலவியபடி இருக்கும் ஒளிச் சிதறல்களைக் கண்ட சிதைந்த உருக்கொண்ட பேரிருள், தன் நிலையை மாற்றிக்கொள்ள முடியாத, மீண்டும் சிதைவற்ற பேருரு பெற முடியாத நிலையில், கலக்கத்துடன் இருந்தது.

ஒளிச்சிதறல்கள் எங்கிருந்து கிளம்பின? கிளம்பும் வரையில் எங்கு அடைபட்டுக் கிடந்தன? ஏன்? எந்தச் சக்தி அவைகளை அடக்கி வைத்துக் கொண்டிருந்தது? அந்தச் சக்தியின் வலிவு குலையக் காரணம் என்ன? ஒளிச் சிதறல்கள், புதிய வலிவுபெற்ற விதம் எப்படி?

சென்றது இனி மீளாது! செல்வாக்கு மீண்டும் வராது! உள்ளது நிலைத்தாலே போதும்! மேலும் உருக்குலைதல் ஏற்படாதிருக்க வழி கிடைத்தால் போதும்! – என்ற எண்ணம் போலும், பேரிருளுக்கு.

நெடுங்கால ஆதிக்கம் செலுத்திவந்த பேரிருள், தன்னை விரட்டிட, உருக்குலைத்திடச் சிதறடிக்கச் சிதைக்கத்தக்க வலிவுக் கூறுகள், உள்ளன என்ற எண்ணம் கொள்ளவே இல்லை. அவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை, தன் ஆதிக்கத்தின்மீது.

பேரிரைச்சல்! பல்வேறு வகையான ஒலிகளின் கூட்டுக் கூச்சல்! முழக்கமும் உறுமலும், சீறலும் கனைத்தலும், குரைத்தலும் குமுறலும் ஆகப் பல்வேறு வகையான ஒலிகள், ஒன்றோடொன்று கூடின, பேரிரைச்சல் எழுந்தது! எனினும் அந்தப் பேரிரைச்சலுக்கு இடையேயும், ஒவ்வோர்விதமான ஒலி, மற்றவகையான ஒலிகளைவிட, வலிவினதாகிறது. ஒவ்வோர் ஒலி இந்த வலிவு பெறுகிறது. மிகக் கூர்ந்து கவனித்தால் மட்டுமே அதனை உணரமுடிகிறது.

பேரிரைச்சலிலிருந்து ஒலிகள் முறைப்பட்டுவிடுகின்றன! ஒவ்வொன்று ஒவ்வோர் முறை பெறுகிறது. இரைச்சல் எனும் பொருளற்ற நிலையிலிருந்து, முறை பெற்று, பொருள் உடையதாகிறது.

பேரிரைச்சல், விலங்கினம், பறவையினம் என்பனவற்றினிடம் தஞ்சம் அடைந்து, உயிர்ப்பிச்சை பெறுகிறது. மாந்தர்களோ, இரைச்சலை, கல்லைச் செதுக்கிச் சிலைகளும் கருவிகளும் செய்தல்போல, மொழிகளாக்குகின்றனர். இனிமைப்படுத்தி இசையாக்குகின்றனர். உணர்ச்சிகளையும் மேற்கொள்ளும் செயல்களையும் பொறுத்து, பொருளுள்ள, கட்டுக்குக் கொண்டுவரப்பட்ட இரைச்சலாக்கிப் போருக்கும் கிளர்ச்சிக்கும் பயன்படுத்துகின்றனர். காட்டிலே எப்போதும் போல, இரைச்சல்! நாட்டிலே இசை, உரை, உரையாடல், வாதிடல், கூச்சலிடல், குமுறல் கதறல், என்பவை! இரைச்சல் மட்டுமே காட்டிடை இயல்பு என்று எண்ணாதீர்! இசை எமக்கே உரியது என்றும் கருதாதீர்! என்று கூறுவதுபோல, வட்டமிட்டபடி இசை எழுப்புகிறது வானம்பாடி!

பேரிரைச்சலிலிருந்து, முறைப்படுத்தப்பட்ட, பொருள் தரப்பட்ட, மொழிகளும், ஒலிக்குறிகளும், இசையும் பிறந்தன!

பேரிரைச்சலுக்குள்ளேயே இவை முன்பு கட்டுப்பட்டு அடங்கிக்கிடந்தன! ஆனால், விடுபட, வகைபட, பொருள்பெற முடிந்தது! எப்படி?

பெருங் குழப்பத்திலிருந்து அமைதி பிறக்கிறது! பெருங்குழப்பம் பிறகு முறைகளாகின்றன, ஒழுங்கு பெறுகின்றன. பெருங்குழப்பமாக இருந்தபோது, பயன், பொருள், இல்லை. முறைகளான பின்னர், ஒழுங்குபெற்ற பிறகு, பொருளும் பயனும் கிடைக்கின்றன!

பேரிருள் குலைந்து ஒளிச் சிதறல்கள் வெளிப்படுவது போலப், பேரிரைச்சல் பிறகு முறைப்படுத்தப்படுவதுபோல, பெருங்குழப்பம் பின்னர் ஒழுங்குமுறைகளாவதுபோல, உலகம், பேரிருளிலிருந்து விடுபட்ட ஒளிச் சிதறலாய், பேரிரைச்சலிலிருந்து கிடைத்த முறைப்படுத்தப்பட்ட ஒலியாய், பெருங்குழப்பத்திலிருந்து கிடைத்த ஒழுங்குமுறையாக, அமைந்திருக்கிறது என்பது, உலக உற்பத்தி குறித்து, பல்வேறு கோணங்களிலிருந்து விளக்க முற்பட்டவர்களின் கருத்துகளிலிருந்து திரட்டுப்பாலாகப் பெறமுடிகிறது.

பேரிருள் குலைந்து ஒளிச் சிதறல்கள் கிளம்பியது போல, ஒளி மடிந்து மீண்டும் பேரிருள் கப்பிக்கொள்ளும் – தன்னைச் சிதைத்த ஒளியின்மீது பழிதீர்த்துக் கொள்ளும் – நெடுங்காலப் பசியைப் போக்கிக் கொள்ளும் – அழிந்துபட்ட ஆதிக்கத்தைத் திரும்பப் பெற்றுவிடும் – ஈடற்ற வலிவுடன் எதிர்ப்பற்ற நிலை பெற்று, எவரும் எதனையும் காண இயலாத ஓர் இருட் படலத்தை விரித்துவிடும் – இருளன்றி வேறெதற்கும் இடம் இல்லை, தேவையில்லை, என்ற நிலை ஏற்பட்டுவிடும் – விட்டு வைத்தேன் சிலகாலம் ஒளிச் சிதறல்களை – மீண்டும் ஏற்படுத்திக் கொண்டேன் என்று ஆதிக்கத்தை, என்று இயம்பும் நிலை பெற்றுப் பேரிருள் அரசாளும் – அந்த அரசிலே குடி மக்கள் இரார், கோல் மட்டுமே இருக்கும்!

உலக அழிவு குறித்துப் பேசுவோர், இந்தக் கருத்துப்படக் கூறுகின்றனர்.

மொழிகளாய், இசையாய், முறைப்படுத்தப் பட்ட ஒலிக் குறிகளாய், உள்ளன யாவும், மீண்டும் ஒன்றை ஒன்று எதிர்த்தும் குலைத்தும், வெட்டியும் ஒட்டியும், வேற்றுருக்கொண்டும், பொருள் குறைந்து பயன் குறைந்து, இரைச்சலாகி, ஓர் வகை இரைச்சல் மற்றோர் வகை இரைச்சலுடன் ஆதிக்கத்துக்காகப் போட்டியிட்டுப் போட்டியிட்டு, அளவு அதிகமாகி இறுதியில், முறைகெட்டுப், பேரிரைச்சலாகி விடும்! அப்போது வானம்பாடியின் இசையும் இல்லை, துளைக் கருவியின் இனிமை ஒலியும் இல்லை. பணிவு, குழைவு, கட்டளை மிரட்டல், என்பனகூட விளக்கமாகத் தெரியாத நிலையில், பேரிரைச்சல் கிளம்பிவிடும்!

உலக அழிவு என்பது இதுபோன்றதே என்கின்றனர்.

ஒழுங்குமுறைகள் மீறப்பட்டும், ஒன்றொடொன்று மோதிக்கொண்டும், புதுமுறைகள் பழைய முறைகளைத் தாக்கியும், பழைய முறைகள் புது முறைகளைத் திருப்பித் தாக்கியும் முறைகள் கெட்டுக் குழம்பிப் பொருளற்றுப்போய், மீண்டும் பெருங் குழப்பம் ஏற்பட்டுவிடும் – அப்போது குடும்பம், அரசு, வாணிபம், உழவு, தொழிற்கலை எனும் எம்முறையும் இராது – எல்லாம் பெருங் குழப்பமாகிவிடும், இதுவே உலக அழிவு என்று கொள்ளப்படவேண்டும் என்ற கருத்துரைப்பார் உளர்.

எதிலிருந்து எது கிளம்பிற்றோ, அதனிடம் அது மீண்டும் ஈர்க்கப்பட்டு, முதல் அது எதுவோ, அது மீண்டும் அரசோச்சும் என்று கூறுவார் உளர்.

இத்துறையிலேயே மிகுதியாகச் சிந்தனையைச் செலவிட்டவர்களில், பல வகையினர் உளர்.

இருளிலிருந்து ஒளி பிறந்து, ஒளி மீண்டும் இருளாகும், இரைச்சலிலிருந்து ஒலியாயிற்று, ஒலி மீண்டும் இரைச்சலாகிவிடும், குழப்பத்திலிருந்து ஒழுங்கு பிறந்தது, ஒழுங்கு மீண்டும் குழப்பத்துக்கு இடம் கொடுத்துவிடும், அதுபோல் சூனியத்திலிருந்து வாழ்வு பிறந்தது, வாழ்வு மீண்டும் சூனியமாகிவிடும் என்று கூறுவோர் ஓர் வகையினர்.

இவ்வகையினரிலும் பல வகையினர் தோன்றினர், இன்னும் தோன்றியபடியும் உள்ளனர்.

அந்தப் பலவகையினரில் ஒருவகையினர், நிலையற்ற வாழ்வு இது, அழியப்போகும் அவனி இது, எனவே, இதிலே ஈடுபாடு கொள்வதும், முழ்கிக் கிடப்பதும் தேவையற்றது, தீதும் பயப்பது, தவிர்க்கப்படவேண்டியது, என்று கருத்தை மேற்கொண்டு, உலகை வெறுத்து ஒதுங்கியவர்கள்.

உலகை வெறுத்து ஒதுங்கியவர்களில் ஒருசாரார், அந்த நிலையிலேயும், எண்ணங்களை மடியச் செய்திடும் இயல்பினைப் பெறமுடியாதராகி உலகை வெறுத்ததன் பயனைக்காண முற்பட்டனர் – மற்றவர்க்கு எடுத்துக்கூறத் தலைப்பட்டனர். துறவு முறை என்பது ஏற்பட்டது.

இந்தத் துறவு முறையிலும், காலத்தின் கரமும் கருத்துகளின் மோதுதலும், பல உருமாற்றங்களையும் உரைமாற்றங்களையும் உணர்ச்சி மாற்றங்களையும் புகுத்திடவே, துறவுமுறை பற்றிய மதிப்பீடு எழவேண்டி நேரிட்டுவிட்டது. துறவு, துறவுதானா? துப்புரவானதுதானா? வேடமா? என்ற வினாக்கள் எழலாயின! விடைகள் தரப்பட்டன! தத்துவங்கள் தலைதூக்கின! அவைகட்குக்

குழுக்கள் ஏற்பட்டன! மதங்களாயின! மதங்களிடை மோதல்கள் மூண்டன! இருள்! இரைச்சல் குழப்பம்! மீண்டும் படை எடுத்தன! அழிவு, தன் அகன்ற வாயைத் திறந்து, பசிதீரப் பலிகேட்டது பெற்றது; பலியானவர்போக மற்றவர், நமக்குள் நடந்த சமர் போதும், இனி நமக்கும் அழிவுக்கும் மூண்டுவிட்ட சமர் தான் முக்கியம் என்ற தெளிவுபெற்று, அவரவர்க்கு விருப்பம் உள்ளது அவரவருடையது என்று ஓர் ஏற்பாட்டினைச் செய்துகொண்டு, இருளும் இரைச்சலும் குழப்பமும் பெற இருந்த வெற்றியைத் தடுத்து நிறுத்தினர். மதங்கள், முறைகள், ஒழுங்குகள், சட்ட திட்டங்கள் இவை பல்வேறு வகைகளாய், ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்கும் மனமற்ற நிலையில் ஆனால், ஒன்றை ஒன்று தாக்கிக்கொள்ளும் போக்கினைக் கண்மூடித்தனமாக மேற்கொள்ளாமல், இருந்திடக் காண்கிறோம்.

அவ்வப்போது காணப்படும் கசப்புணர்ச்சி, கலவர உணர்ச்சி, பகை உணர்ச்சி ஆகியவை ஓர்போது ஆதிக்கம் செலுத்திவந்த, இருள், இரைச்சல், குழப்பம், ஆகியவைகள், இழந்த இடத்தைத் திரும்பப்பெற ஏவிவிடும் கணைகள் என்னலாம்.

பெரும் போர் ஓய்ந்திருக்கிறது, போர் உணர்ச்சி மடிந்துவிடவில்லை என்பதனையே இந்நிலை எடுத்துக்காட்டுகிறது.

போர் மூளாது என்று எண்ணி, 'நிம்மதி' பெறத்தக்க நிலை இல்லை; என்றேனும் அத்தகைய நிம்மதி ஏற்படுமா என்பது ஐயப்பாட்டுக்கு உரியதே – எனினும், போர் நிறுத்தப்பட்டு இருக்கிறது.

விளைவுபற்றிய நடுக்கம், விழைவைத் தடுத்துப் பிடித்து நிறுத்திவைத்திருக்கிறது.

இந்நிலையினை எண்ணிப்பார்த்து நடவடிக்கைகளில் ஈடுபடுவோரே, பெரும்பாலான மக்கள் என்று கூற இயலாது. பெரும்பாலான மக்களுக்கு, இந்த நிலைபற்றிய எண்ணம் குடைவதுகூட இல்லை. அங்ஙனம் ஓர் எண்ணம் அவர்களைக் குடைந்திடாமல் இருப்பதும் நல்லதற்கே என்று கூறலாம்; ஏனெனில், அப்படிப்பட்ட எண்ணத்தில் பெரும்பாலான மக்கள் ஈடுபட்டு இருப்பார்களானால், சுழலமுடியாத சக்கரம் பூட்டப்பட்ட வண்டியின் நிலை உலகில் ஏற்பட்டுவிடும்.

மிகப் பெரும்பாலான மக்களின் பிரச்சினைகள் வேறு! அவர்களின் நேரம் நினைப்பு, உழைப்பு, அறிவாற்றல் யாவும், அவர்களுக்கென்று ஏற்பட்டுவிட்ட பிரச்சினைகளைக் கவனிப்பதற்கே போதுமானதாக இல்லை. இல்லாததால்தான் மக்களின் மிகப் பெரும்பாலானவர்கள் முக்கியமானவை என்று கருதும், அரசியல் முறை. பொருளியல் திட்டம், சமுதாய அமைப்பு என்பன போன்ற பிரச்சினைகளை மக்களே கவனித்துத் தீர்வு காண முடியாத நிலை ஏற்பட்டு அந்தப் பிரச்சினைகளைக் கவனித்துத் தீர்வு காண்பதை மேற்கொண்டுள்ள அரசியல்வாதிகள், பொருளியல்வாதிகள், சமூக திருத்தவாதிகள் பலகாலமாகவே பல்வேறு வகையினராகப் பணியாற்றியபடி உள்ளனர்.


துறவு மேற்கொண்டு காட்டிடை காலந்தள்ளாது, நாடு தங்கியதனால்தான், எண்ணற்ற சிக்கல்கள், எல்லையற்ற தொல்லைகள் ஏற்பட்டுவிட்டன என்று கூறத்தோன்றும் சிற்சிலவேளைகளில்.

"இந்தத் தொல்லைகளை எல்லாம் பார்க்கிறபோது! காவி கட்டிக்கொண்டு, இராமா!

கிருஷ்ணா! கோவிந்தா, என்று எங்காவது விழுந்து கிடக்கலாம்'' – என்று சலிப்பும் சங்கடமும் சிக்கலும் ஏற்படுகிறபோது, பலர் பேசக் கேட்கிறோம்.

இந்தப் பேச்சு, சலிப்பின் காரணமாக எழுந்த அலையாக மட்டுமின்றி, ஒரு அழுத்தமான எண்ணமாக, ஒருவர் இருவருக்கு அல்ல, மாந்தர் அனைவருக்கும், அல்லது மிகப் பெரும்பாலானவர்களுக்கு ஏற்பட்டுத் துறவு முறையிலே நுழைந்து விடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்; என்ன நேரிடும்?

''ஏழெட்டுப் பேர் வீடு வாயிலைத் துறந்து காட்டில், கந்த மூலங்களையே புசித்துக் கண்மூடி மௌனியராக இருக்கலாம். ஆனால் எல்லோரும் இந்தப் பாதையிலேயே சென்றால், துறவறத்திற்காகப் பெரும் போரே நேரும். மரவுரியே கிடைப்பது அரிதாகிவிடும். குகைகளில் வசிக்க இடம் இராது. கனியும்–கிழங்கும் எல்லோருக்கும் பற்றாது போய்விடும். அந்த நெருக்கடியில் இடுப்புடை உடுத்த வைராகிகள் துப்பாக்கியால் ஒருவரையொருவர் சுட்டு வீழ்த்திக் கொள்வர்''.


ரவீந்திரநாத் தாகூர்

என்று கூறினார். வங்கப் பெருங்கவிஞர் தாகூர்.

எனவே, துறவு மேற்கொண்டு, தொல்லைகளைத் தீர்த்துவிட முடியாது.

'போட்டி' அதிகம் இல்லாத துறையாகத் துறவு இருப்பதனாலேயே, மற்றவர்களால் மதிக்கப்படுகிற நிலையில், துறவுத் துறையினர் இன்று இருக்க முடிகிறது.

துறவு அல்ல, துயரத்துக்கு இடம் கொடுத்துவிடுவதனாலும் அல்ல, தொல்லைகளைத் தீர்த்துக்கொள்வது, பொறுத்துக் கொள்ளுதல், பொழுது புலரும் என்ற நம்பிக்கை பெறுதல், முயற்சித்தால் முடியும் என்ற உறுதி கொள்ளுதல், கூடிப் பணியாற்றினால் கேடில்லா நிலை காணலாம் என்ற தெளிவு பெறுதல், இவைகளே, வாழ்க்கைச் சிக்கலால் தாக்கப்படும்போது, நிலைகுலையாமல், மாந்தர் இருப்பதற்குத் தேவையானவை.

இதில் வியப்பு என்னவென்றால், எப்படியோ, மிகப் பெரும்பாலானவர்கள், இந்தக் கருத்துகளை மேற்கொண்டவர்களாகி, உலகை நடத்திச் செல்கின்றனர்.

இந்நிலையினை மற்றவர் எடுத்துச் சொல்லும்போது கூட, அவர்களுக்கு வியப்பு ஏற்படலாம், திகைப்பு உண்டாகக்கூடும். அச்சம்கூட எழக்கூடும். ஆனால், அவர்களின் போக்கு, இந்தக் கருத்துக்களின்மீது, எப்படியோ கட்டப்பட்டு நிற்கிறது; பயனும் அளித்து வருகிறது.

மருட்டும் சக்திகளுக்கு இடையிலே மனிதன் எப்படியோ தன் நிலையைக் குலைத்துக்கொள்ளாமல், கால் ஊன்றி

நிற்கிறான். அந்த அளவிலும் வகையிலும் மனிதனிடம், சக்தி இருக்கிறது. அது மறைந்து இருக்கிறது! தேவைப்படும்போது, அந்தச் சக்தி வெளிவருகிறது; வெற்றியும் பெரும் அளவு பெற்றுத் தருகிறது.

கண்ணைப் பறிக்கும் மின்னலை, மனிதன் ஏதும் செய்திட முடியாது – எனினும், கண்களை இறுக மூடிக் கொள்கிறான் – மிகப்பெரும் அளவுக்கு மின்னல் அவனை ஏதும் செய்திட முடிவதில்லை. கண் திறந்தபடி இருப்பின், விழியை அழித்திட இயலும், மின்னலினால், மின்னலின் அழிவுச் சக்தி அதிக நேரம் இருப்பதில்லை அதன் சக்தியை, மனிதன் கண்களை இறுக மூடிக்கொள்வதன் மூலமே பெரும் அளவுக்குச் செயலற்றதாக்கி விட முடிகிறது. மூண்டுவிடும் பெரு நெருப்பை அணைத்துவிட முடிகிறது; நெருப்பு அழிவையே உண்டாக்கிவிட்டாலும், அழிவின்மீதே மீண்டும், புது அமைப்பை ஏற்படுத்திக்கொள்ள முடிகிறது. பெரு நெருப்பு, மனிதனைவிட வலிமை பெற்றுத்தான் இருக்கிறது, ஆனால் அவன் அணைத்திட முனைந்தால் நெருப்பு, மடிகிறது; மடிந்தது. மீண்டும் மனிதனைக் கேலி செய்யும் முறையில், உயிர் பெற முடிவதில்லை. மனிதனோ, அழிவை உண்டாக்கிய நெருப்பைக் கேலி செய்வதுபோல, அது ஏற்படுத்திவிட்ட அழிவின்மீதே புது அமைப்பு ஏற்படுத்துகிறான். அம்மட்டோ! அழிவு மூட்டிய நெருப்பையே தன் அடுப்புக்குள் சிறை வைத்து, அதனைக் கொண்டே தனக்குத் தேவையான காரியத்தைச் செய்துகொள்கிறான். வேலை வாங்குகிறான்!!

> ***மருட்டும் சக்திகளுக்கு இடையிலே மனிதன் எப்படியோ தன் நிலையைக் குலைத்துக்கொள்ளாமல், கால் ஊன்றி நிற்கிறான். அந்த அளவிலும் வகையிலும் மனிதனிடம், சக்தி இருக்கிறது. அது மறைந்து இருக்கிறது! தேவைப்படும்போது, அந்தச் சக்தி வெளிவருகிறது; வெற்றியும் பெரும் அளவு பெற்றுத் தருகிறது.***

இயற்கைக்கு உள்ள ஆற்றல் அளவிட முடியாதது; அளவெடுக்கும் வேலை இன்றும் மும்முரமாக நடைபெற்றபடி இருக்கிறது. பல துறைகளிலே இதிலே வெற்றி கிட்டியபடி இருக்கிறது.

இயற்கையின் உருவமும் வலிவும், மக்களை மிரட்டிய காலம் மாறி, இன்று மனிதன், இயற்கையை ஆராய்கிறான்; வலிவுக்கான காரணம் என்ன என்று கண்டறிகிறான். அழிவுச் சக்தியையே ஆக்கும் சக்தியாக மாற்ற முற்படுகிறான்!

அணுவையே பிளந்து பார்த்துவிட்டான். 'அண்ட சராசரம்' என்ற சொற்றொடரில் புதைந்துள்ள பொருளைக் காண முனைகிறான். சந்திர மண்டலம் செல்வேன் – செவ்வாய் கிரகத்தில் குடியேறுவேன் – என்று சூளுரைத்துச் செயல்படுகிறான். அது வெற்றுரையாகவுமில்லை! எத்தனையோ காலமாக மறைந்துகிடந்த 'மர்மங்களை'க் கண்டறிகிறான்.

மனிதனின் அறிவாற்றலுக்கும் இயற்கையின் ஆற்றலுக்கும் கடுமையான

போட்டி மூண்டுவிட்டது. மனிதன் பேசுகிறான், எனவே அவன் என்ன எண்ணுகிறான் என்ன செய்கிறான் என்பது நமக்குப் புரிகிறது. இயற்கை பேசுவதில்லையே! – ஆகவே, இயற்கை என்ன எண்ணுகிறதோ, என்னென்ன செயலில் ஈடுபடத் திட்டமிடுகிறதோ, எப்படி அறிந்து கொள்ள முடியும்!

ஆனால், இதை எண்ணித் திகைப்படைந்து, நமக்கேன் வீண்வேலை, ஒன்றை எண்ணிக்கொண்டு நாம் ஆராயத் தொடங்கி வேறே எதிர்பாராத விபத்துகள் ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது, நாம் இருக்கப்போவதோ சிறிது காலம் – நமது தேவைகளோ மிகச் சாதாரணம், – இந்நிலையில் உள்ளதைக் கொண்டு மன நிறைவு கொண்டு இருந்துவிடுவோம், இயற்கையை ஆராய்வது என்ற எண்ணத்தில், 'கிரகங்களை'க் கண்டறியும் 'ஆபத்தான விளையாட்டு' நமக்கு ஏன் என்று எண்ணவில்லை. மாறாக, ஏன் இயற்கை இவ்வளவு மர்மமாக இருக்கவேண்டும், எத்தனை காலத்துக்கு இப்படியே இயற்கையை விட்டுவைப்பது என்ற ஆர்வம் எழுகிறது; முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டபடி இருக்கிறான்.

கிரகங்கள் மனிதனுடைய வாழ்வினை ஆட்டிப்படைக்கும் சக்தி பெற்றவை என்று ஜோதிட விற்பன்னர்கள் கூறிக்கொண்டிருந்த காலம் மாறி, மனிதன், அந்த கிரஹங்களை ஆராய்ந்து பார்த்து, அவைகளில் எவை எவைகளைத் தனக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஆராயத் தலைப்பட்டுவிட்டது. சென்ற நூற்றாண்டிலே துவக்கப்பட்டு இந்த நூற்றாண்டு மிக வேகமாக வளர்ந்துள்ள விந்தை முறையாகும்.

**இயற்கைக்கு உள்ள ஆற்றல் அளவிட முடியாதது; அளவெடுக்கும் வேலை இன்றும் மும்முரமாக நடைபெற்றபடி இருக்கிறது. பலதுறைகளிலே இதிலே வெற்றி கிட்டியபடி இருக்கிறது.**

**இயற்கையின் உருவமும் வலிவும், மக்களை மிரட்டிய காலம் மாறி, இன்று மனிதன், இயற்கையை ஆராய்கிறான்; வலிவுக்கான காரணம் என்ன என்று கண்டறிகிறான். அழிவுச் சக்தியையே ஆக்கும் சக்தியாக மாற்ற முற்படுகிறான்!**

இயற்கையை ஆராய முற்பட்டவர்கள், முதலிலே கூறிய கருத்துகள், துணிகரமானவை என்று மட்டுமல்ல, பைத்யக்காரத்தனமானவை என்று பலராலும் கருதப்பட்டன.

"சந்திரமண்டலமா போகமுடியும்?"

"ஏன் முடியாது! அங்கு மட்டுமா? செவ்வாய் மண்டலம்கூடப் போகலாம்."

"எதற்காகப் போகவேண்டும்?''

"ஒரு ஆர்வம்! அங்கு நிலைமை எப்படி என்று அறிந்துகொள்ள ஒரு துடிதுடிப்பு!! மர்மம் விளக்கப்பட வேண்டும் என்பதிலே உள்ள பேரார்வம்"

"அரிப்பு என்று சொல்லுங்கள். இதற்காக இவ்வளவு கஷ்ட நஷ்டத்தை மேற்கொள்ள வேண்டுமா? பலன் என்ன, அங்கு போவதால்?"

“உலகுக்கு, இதுவரையில் தெரியாமலிருந்த தகவலைத் தேடித்தருவதுதான் முக்கியமான பலன். அறிவு வளருகிறது.”

“போதுமே, தெரிந்திருக்கிற விஷயம். அதுவே ஏராளமான அளவு இருக்கிறது. புதிய தகவல்கள் எதற்காக? வேண்டியதில்லை பொருள் கிடைக்குமா, நிறைய? புதிது புதிதாக?”

“கிடைக்கக்கூடும். கந்தகம், இரும்பு, தங்கம், இன்னும் இதுவரை நாம் கண்டறியாத பொருள்கள்கூடக் கிடைக்கக்கூடும்”

“செலவு மலைபோல ஆகுமே சந்திர மண்டலம் போய்வர, அவ்வளவு செலவு செய்தாலும், இலாபம் கிடைக்கும் அளவு பொருள் கிடைக்குமா?”

“கிடைக்கும்! அதுமட்டுமல்ல, ஆரம்பத்திலே, சந்திரமண்டலம் போவதற்கு ஆகிற செலவு, படிப்படியாகக் குறையுமே, முறைகள் செம்மைப்பட்டதும்.”

“உன் பேச்சை நம்பிச் சந்திரமண்டலம் சென்ற பிறகு, அது வெறும் ‘சமாதி’யாக இருந்தால்?”

“சமாதியாக இல்லை. எனக்குத் தெரியும். அங்கும் உயிரினங்கள் உள்ளன.

“போய் வந்தவன் போலவே பேசுகிறாயே.”

“ஆராய்ச்சியால், கண்டதைக் கூறுகிறேன். வந்தால், காணலாம்.”

சந்திரமண்டலத்தில் முதல் மனிதன் என்ற கதை வடிவ நூலில், ஆங்கில நாட்டுப் பேரறிவாளர் H.G. வெல்ஸ் என்பார், இந்தக் கருத்துப்பட, உரையாடல் நடந்ததாக எழுதுகிறார்.



சந்திரமண்டலப் பயணத்துக்காக அமைக்கப்பட்ட ‘வானரத’ம் ஏறி, இருவர் செல்கின்றனர். காகரீனும் மற்றவர்களும், என்னென்ன உணர்ச்சிகள் விண்வெளிப் பயணத்தின்போது நமக்கு ஏற்பட்டதாகக் கூறுகிறார்களோ, ஏறக்குறைய அதேவிதமான உணர்ச்சிகள் அனுபவங்கள், வெல்ஸ் எழுதிய கதையிலே, சந்திரமண்டலம் சென்றவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. உடலின் கனமே குறைகிறது! மனதுக்கு ஒரு தெம்பு பிறக்கிறது! சாப்பிடுகிறார்கள்! பேசிக்கொள்கிறார்கள்! உறங்கக்கூடச் செய்கிறார்கள்!

சந்திரமண்டலம் செல்கிறார்கள். பார்த்தால், எங்கும் புல்பூண்டுகூட இல்லை. பாழ்நிலமாகத் தெரிகிறது. பெரிய பெரிய எறும்புப் புற்றுகள் உள்ளன; அகன்ற வாயுடன் மற்றப்படி ஒன்றும் காணோம்.

கதிரவன் கிளம்புவது தெரிகிறது; உடனே ஓர் விந்தையும் நிகழ்கிறது.

தரைமீது கிடந்த சிறுசிறு கூழாங்கற்களைப் போன்றவைகள், கதிரவன் ஒளிபட்டதும், அசைகின்றன!!

உயிர்! ஆமாம்! சந்திரமண்டலத்தில் உயிர்ப்புச் சக்தி இருக்கிறது!! என்று

பேசிக்கொள்கின்றனர். பார்த்துக் கொண்டிருக்கும்போதே அசைந்த அந்தச் சிறு உருவங்கள், வெடிக்கின்றன, முனை வெளிவருகிறது. இலைகள் வெளிவருகின்றன, விநாடிக்கு விநாடி வளர்ந்து முட்செடிகளாகின்றன; அவை கூழாங்கற்கள் அல்ல, விதைகள் என்பது புரிகிறது.

இங்கு செடிகள் வளர மாதக் கணக்காகின்றன.

சந்திரமண்டலத்திலே, பார்த்துக் கொண்டிருக்கும்போதே, பாழ் வெளிபோல் தோற்றமளித்த இடமெங்கும், பச்சை நிறம் கொண்ட செடிகள் முளைத்து, வளர்ந்து, அடர்ந்துவிடுகின்றன.

உயிர் வளர்ச்சி, சந்திரமண்டலத்திலே மிக வேகமாக நடைபெறக்கூடும், என்ற கருத்தைக்கூற, வெல்ஸ் இப்படி ஒரு காட்சியைக் காட்டுகிறார், கதை வடிவு அமைந்த, தமது நூலில்.

இங்கு உள்ளதைவிடச் சந்திரமண்டலத்தில், பிராணவாயு அதிக அளவில் இருக்கிறது என்பது வெல்ஸ் கூறிடும் கருத்தாகும்.

அதனால்தான், இங்கு செடிகள் வளர மாதக்கணக்காகின்றன என்றால். சந்திரமண்டலத்தில், பார்த்துக் கொண்டிருக்கும் போதே, செடிகள் அடர்த்தியாக வளர்ந்து விடுகின்றன.

சிறு குன்றுகள்போன்ற அளவில், மேற்புறத்தில் அகன்ற வாயுடன் உள்ள எறும்புப்புற்றுகளில் இருவரும் இறங்கு கின்றார்கள்; குதிக்கிறார்கள்.

அங்கு அவர்கள் 80–அடி கனமும் 200–அடி நீளமும் உள்ள கால்களற்ற சந்திரமண்டலக் கன்றுக்குட்டிகளை, ஐந்தடி உயரமுள்ள சந்திரமண்டலத்தான் மேய்த்துக் கொண்டிருக்கக் காண்கிறார்கள்.

கதையிலே கூறப்பட்டுள்ள விந்தைகள், வெல்ஸ் கூற விரும்பும் கருத்துக்களுக்காக அமைக்கப்படுகின்றன என்ற போதிலும், அந்த நூலிலே காட்டப்பட்டுள்ள அடிப்படைக் கருத்துகளை, வெறும் கற்பனை என்று தள்ளிவிடுவதற்கு இல்லை. இன்று சந்திரனைப் படம் எடுத்திருக்கிறார்கள். வெல்ஸ் கதையிலே குறிப்பிடப்பட்டுள்ள குன்றுகள், வெடிப்புகள் மட்டுமின்றி, கடல்களும் உள்ளன என்று படம் காட்டுகிறது.

இதுபோல எண்ணற்ற விந்தைகளை, இயற்கை நெடுங்காலமாகத் தன் அகத்தே ஒளித்துவைத்துக் கொண்டிருப்பதை, எப்படியும்

**உயிர்! ஆமாம்! சந்திரமண்டலத்தில் உயிர்ப்புச் சக்தி இருக்கிறது!! என்று பேசிக்கொள்கின்றனர். பார்த்துக்கொண்டிருக்கும்போதே அசைந்த அந்தச் சிறு உருவங்கள், வெடிக்கின்றன, முனை வெளிவருகிறது. இலைகள் வெளிவருகின்றன, விநாடிக்கு விநாடி வளர்ந்து முட்செடிகளாகின்றன; அவை கூழாங்கற்கள் அல்ல, விதைகள் என்பது புரிகிறது.**

கண்டுபிடித்தே தீருவது என்று துணிந்து, செயலாற்றி வருகிறான் மனிதன்.

கதையிலேகூடச் சந்திரமண்டலம் சென்றவர்கள் 'அனுப்பிய கடைசிச் செய்தி'தான் குறிக்கப்பட்டிருக்கிறது; வெற்றிபெற்று வீடு திரும்பியதாக இல்லை.

இயற்கையின் இரகசியங்களைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டதிலே, பலர் தோற்றுப்போயுள்ளனர், பலர் பலியாகிவிட்டுள்ளனர், பலர் பாதிப்பாதி அளவே உண்மையைக் கண்டறிந்தனர். ஆனால், முயற்சி, கைவிட்டுவிடப்படவில்லை! தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இறுதியில், பேரிருளிலிருந்து ஒளிச் சிதறல்களும், பேரிரைச்சலிலிருந்து முறைப்படுத்தப்பட்ட ஒலிகளும், பெருங்குழப்பத்திலிருந்து ஒழுங்கும் ஏற்பட்ட நாட்கள் – நிலைமைகள் – தன்மைகள் குறித்துக்கூடக் கண்டறிய முடியும் என்ற நம்பிக்கை இன்று உலவுகிறது.

இத்தகைய ஆற்றல் மனிதனிடம், இருக்கிறது; இயற்கையை வெல்லும் ஆற்றல், இயற்கையைக் கட்டுப்படுத்தும் ஆற்றல், இயற்கையின் இதயத்தை அறிந்திடும் ஆற்றல்!

மனிதனுக்குப் பகை இயற்கை என்பது இன்று மாற்றப்பட்டு வருகிறது.

இயற்கையை எதிர்த்து நிற்கவும், மனிதன் துணிவு பெறுகிறான்; ஆற்றல் பெறுகிறான். எல்லாம் முடிகிறது, மனிதனால்; கடலில் ஆழம் காண, விண்வெளிப் பயணம் நடத்த கோளங்களை ஆராய்ந்திட இயற்கையின் இரகசியங்களைக் கண்டறிய!!

இவ்வளவும் அறிந்துகொள்ள முடிகிறது மனிதனால் என்றாலும், மனிதனை மனிதன் அறிந்துகொள்வதிலே மட்டும் இன்னமும் மனிதன் வெற்றிபெற முடியவில்லை! இந்த விந்தைக்கு என்ன சொல்வது!

பறவை போலப் பறந்திட, மீன் போல் நீந்திடக் கற்றுக்கொண்ட மனிதன், இன்னமும் மனிதனாக நடந்த கொள்ள முழுதும் கற்றுக்கொள்ளவில்லையே என்று கழிவிரக்கப் படுகிறார் ஓர் பேரறிவாளர், ஏன் ?

பழைய இருள், பழைய இரைச்சல், பழைய குழப்பம், மனிதனின் மனதைவிட்டு அடியோடு நீக்கப்படாததால்தான் போலும்!

ஆக மனிதன் ஒரேபோது, புறத்திலுள்ள இருளைமட்டுமல்ல, தன் அகத்திலேயே உள்ள இருட்டையும் ஓட்டியபடி இருந்தாக வேண்டியவனாகிறான்.

'ஓட்டியபடி' என்று கூறுவதன் காரணம், ஒரே அடியாக ஓட்டியேவிடுவது என்பது இயலாத காரியம் என்பதால் மற்றும் ஓட்டிவிடுவதிலே பெரும் அளவு வெற்றி கண்டு கொண்டிருக்கும் போதே, இருள் வேறோர் பக்கமிருந்து, மெள்ள நுழைந்துவிடவும் கூடும் என்பதாலும்.

இருளில் கிடக்கும் பொருளைக் கண்டெடுக்க, ஒளி விளக்குப் பொருத்தப்பட வேண்டும்.

பொருள் கிடைத்தானதும் விளக்கை அணைத்து வைக்கலாம், ஆனால், மீண்டும் தேவைப்படும்போது, எரியத்தக்க விதமாக விளக்கு இருக்கவேண்டும். இவை யாவற்றையும்விட, விழி பழுதுபடாமலிருக்க

வேண்டும். முகத்துக்கு விழி எனில், அகத்துக்கும் ஒன்று தேவை. அஃதே தூய எண்ணம் நமக்காக – நமக்காகவே – நமக்காக மட்டும் – பிறருடையதானாலும் நமக்கு – பிறரிடமிருந்து பறிக்கப்பட்டேனும் நமக்கு – பிறரை நாசப்படுத்தியேனும் நமக்கு – என்ற எண்ணமற்ற நிலையே மனத் தூய்மையைத் தரும். அது மேலும் நேர்த்தியுள்ளதாக வேண்டுமெனில், பிறருக்காக – நமக்கில்லா விட்டாலும் பிறருக்காக – அனைவருக்கும் என்ற வகையினது ஆகிவிடவேண்டும்.

தமிழர் இத்தகைய தூய்மை உள்ளம் பெற்றிருந்த நாட்கள் உண்டு; அதனை நினைவுபடுத்துவதுபோல அமைகிறது இத்திருநாள்! கடுகடுப்பு மறைகிறது, கலகலப்பு மிகுந்து காணப்படுகிறது! அவரும், இவரும், எவரும் எம்மவர்! என்று கூறத் தோன்றுகிறது. எல்லோருக்கும் எல்லாம் இருக்கட்டும் என்று வாழ்த்துகிறோம். அத்தகைய தூய்மையான உள்ளம் இந்தத் திருநாளில் எழக்காரணம் என்ன ?

பேரிருளும் பேரிரைச்சலும் பெருங் குழப்பமும் மாற்றி அமைக்கப்பட்ட நிலைக்குப் பிறகு, இயற்கையை மனிதன் தன் வழிப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சியில் முதல் முயற்சி, முதல் வெற்றி உழவு! உழவர் திருநாள் பொங்கற் புதுநாள்! கட்டாந்தரை கழனியாயிற்று! ஒன்று ஓராயிரமாயிற்று என்று கூறத்தக்க விதத்தில் விதைப்பது கூடை எனில், அறுத்தெடுப்பது வண்டி அளவு என்ற முறையில் உழவுத் தொழில் சிறந்து விளங்கலாயிற்று. வேட்டையாடி விலங்கினம்போல் வாழ்ந்த மனிதன், வீடு கட்டி மனை அறம் பேணத் தொடங்கியது, உழவு முறையிலே, மனிதன் கண்ட வெற்றியினால் தான்.

பெருஞ் சிறகடித்துப்பறக்கும் கழுகுகளுடன் மனிதன் போட்டியிட்டுக் கொண்டிருந்த காலம் மாறி, கிளியினைக் கூண்டிலிட்டு, கொவ்வைக் கனிகொடுத்து மகிழ்ச்சிபெறும் காலம் ஏற்படுவதற்குள், எத்துணை எத்துணை முயற்சிகள்! எண்ணும்போதே நெஞ்சு நடுக்குறும், அத்துணை ஆபத்துகளைக் கடந்திருக்கிறான். தோல்விகளால் துயருற்றிருக்கிறான், அல்லல்களை மேற்கொண்டிருக்கிறான்.

இரத்தம் ஒழுகும் வாயுடைய ஓநாய்கள், காட்டுப் பன்றிகள், காட்டெருமைகள், மருண்டோடும் மானினங்கள், கொல்லும் புலிகள் போன்றவைகள் இன்றும் உலவிடும் காடுகளில் கொன்றதைத் தின்று, இருகாற் பிராணியாக இருந்த மனிதன், இன்று நாடு ஆளவும், கலை பயிலவும், பண்பு காணவும் பல்கலைக் கழகம் அமைக்கவுமான, உயர்நிலை பெற்றுவிட்டான். தாவுவது தாக்குவது, பிய்ப்பது தின்பது, பதுங்குவது பாய்வது என்ற இயல்பிலிருந்து மிருகங்கள் தம்மை மாற்றிக்கொள்ள முடியவில்லை. மாறிட வேண்டிய தேவையும் எழவில்லை. மாறிடத்தக்கவிதமான சூழ்நிலை திருத்தி அமைக்கப்படவுமில்லை.

மனிதனோ, மிருக வாழ்க்கையை, இயல்பை மாற்றிக் கொண்டது மட்டுமல்ல, அந்த மாறுதலுக்கேற்ற சூழ்நிலையையும் திருத்தி அமைத்துக் கொண்டு விட்டான், அந்தச் சூழ்நிலை மனிதத் தன்மையை மேலும் செம்மைப்படுத்திக் கொள்ளத்தக்க மனிதத் தன்மையை மேலும் செம்மைப்படுத்திக் கொள்ளத்தக்கதாகவும் அமைந்திருக்கிறது. மனிதத் தன்மையிலிருந்து மாறிடத் துணிந்தால், கண்டிக்க அறவோர் உளர்; தண்டிக்க அரசு

இருக்கிறது. பாவம், மிருகங்களுக்கு எங்கே இவை கிடைத்துள்ளன! எப்போதும்போல, அடர்ந்த காடுகள், அருவி ஓரங்கள், சதுப்பு நிலங்கள், குகைகள், புலங்கள் இவைதாமே உள்ளன! புதரருகே எப்போதும் இருக்கும்போது பதுங்க, பிறகு பாயத்தோன்றாமல், வருக! அமருக! என்று பிறரை அழைக்கும் இயல்பா வளரும்! பசியாற்றிக்கொள்ள வேறு முறையே இல்லாதபோது, கொன்று தின்பதன்றி, கொடுக்கச்சொல்லி உண்டிடும் முறையா இருக்க முடியும்? ஆகவே, அன்று இருந்த நிலையிலேயே இன்றும் மிருகங்கள் இருப்பதனால், இயல்பு மாற வேண்டிய தேவையும் ஏற்படவில்லை, வாய்ப்பும் கிடைக்கவில்லை, வழியும் உண்டாகவில்லை. ஆகவே, மிருகங்கள் ஈடுபடும் செயல்களிலிருந்து நாம் தப்பிப் பிழைக்க வழி என்ன என்று எண்ண வேண்டுமே தவிர, மிருகங்களே! நாங்கள் எவ்வளவோ மாறிவிட்டோமே! இயல்புகளை மாற்றிக்கொண்டுவிட்டோமே! நல்லவர்களாகி விட்டோமே! நீங்கள் மட்டும் ஏன் இன்னமும் இரத்தம் குடிக்கும் இயல்பினை விட்டொழிக்காதிருக்கிறீர்கள்?" என்று மிருகங்களைப்போய்க் கேட்கவா முடியும்!

தமது எண்ணத்தைத் தெரிவிக்கும் முறையை மிருகங்கள் பெற்றிருந்தால் அவை அல்லவா நம்மைக் கேட்கும்! எல்லா வசதிகளும் வாய்ப்புகளும் இருந்தும், மனிதனே! நீ, ஏன் சிற்சில வேளைகளிலே, மிருககுணத்தைவிட மறுக்கிறாய்! என்று. உண்மையும் அது தானே! அதை நாமே பிறரைப்பற்றிப் பேசும்போது, எடுத்துக்காட்டுகிறோமே.

*கழுகு போலக் கொத்துகிறான்*
*பாம்பாகச் சீறுகிறான்*
*தேளாகக் கொட்டுகிறான்*
*ஆந்தைபோல அலறுகிறான்*
*குரங்குத்தனம் செய்கிறான்*
*பூனைபோன்ற வஞ்சகன்*
*எருமைக்கடா போன்ற முரடன்*
*தவளைபோலக் கத்துகிறான்*
*வண்டுபோலக் குடைகிறான்*
*கிடக்கிறான் கழுதை!*
*அடித்து விரட்டு நாயை!*
*நரிக்குணம், அவனுக்கு*
*புலிபோலப் பாய்கிறான்*
*ஒட்டகம் போல முதுகு*
*ஓநாய்போலச் சுபாவம்*
*எலிபோலத் திருடுவான்*
*கரடியாய்க் கத்துவான்*
*ஆமைபோல நகருவான்*
*உடும்புப்பிடி பிடிப்பான்*

என்றெல்லாம், பேசுகிறோம். என்ன பொருள் தெரிகிறது? மனிதனிடம் மிருக இயல்பு மறைந்திருக்கிறது, புற்றரவுபோல! எந்த நேரத்திலும் தலை தூக்கலாம்! எப்போதும் விழிப் போடு இருந்தாக வேண்டும்!!

மிருகம், கூண்டில் அடைக்கப்பட்டால், வெளியே வராது பிறருக்கு ஆபத்து ஏற்படாது.

மனிதனிடம் உள்ள மிருக இயல்பு, கூட்டிலே அடைக்கப்பட்ட மிருக மல்லவே! தாளுமில்லை, கதவுமில்லை, மனமெனும் அறையில்! எனவே, எந்த நேரத்திலும், மிருக இயல்பு வெளிக்கிளம்பிவிடக் கூடும்.

*அடித்துவிட்டான்.*
*வெட்டிவிட்டான்,*
*குத்திவிட்டான்.*
*பெயர்த்துவிட்டான்,*
*பிளந்துவிட்டான்.*

*ஒடித்துவிட்டான்,*
*உதிர்த்துவிட்டான்,*
*கொன்றுவிட்டான்,*
*புதைத்துவிட்டான்,*
*கண்ணை அவித்தான்,*
*காதை அறுத்தான்.*

என்றெல்லாம் கேள்விப்படுகிறோமே, என்ன தெரிகிறது அந்தப் பேச்சிலிருந்து? மனிதன், மிருகம் செய்வதை எல்லாம் செய்யக் கூடியவன் – செய்துகொண்டு இருந்தவன் – ஏமாந்தால், மீண்டும் செய்யக்கூடியவன், என்றல்லவா தெரிகிறது. கூட்டில் அடைக்கப்படாத, கொல்லும் தொழிலை விட்டுவிடாத மிருகம், மனித உள்ளத்திலேயே பதுங்கிக் கொண்டிருக்கிறது. காட்டிலுள்ள மிருகங்களால் நாட்டிலுள்ளவர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துகளைவிட, நாட்டிலுள்ள, மிருகத்தனத்தை மாய்த்துக்கொள்ளாத மனிதர்களால் மற்ற மனிதர்களுக்கு ஏற்படும் கேடுகளும், ஆபத்துகளும் தான் மிக அதிகம்.

காடு எனில், அச்சத்துடன், நேரம் பார்த்து, வழி பார்த்து நடப்போம்.

நாடு! எனவே நம்பிக்கையுடன், தன்னிச்சையாக மக்கள் உலவுவர்!

அந்தப் பாதுகாப்பற்ற நிலையிலே, மனிதன் பாயும் புலியானால், படமெடுக்கும் பாம்பானால், கொட்டும் தேளானால், கொத்தும் கழுகானால், மற்ற மனிதர்களின் கதி என்ன ஆகும்? நினைக்கும்போதே நடுக்கம் ஏற்படுமல்லவா?

மனிதன் ஏன் இன்னமும் மிருக இயல்பிலிருந்து அடியோடு விடுபடவில்லை? மனிதன், முன்னம் இருந்து வந்த இருளிலிருந்து, விடுபட்டு வெளிவந்தவன்; மீண்டும் மீண்டும் அவனைச் சிறையெடுக்க இருள் முயற்சி எடுத்தபடி இருக்கிறது. அதனால்தான், மனிதனிடமிருக்கும் மிருக இயல்பு மடிந்துபடவில்லை!

அறநூற்கள் தீட்டப்பட்டிருப்பதும், அரசுகள் அமைக்கப்பட்டிருப்பதும், மனிதனுடைய மிருக இயல்பு வெடித்து வெளிக்கிளம்பி, மற்றவர்க்குப் பெருங்கேடாய் விளைந்துவிடாமல் பார்த்துக்கொள்ளத்தான்.

மிருக இயல்பு சில மனிதரிடம் சில வேளைகளில் வெளிப்படும்போது, அரசு குறுக்கிட்டுத் தண்டிக்க முன்வருகிறது. அதுகண்டு, மிருக இயல்பு வெளிப்பட இடம் தரமாட்டார்கள் என்பதனை அறிந்து மற்றவர் அடங்குவர் என்பது அடிப்படைக் கருத்தாக அமைந்திருக்கிறது. ஆனால், அது போதாது! மனிதனிடம் மிருக இயல்பு எழவிடாதபடி சுற்றுச் சார்பு அவ்வப்போது திருத்தி அமைக்கப்படுவதில், அரசு, பெரும் கவலை எடுத்துக் கொள்ளவேண்டும்; பொறுப்பேற்க வேண்டும்.

அவ்விதமான பொறுப்பினை மேற்கொள்ளாத அரசு, பூமிக்குப் பாரம் என்கிறார், வள்ளுவர்.

*கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது*
*இல்லை நிலக்குப் பொறை.*

கடுங்கோலாகிய ஆட்சிமுறை கல்லாதவரைத் தனக்கு அரணாகச் சேர்த்துக்கொள்ளும். அதைவிடச் சுமை பூமிக்கு வேறு இல்லை! என்பது பொருள்.

பூமியின்மீது மலைகள் மரங்கள் உள்ளன; மாந்தர் உளர்; மிருகங்கள் உள்ளன! கேடு

செய்யும் விலங்கினங்களும் உள்ளன; ஊர்வனவுள்ளன; அவைகளை வள்ளுவர், சுமை என்று கூறவில்லை. கல்லாதாரின் ஆட்சியைத்தான் பூமிக்குப் பாரம் என்று கூறுகிறார்.

திருடர்களைத் தண்டிக்கவேண்டியது அரசின் கடமை; மறுப்பார் இரார்! ஆனால் நல்லரசின் பொறுப்பு, திருடு நடத்தியே பிழைக்க வேண்டிய நிலையில் உள்ளவர்கள் எந்த சூழ்நிலையில், குற்றம் புரிகிறார்களோ, அந்தச் சூழ்நிலையைத் திருத்தி அமைப்பதாகும்.

பழந்தமிழ் மன்னர்கள், அறவோரின் உரைகேட்டு நடந்தகாலை, களவு கொலை கற்பழித்தல்போன்ற கேடுகள் எழாத சூழ்நிலையை அமைத்திடுவதில், கண்ணுங் கருத்தமாக இருந்துவந்தனர்.

தன் ஆட்சியிலே, மக்கள், குற்றமிழைப்போராகி விட்டால், தண்டனைக்கு உரியவர்களாகக் குற்றவாளிகள் ஆனபோதிலும், கண்டனத்துக்கு உரியவர்கள், தாமே என்று உணர்ந்து, ஆட்சி நடத்திவந்தனர், அன்றைய மன்னர்கள். மன்னர்கள் மட்டுமல்ல, மக்களும், அத்தகைய பொறுப்புணர்ச்சி உள்ளோராகத் திகழ்ந்தனர் என்பற்கான சான்றுகளும் உள்ளன, அந்நிலை இன்றில்லை என்பதுமட்டுமின்றி, குற்றங்களின் தன்மையே இன்று விரிவாகிப்போய்விட்டது.

"பிறரிடத்தில் அன்பில்லாமையினால், உலகத்தில் களவுகளும், புரட்டுகளும், ஒழுங்கின்மைகளும், நிறைந்திருக்கின்றன.

"கள்ளர்கள் இரவில் எப்போதாவது புதுப்பிறை இருட்டில் களவாடுகிறார்கள். நாள்தோறும் பட்டப்பகலில் எல்லோரும் அறிய நடக்கிற களவுகளுக்கு அளவில்லையே. பொருளவாவினால், பொய்யாணை யிடுகிறவர்களும், பொய்ச்சான்று சொல்கிறவர்களும், பொய்ச் சீட்டு உண்டுபண்ணுகிறவர்களும் பொய்வழக்குச் செய்கிறவர்களும், தங்களுடைய ஆற்றலுக்கு மேற்பட்ட கடன் வாங்குகிறவர்களும், வாங்கின கடனைக் கொடாதவர்களும், முறையற்ற வட்டி வாங்குகிறவர்களும், அடைக்கலமாக வைத்த பொருளைக் கவர்ந்து கொள்ளுகிறவர்களும், வேலை செய்யாமல் கூலிவாங்குகிறவர்களும், ஏழைகளிடத்தில் வேலை வாங்கிக்கொண்டு, கூலி கொடாதவர்களும், செல்லாப் பணத்தைச் செலுத்துகிறவர்களும் அளவிலும், நிறையிலும் வேறுபாடு செய்கிறவர்களும், சரக்குகளுக்கு மிகுந்த விலைவாங்குகிறவர்களும், நல்ல சரக்குக்கு விலைவாங்கிக்கொண்டு, கெட்ட சரக்குகளைக் கொடுக்கிறவர்களும், சூதாடிப் பொருள் தேடுகிறவர்களும், கண்டெடுத்த பொருளை, சொந்தக்காரர்களைத் தேடிக்கொடாதவர்களும், பிறர் பொருளைப் பார்த்துப் பொறாமை கொள்ளுகிறவர்களும், களவுப் பொருளை வாங்குகிறவர்களும், களவுக்கு உதவி செய்கிறவர்களும், களவாடும்படி பிறருக்குக் கற்பிக்கிறவர்களும் பிறருக்குப் பொருள் இழப்பு உண்டாகும்படி செய்கிறவர்களும், கையில் பொருளை வைத்துக்கொண்டு ஏழைகளுக்கு ஐயம் இடாதவர்களும், பணம் வாங்கிக்கொண்டு பெண் கொடுக்கிறவர்களும், பட்டப் பகலில் கொள்ளையடிக்கிற கள்ளர்களே!

"அன்றியும், எளியவர் தாங்கக்கூடாத நாட்டு வரி, காட்டு வரி, வீட்டு வரி, மாட்டு வரி, ஆட்டு வரி, ஓட்டு வரி, சீட்டு வரி, கூட்டு வரி, பாட்டு வரி, மேட்டு வரி, தீட்டு வரி, ரோட்டு வரி, கோட்டு வரி, ஈட்டு வரி, சாட்டு வரி முதலிய கேட்டு

வரிகளைச் சுமத்தி, ஒழுங்கின்மை செய்த ஆட்சியாளர்கள் முறைமையற்றவர்களே!

கைக்கூலி வாங்கிக்கொண்டு, ஒருதலைப்பக்கம் முடிவு செய்கிற சில வழக்குமன்றத் தலைவர்கள் கொடியவர்களே! எப்போது குடும்பங்களிற் கலகம் உண்டாகும்? எப்போது வழக்கு வருமென்று கருத்தாய்க் காத்துக்கொண்டிருக்கிற சில முறைமன்றத் தலைவர்கள் வஞ்சகர்களே! யாருக்கு காய்ச்சல் வரும்? யாருக்கு வயிற்றுப் போக்கு வரும்? யாருக்குத் தலை உடையும், யாருக்குக் கைகால் ஒடியும் என்று வேண்டிக் கொண்டு, தங்களுடைய பிழைப்புக்காகப் பிள்ளைவளர்ப்பது போல், நோயை வளர்த்துவிட்டுக் கொண்டு பிழைக்கிற சில மருத்துவர்கள், வன்னொஞ்சக் கள்ளர்களே!"

வேதநாயகம் பிள்ளை மனம் வெதும்பிக் கூறினார் இவ்விதம்,

இல்லாமையால் களவாடிய நிலை மட்டுமல்லாமல், இருப்பதைப் பெருக்கிக் கொள்ள நடைபெறும் பகற்கொள்ளைகள் தடுக்கப்பட்டாக வேண்டிய பொறுப்பினை நல்லரசு ஏற்றுக் கொள்ளவேண்டும். இல்லையெனில் ஏமாளி பிடிபட்டான், எத்தன் கொடிகட்டி வாழ்கிறான் என்ற நிலை ஏற்படும். அது சமுதாய அமைப்பைப் பாழ்படுத்தும். அரசு யாருக்காக இருக்கிறது என்ற ஐயப்பாட்டை உண்டாக்கி, அரசிடம் மக்கள் வைக்கவேண்டிய நம்பிக்கையையும், மதிப்பையும் குலைத்துவிடும். அது குலைந்துவிடின், அடிப்படை தகர்ந்த கட்டிடமாக நாடு ஆகிவிடும் – பேரிருளும், பேரிரைச்சலும்; பெருங்குழப்பமும் படை எடுத்துப், பலி கேட்கும்; பெறும்!!

உலகிலே எனக்கு முன்பு இருந்தவர்கள் தொண்டாற்றியதன் பலனை நான் இன்று துய்க்கிறேன்; என் வாழ்வுக்கு உறுதுணையாக அமைந்துள்ளன பலவும், முன்னம் சிலர் பலர் செய்தளித்தவை. அவைகளை அனுபவித்துக்கொண்டுள்ள நான், கடனைத் திருப்பிச் செலுத்துதல் போல, தொண்டாற்றி, தன் பலனை எனக்குப் பிறகு வருவோர் பெற்றுப் பயனடையத்தக்க வழிகாணவேண்டும்; அஃதே நன்றியறிதல் காட்டும் பண்பாகும், என்ற உணர்வுடன், அவரவர் தத்தமக்குக் கிடைக்கும் வாய்ப்பினுக்கு ஏற்பப் பணியாற்றி வருதல் வேண்டும்.

அங்ஙனம் செய்ய முற்படாதார் இருந்தும், இல்லாதாரே!!

தாயின் பாலுண்டு வளரும் மகவு, சிறுமியாகி தாய் நோய் கண்டு வாடும்போது, பக்கமிருந்து பணிவிடை செய்வதன்றோ முறை! அங்ஙனமின்றி, உடல் உருகி, இருமி, ஈளைகட்டி, இழுத்துக்கொண்ட நிலையில் தாய் இருக்கும்போது, சிறுமி கவலையற்று இனி என் அன்னையால் என்னைக் காத்திட இயலாது; இனி இவளைப்பற்றி நான் ஏன் கவலைகொள்ள வேண்டும் என்று நினைத்துக், கழலாடிக் கிடப்பின், பெற்ற வயிறு பற்றி எரியுமன்றோ, கண்டவர்கள் கண்கள் கனலைக் கக்குமன்றோ! அதுபோலத்தான், வாழ்வளித்த உலகுக்கு, ஒவ்வொருவரும், தொண்டுசெய்து, வண்ணம் சேர்க்க வேண்டும், வளம் ஊட்டவேண்டும் இல்லையெனில், அவர்கள் பூமிக்குப் பாரம் – வேறென்ன?

தூய தொண்டாற்றுவது புகழ் ஈட்டத்தானே என்று கேட்பர் புல்லறிவினர். புகழ் பெறுபவருடன்

இணைந்துவிடுவதுமில்லை, அவருடன் சேர்ந்து மடிந்து போவதுமில்லை. அவருக்குப் பிறகும் நிலைத்து நின்று, நாட்டுக்கு அணிகலனாகிறது.

செல்வம் ஈட்டியோர், அதனை ஈந்து உவத்தலை மேற்கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்துகிறார் வள்ளுவர். அத்தகைய வாழ்வே, இசைபட வாழ்தல் என்று குறிப்பிடுகிறார். ஈதல் இசைபட வாழ்தல் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இவ்வழி நடவாதார், பூமிக்குச் சுமையே என்று இடித்துரைக்க,

*ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவர்*
*தோற்றம் நிலக்குப் பொறை!*

என்று கூறுகிறார்.

எனவே, பூமிக்குப் பாரமாக இருந்திடாது, அணிகலனாகத் திகழ்ந்திடவேண்டும் என்ற குறிக்கோள், மக்களிடை இருத்தல் வேண்டும். அத்தகு மக்களே நல்லரசு காணத்தக்கோராவர்.

மக்களே இன்று ஆட்சியை அமைக்கின்றனர். எனவே, நல்லரசு அமைவதும் அமையாததும், அவர்கள் கரத்திலேயே இருக்கிறது. ஐந்தாண்டுக்கொரு முறைதான் இந்த அரும் வாய்ப்புக் கிடைக்கிறது; அதனைத் தக்க விதத்தில் பயன்படுத்தத் தவறிவிட்டால் பிறகு ஐந்தாண்டுகள் அல்லற்பட நேரிடும்.

ஆண்டுக்கோர் முறை கொண்டாடி மகிழ்ந்திடும் அருமைத் திருநாளன்று, இதனை மனதிற்கொண்டு நன் முடிவு எடுத்திடல் வேண்டும்.

உதயசூரியன் உதித்தால், பேரிருள் அகலும்; காண்கின்றார் மக்கள், நித்தநித்தம்.

'உதயசூரியன்' பேரிருள் அகற்றியோன்!

பேரிரைச்சலில், பெருங்குழப்பத்தில் இருந்து வந்த நிலைமாறி உலகு உயிரினங்களின் உறைவிடமாக அமைந்திட உதவியவன், உதயசூரியன்.

உழவுத் தொழில் சிறந்திட உறுதுணையாய் அமைந்தவனும், உதயசூரியன். உதயசூரியன் வாழ்த்துக்குரியவன், வணக்கத்துக்குரியவன், வளம் அளிப்பவன், என்பது அனைவரும் போற்றிடும் பேருண்மை.

அந்த 'உதயசூரியனை' வாழ்த்திடும் நன்னாளாக அமைந்துள்ள, பொங்கற் புதுநாளன்று, பேரிருள் விலகி, பேரிரைச்சல் நீக்கி, பெருங்குழப்பம் அடங்கி. உலகு, வாழ்விடமாகி வாழ்விடத்தில், மிருக நிலையினின்றும் விலகி, மனிதர் நாடு கண்டு, அரசு நடாத்தி, வரும் நாட்களில் மனிதரிடம் மிருக நிலை அடியோடு மடிந்து படாதிருத்தலால், நல்லரசு அமைப்பதன் மூலம், மிருக இயல்பு போக்கிடத்தக்க முயற்சியில், அறிவும் பொறுப்பும் மிக்கோர் துணிந்து பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவே.

'இருளகல' என்ற இதனை எழுதினேன்.

பலபொருள் கொண்ட தொகுப்பாக இது அமைந்திருப்பது, இதிலே காணக்கிடக்கும், நிலைமைகள், கருத்துகள் ஒவ்வொன்றும், தக்கோரால் மேலும் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதப்படல் வேண்டும் என்பதனை வலியுறுத்தத்தான்.

*(14.01. 1962 – இல் அறிஞர் அண்ணா எழுதிய கட்டுரை)*

❖ ❖ ❖

# அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு

## ஆறாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறை

1989–ஆம் ஆண்டு தி.மு.க. அரசு மூன்றாவது முறையாக பதவியேற்றதற்கு முன்பாக, மைய அரசு அலுவலர்களுக்கான ஊதிய விகிதங்களைவிடக் குறைவான ஊதிய விகிதங்களே தமிழக அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வந்தன. இந்த நிலையை மாற்றி, தமிழ்நாட்டில் முதன் முறையாக மைய அரசுக்கு இணையான ஊதிய விகிதங்களை மாநில அரசு அலுவலர்களுக்கு 1989–ஆம் ஆண்டில் இந்த அரசுதான் வழங்கியது. தென் மாநிலங்களில் தமிழ்நாட்டில் மட்டும் தான் மைய அரசின் ஊதிய விகிதங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோன்றே, 1996–ஆம் ஆண்டில் இவ்வரசு மீண்டும் பொறுப்பேற்ற பின்னர் ஐந்தாவது மைய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படியே, இவ்வரசால் அமைக்கப்பட்ட அலுவலர் குழுவின் பரிசீலனைக்குப் பின்னர் திருத்தப்பட்ட மைய அரசின் ஊதிய விகிதங்கள் மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. இதனால் பெரும் நிதிச்சுமை ஏற்பட்டபோதும் அரசு அலுவலர்களின் நலன் கருதி இவ்வரசு இப்பயன்களை வழங்கியது. இதனைத் தொடர்ந்து 2006–ஆம் ஆண்டில் இவ்வரசு மீண்டும் பொறுப்பேற்ற உடன் 2001–2006–ஆம் ஆண்டுக் காலத்தில் முந்தைய அரசால் ரத்து செய்யப்பட்ட அரசு அலுவலர்களின் சலுகைகளையும் மீட்டெடுத்துத் தந்துள்ளது.

மேலும், மைய அரசின் ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் அவ்வரசு அலுவலர்களுக்கு 1–1–2006 முதல் திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய விகிதங்கள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளன. இதனைப் பின்பற்றி, இம்மாநில அரசும் மத்திய அரசின் பரிந்துரைகளை இம்மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நீட்டிக்கும் வகையில் அலுவலர் குழு ஒன்றை அமைத்தது. அக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று உரிய ஆணைகள் வெளியிடப்படுகின்றன. இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக ரூபாய் 5,155.79 கோடி தொடர் செலவினம் ஏற்படும். திருத்திய ஊதிய விகிதங்களை 1–1–2006 முதல் நடைமுறைப்படுத்தியும் 1–1–2007 முதல் பணப்பயன் அளித்தும் ஆணைகள் வெளியிடப்படும். அரசு அலுவலர்களுக்கு திருத்திய ஊதிய நிர்ணய நிலுவைத் தொகை வழங்கும் வகையில் இவ்வரசுக்கு ரூபாய் 11,093 கோடி மேலும் செலவாகும்.

பொருளாதார மந்தநிலை காரணமாக தற்போது அரசின் வரி வருவாய் குறைந்து கொண்டு வரும் நிலையிலும், பல்வேறு நலத்திட்டங்களை மக்களுக்கு அரசு வழங்க வேண்டியுள்ளதால் ஏற்படும் நிதிச்சுமை அதிகமாக இருப்பினும் அரசு அலுவலர்கள்

மற்றும் ஆசிரியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அலுவலர் குழு பரிந்துரைத்துள்ள சலுகைகளை இவ்வரசு வழங்க முடிவு செய்துள்ளது.

**அலுவலர் குழுவின் பின்வரும் பரிந்துரைகள் அனைத்தும் அரசால் ஏற்று நடைமுறைப்படுத்தப்படும்: –**

1) அனைத்து அரசு அலுவலர்களுக்கும் தற்போது பெற்று வரும் ஊதிய விகிதத்திற்கு இணையான திருத்திய ஊதிய விகிதம் வழங்கப்படும்.

2) இம்மாநிலத்தில் தற்போதுள்ள ஊதிய விகித முறைக்கு ஏற்ப ஊதியத் தொகுப்புக்கான தர ஊதியம் (Grade Pay) வழங்கப்படும்.

3) பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனம் மூலம் தற்போது நடைமுறையில் உள்ள ரூ.8,000–13,500 ஊதிய விகித முறையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் ஒரே ஊதிய விகிதம் மற்றும் தர ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

4) உச்ச நீதிமன்ற ஆணைக்கேற்ப, அமைச்சுப் பணி கண்காணிப்பாளர்களுக்கு தமிழ்நாடு தலைமைச் செயலக உதவிப் பிரிவு அலுவலர்கள் தற்பொழுது பெற்றுவரும் ஊதிய விகிதத்தைவிட ஒரு நிலை மேம்படுத்தி புதிய ஊதிய விகிதமாக 12–12–2007 முதல் ரூ.7,000–225–11,500 என நிர்ணயம் செய்து, அதற்கு இணையாக திருத்திய ஊதிய விகித முறையில் ரூ.9,300–34,800 என்ற ஊதிய விகிதம் மற்றும் தர ஊதியமாக (Grade Pay) ரூ. 4,800/– நிர்ணயிக்கப்படும்.

5) அமைச்சுப்பணி கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ள மேம்படுத்தப்பட்ட திருத்திய ஊதிய விகிதம், அதுபோன்ற இதர பணிகளில் உள்ள அலுவலகக் கண்காணிப்பாளர்களுக்கும் மற்றும் இப்பணியிடங்களில் பரிமாற்றம் செய்யத்தகுந்த பிற வகைப் பணியிடங்களான துணை வட்டாட்சியர், உதவி வணிகவரி அலுவலர் மற்றும் சார்பதிவாளர் போன்ற பணியிடங்களுக்கும் நீட்டிக்கப்படும்.

6) அமைச்சுப்பணி கண்காணிப்பாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளதால் அதன் பதவி உயர்வு பணியிடங்களின் ஊதிய விகிதத்தினை 12–12–2007 முதல் ரூ.7,500–250–12,000 என நிர்ணயம் செய்து, திருத்திய ஊதிய விகித முறையில் ரூ.9,300–34,800 ஊதிய விகிதமும் தர ஊதியமாக ரூ.4,900/–ம் வழங்கப்படும்.

7) மைய அரசு அலுவலர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ள வழிமுறைகளே மாநில அரசு அலுவலர்களுக்கும் கடைபிடிக்கப்படும்.

8) ஆண்டு ஊதிய உயர்வு வழங்குவது தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள நிலையே தொடரும். மேலும், திருத்திய ஊதிய விகித முறையில் ஆண்டு ஊதிய உயர்வு மைய அரசில் உள்ளவாறு, அடிப்படை ஊதியம் + தர ஊதியத்தில் மூன்று விழுக்காடு வழங்கப்படும்.

9) திருத்திய ஊதிய விகித முறையில் மைய அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அதே அகவிலைப்படி விகிதாச்சாரத்தில் அவர்களுக்கு எந்தெந்த நாள் முதல் வழங்கப்பட்டு வருகிறதோ அந்நாள் முதல் மாநில அரசு அலுவலர்களுக்கும் அகவிலைப்படி வழங்கப்படும்.

10) தற்போது மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படியினை இரட்டிப்பாக்கி திருத்திய ஊதிய விகித முறைக்கேற்ப வழங்கப்படும்.

11) மாநில அரசு அலுவலர்கள் தற்போது பெற்றுவரும் சிறப்பு ஊதியம் திருத்திய ஊதிய விகித முறையில் அதே அளவில் தொடர்ந்து வழங்கப்படும்.

12) படிகள் (Allowances) இரட்டிப்பாக்கப்படும்.

13) சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று வரும் அலுவலர்களுக்குப் பொருத்தமான திருத்திய சிறப்பு காலமுறை ஊதியம் மற்றும் தர ஊதியம் வழங்கப்படும். இதனால் இந்த அரசால் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்ற 2.5 இலட்சம் சத்துணவுத்திட்ட மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஏற்கெனவே உறுதியளித்தவாறு மீண்டும் ஒருமுறை ஊதிய உயர்வு கிடைக்கும்.

14) சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று வரும் சத்துணவுத் திட்டப் பணியாளர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் முதன்முறையாக வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி வழங்கப்படும்.

15) தொகுப்பூதியம், நிலையான ஊதியம் மற்றும் மதிப்பூதியம் ஆகியவற்றில் பணியாற்றும் அலுவலர்களுக்கு தற்பொழுது பெற்றுவரும் ஊதியத்தில் ஒரே சீராக 25 விழுக்காடு உயர்வு அளிக்கப்படும்.

16) பத்து / இருபது ஆண்டுகள் பணி நிறைவு செய்த அலுவலர்களுக்கு தேர்வுநிலை / சிறப்பு நிலை திருத்திய ஊதிய விகித முறையில் அவர்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் ஊதிய விகிதத்தில் அவர்கள் பெற்று வரும் அடிப்படை ஊதியத்தில் ( ஊதியம் + தர ஊதியம்) மூன்று விழுக்காடு கணக்கிட்டு ஊதிய உயர்வு அளிக்கப்படும்.

17) தற்போது வழங்கப்பட்டுவரும் தேக்க நிலை ஊதிய உயர்வு திருத்திய ஊதிய விகித முறையிலும் தொடரும்.

18) அரசு அலுவலர்கள், ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் நீண்ட நாளையக் கோரிக்கையை ஏற்று அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் தற்போது பெற்றுவரும் மருத்துவப்படி மாதம் ரூ.50/– லிருந்து ரூ.100/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

19) மருத்துவச் செலவு திரும்பப் பெறுதல் திட்டத்தில் 21–4–95–க்கு முன்னதாக பணியில் உள்ள அலுவலர்கள் மற்றும் இத்திட்டத்திற்கு விருப்பம் தெரிவித்த

அலுவலர்களுக்கு திருத்திய ஊதிய விகித முறையில் **1–1–2006** அன்று இருந்த அடிப்படை ஊதியத்தில் (ஊதியம் + தர ஊதியம்) 30 விழுக்காடு மருத்துவச் செலவு ஈடுசெய் தொகையாக வழங்கப்படும்.

**20)** இல்ல அலுவலக உதவியாளர்களை ஒப்படைப்பு செய்து ரொக்கப்படி பெறும் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டு, ஒரு அலுவலக உதவியாளருக்கு ஈடாக மாதம் ஒன்றுக்கு ரூ. 500/– வழங்கப்படும்.

**21)** தற்போது உள்ள ஊதிய விகித முறையில் பயணப்படி பெறத் தகுதியுள்ள நிலையின் அடிப்படையில் திருத்திய ஊதிய விகிதத்தில் தக்க மாற்றங்கள் செய்யப்படும்.

**22)** அரசு அலுவலர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் தினப்படி இரட்டிப்பாக்கப்படும்.

**23)** ஒய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஒய்வூதியதாரர்களுக்கு அடிப்படை ஒய்வூதியம் / அடிப்படை குடும்ப ஒய்வூதியத்தில் 40 சதவீதம் உயர்த்தி வழங்கப்படும். திருத்திய ஊதிய விகித முறையில் நிர்ணயிக்கப்படும் ஊதியம் + தர ஊதியத்தின் அடிப்படையில் குறைந்தபட்ச திருத்திய ஒய்வூதியம் மற்றும் குடும்ப ஒய்வூதியம் தற்போதுள்ள ரூ.1,913/– என்பது ரூ.3,050/–ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**24)** பணிக்கொடை உச்சவரம்பு, மத்திய அரசில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதைப் போன்று ரூபாய் 3. 5 இலட்சத்திலிருந்து ரூபாய் 10 இலட்சமாக உயர்த்தப்படும்.

**25)** தற்போது நடைமுறையில் உள்ள மூன்றில் ஒரு பங்கு ஒய்வூதியம் ஒப்படைப்பு நிலை தொடரும். மத்திய அரசு வெளியிட்டுள்ள திருத்திய ஒய்வூதிய ஒப்படைப்பு அட்டவணை பின்பற்றப்படும்.

**26)** மாதம் ரூ.50/– செலுத்த விருப்பம் தெரிவிக்கும் குடும்ப ஒய்வூதியதாரர்கள் தமிழ்நாடு ஒய்வூதியர்கள் மருத்துவ நலத்திட்டத்தில் சேர்க்கப்படுவார்கள்.

**27)** தற்பொழுது வழங்கப்பட்டு வரும் வீட்டுவாடகைப் படி மற்றும் நகர ஈட்டுப்படி உட்பட அனைத்துப் படிகளும் திருத்திய வீதத்தில் ஆணை வெளியிடப்படும் நாள் **(1–6–2009)** முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

**28)** திருத்திய ஊதிய விகித முறையில் ஊதியம் நிர்ணயிக்கப்படுவதனால் வழங்கப்படும் நிலுவைத் தொகையில் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள இடைக்கால நிலுவைத் தொகையினைச் சரிக்கட்டிய பின்னர் மீதமுள்ள நிலுவைத் தொகை மூன்று ஆண்டு சம தவணைகளில் **2009–10, 2010–11** மற்றும் **2011–12**–இல் ரொக்கமாக வழங்கப்படும்.

❖ ❖ ❖

# அண்ணாவின் பொன்மொழிகள்

**அறம் வெல்லும்**

★ 'கடமை கண்ணியம் கட்டுப்பாடு'

★ 'கனிவு துணிவு தெளிவு'

★ 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்'

★ ஆளும் கட்சி பானையில் வேகும் சோறு.
எதிர்க் கட்சி அந்தப் பானையில் உள்ள
சோறு கொதித்து வரும் போது கிளறிவிடும்
அகப்பை போல'

★ மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும்
மணம் உண்டு'

★ 'எங்கிருந்தாலும் வாழ்க'

★ 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்'

★ 'நேசக் கரம் நீட்டுகிறேன்'

★ 'மக்கள் குரலே மகேசன் குரல்'

★ 'எண்ணப் பிணைப்பு, இதயக் கூட்டு, வண்ணக் கலவை'

★ 'வாழ்க வசவாளர்'


★ 'கடல் கடந்து சென்ற தமிழன் விட்ட கண்ணீரால் கடல்
உப்புக்கரிக்கிறது'

★ 'ஆளும் கட்சி முரட்டு மாடு;
எதிர்க் கட்சி மூக்கணாங்கயிறு'

★ 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'

★ 'தன்னை வெல்வான் தரணியை வெல்வான்'

★ 'தடைக் கற்கள் படிக்கற்கள் ஆகட்டும்'



★ 'இரும்புப் பெட்டிக்கும் இதயத்திற்கும்
சம்பந்தம் வைக்கவில்லை இறைவன்'

★ 'கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு'

★ சட்டம் ஓர் இருட்டறை அதில் வக்கீலின் வாதம்
ஒரு விளக்கு; அந்த விளக்கு ஏழைக்குக்
கிடைப்பதில்லை!


★ தமிழே இசையுருவாக அந்த இசையே, தமிழில் முதன்முதலில் தோன்றியது.

★ வீடு எங்ஙனமோ, அங்ஙனமே நாடு இருக்கும்.

# பெரும்பரிசுகளை நிறுவிய ஆல்ஃபிரெட் நோபெல்

**1861**ஆம் ஆண்டில், பிரான்சு நாட்டின் பாரிஸ் நகரத்தில் பெரிய வங்கிகளின் உயர் அதிகாரிகள் பலர் ஒன்றாகக் கூடியிருந்தார்கள். அவர்களுடைய பருத்த மேனிகளும், ஆடம்பரமான உடைகளும், கம்பீரப் பேச்சுகளும், அவர்கள் கோடீசுவரர்கள், பணத்தின் சக்தியால் உலகம் முழுவதையும் ஆட்டி வைப்பவர்கள், அதிகாரச் செருக்குற்றவர்கள் என்பதை விளக்கிக் கொண்டிருந்தன. அந்தக் கூட்டத்தில் எளிய உடை அணிந்து இளைத்த மேனியோடு கூடிய ஓர் இளைஞன் காணப்பட்டான். அவனது உடல் நோயுற்று வாடியிருந்தது. அத்தனை பிரமுகர்களின் நடுவே அவன் சற்று அச்சமுற்றவன் போலத் தோன்றினான்.

அப்போது அக்கூட்டத்தின் தலைவர் அவனை நோக்கி, "அப்பா, ஏதோ முக்கியமானச் செய்தி தெரிவித்தாயே, அச்செய்தி என்ன ?" என்று கேட்டார். அவருடைய பேச்சின் தொனியிலிருந்தும், மற்றவர்களுடைய முகத் தோற்றத்திலிருந்தும், அவர்களில் ஒருவருக்கும் அந்த இளைஞன் சொல்லப்போகும் செய்தியில் சிறிதுகூட நம்பிக்கை இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.



அப்போது, அந்த வாலிபன், "அய்யா, நான் ஒரு மருந்தைத் தயார் செய்திருக்கிறேன். அதை வெடிக்கச் செய்தால் உலகம் முழுவதையும் தகர்த்து விடலாம்" என்று சொன்னான். "சொல்லு கேட்போம்" என்றார் பெரிய முதலாளி.

அந்த இளைஞன் தெளிவாகச் சொல்லத் தொடங்கினான். ஆனால், அவர்கள் ஒருவருக்கும் நம்பிக்கை உண்டாகவில்லை. ஆதலால், அவன் சொல்லி வரும்போதே பாதியில் அவனுடைய பேச்சை நிறுத்தி விடச் சொன்னார்கள். "உலகத்தைத் தகர்த்தெறிந்தால் யாருக்கு என்ன லாபம் ? அதைத்தகர்த்தெறிய எங்களுக்கு விருப்பமில்லை.

அதற்காக உனக்குப் பண உதவியும் செய்யப் போவதில்லை'' என்று சொல்லி, அவனை வந்த வழியே அனுப்பி விட்டார்கள்.

அவன் கூறியது அம் மருந்தின் ஆற்றல் மிகுதியைப் பற்றி, அவர்கள் எண்ணியது அதன் தீய விளைவுகளைப் பற்றி.

ஆனால், அந்த வாலிபன் அந் நகரத்திலுள்ள வேறு சிலரைக் கண்டு, தான் வந்த காரியத்தைப் பற்றி அவர்களிடம் தெரிவித்தான். படிப்படியாக அந்நாட்டு அரசனான மூன்றாம் நெப்போலியன் காதிலும், அந்தச் செய்தி எட்டிற்று. மகா நெப்போலியனைப் போல், தானும் சிறந்த போர் வீரனாக விளங்க வேண்டும் என்னும் பேராசை கொண்ட அந்த அரசன், அந்த மருந்தைத் துணையாகக் கொண்டு, ஆயுதங்கள் செய்து, தானும் ஒரு பெரிய சக்கரவர்த்தி ஆகிவிடலாம் என எண்ணினான். தன்னுடைய பிரபுக்களில் ஒருவனை அழைத்து, அந்த இளைஞனுக்கு இலட்சம் பிராங்கு கடன் கொடுக்கச் செய்தான்.

இவ்வாறு பணம் பெற்றுத் தன் நாடு திரும்பிய வாலிபன் ஆல்ஃபிரெட் பெர்ன்ஹாட்டு நோபெல் என்பவன். அவன் எம்மானுவெல் நோபெல் என்பவருடைய மூன்றாவது மகன். பிறந்த நாள் முதலே, அவன் மிகவும் பலவீனமாக இருந்தபடியால், சில காலம் வரை அவன் பிழைப்பானோ, மாட்டானோ என்றிருந்தான். அவனுடைய தாயாரின் அரிய முயற்சியால் உயிர் பிழைத்தான்.

அவனுடைய பாட்டனார் இராணுவத்தில் இரண வைத்தியராக இருந்தார். அவனுடைய தந்தை இரசாயனக் கிறுக்குடைய விஞ்ஞான ஆசிரியர். அவர் வெடி மருந்துகளையும், கடலினுள்ளே வெடிக்கும் கடற் கண்ணிகளையும் இயற்றி அவற்றைப் பல வகையாய் ஆராய்ந்து வந்தார்.

“இந்த ஆராய்ச்சி மிகவும் அபாயகரமானது. இதனால் நன்மை உண்டாகாது; தீமையே உண்டாகும். வெடி மருந்துகள் சிறந்த முறையில் தயாரிக்கப்படுமானால், பல தேசங்கள் போரில் ஈடுபட்டு ஒன்றோடொன்று சண்டையிடும். பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் கொல்லப்படுவார்கள். இத்தனை உயிர்ச் சேதத்துக்கும் நீயே பொறுப்பாளி ஆவாய். இதனால் உனக்கே உயிர்ச் சேதம் ஏற்பட்டாலும் ஏற்படும்'' என்று பலர் எம்மானுவெல் நோபெலைத் தடுத்துப் பார்த்தார்கள். ஆயினும் அவருடைய



ஆராய்ச்சிக் கிறுக்கை அவர்களால் நிறுத்த முடியவில்லை. “வெடி மருந்தினால் ஒருவன் மற்றொருவனைக் கொல்லத்தான் வேண்டும் என்பதில்லை. மனித இனத்துக்குப் பயன் தரும் வேறு எத்தனையோ காரியங்களுக்கு அதை உபயோகப்படுத்தலாம் என்று கூறி, அவர் மேன்மேலும் தம்முடைய ஆராய்ச்சிகளை நடத்தி வந்தார்.

எம்மானுவெல் நோபெலினுடைய தொழிற்சாலையில், ஒரு முறை வெடி விபத்து நேர்ந்தது. தொழிற்சாலை தூள் தூளாய்த்

தகர்ந்து போயிற்று. அக்கம்பக்கத்திலுள்ள வீடுகளுக்கும் மிகுந்த சேதம் உண்டாயிற்று. அவ்வூரிலுள்ளோர் அனைவருடைய கோபத்துக்கும், அவர் உள்ளானார். ஆகவே, அவர் தம் நாட்டை விட்டு அயல்நாடு செல்ல வேண்டியதாயிற்று.

**"வெடி மருந்தினால் ஒருவன் மற்றொருவனைக் கொல்லத்தான் வேண்டும் என்பதில்லை. மனித இனத்துக்குப் பயன் தரும் வேறு எத்தனையோ காரியங்களுக்கு அதை உபயோகப்படுத்தலாம்."**

அவர் ரஷ்யாவுக்குச் சென்றார். இருபது ஆண்டுக் காலம் ரஷ்ய அரசாங்கத்துக்குப் பலவகையான வெடி மருந்துகளையும், குண்டுகளையும் தயார் செய்து கொடுத்தார். கொஞ்சம் பணம் சேர்ந்தது. அவர் தம் நாடு திரும்பித் தம்முடைய பழைய தொழிலை நடத்தத் தொடங்கினார்.

இதற்கிடையில் ஆல்ஃபிரெட் தம் கல்வியை மேலும் கற்றுத்தெரிந்து கொள்வதற்காகவும், வியாபார நிமித்தமுள்ள அய்ரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பயணம் செய்தார். அவர் பாரிஸ் நகரில் கண்டு காதலித்து வந்த பெண் எதிர்பாராத விதமாக மரணம் அடையவே, ஆல்ஃபிரெடுக்கு உலக வாழ்க்கையிலே பற்றற்றுப் போய்விட்டது. இனித் தமது கருத்து முழுவதையும் தமது தகப்பனார் செய்து வந்த தொழிலில் செலுத்துவது என்று தீர்மானித்தார்.

பாரிஸ் நகரில் கடனாகக் கிடைத்த பணத்தைக் கொண்டு, தகப்பனும் மகனுமாக, மேன்மேலும் ஆராய்ச்சிகளைச் செய்தார்கள். அவர்கள் ஆராய்ந்த பொருள் நைட்டிரோ–க்லிஸரின் என்பது. மிகக் கொடுமையாய் எதிர்பாராத வண்ணமாய் வெடிக்கும் இயல்புடையது அது. எவ்வளவு முயன்றும், அதன் கொடுமையை அடக்க முடியவில்லை. 1864ல் ஒரு நாள் அவர்களுடைய சோதனைச்சாலையில் மீண்டும் ஒரு வெடி விபத்து உண்டாயிற்று. எம்மானுவெல் நோபெலின் கடைசி மகனான எமில் என்பவனும், தொழிலாளிகள் நால்வரும் அவ்விபத்தில் மாண்டார்கள். தொழிற்சாலையும் தூக்கி எறியப்பட்டுத் தூள் தூளாய்த் தகர்ந்து போயிற்று. எம்மானுவெல் மனமுடைந்து, துயரத்தில் ஆழ்ந்து விட்டார். அதன் பிறகு, அத்தொழிற்சாலையின் நிருவாகமும், அதை ஒட்டிய ஆராய்ச்சிகளும் ஆல்ஃபிரெடின் பொறுப்பாகவே ஆகிவிட்டன.

மறு ஆண்டிலும், ஒரு முறை அவருடைய ஆராய்ச்சிச்சாலை ஆகாயத்தை எட்டிப் பார்த்தது. பலருக்கு உயிர்ச்சேதமும், பொருட் சேதமும் உண்டாயின. மற்றொரு முறை. தொழிலாளி ஒருவன் உறைந்து கிடந்த வெடி மருந்தைத் தன் கோடாரியால் வெட்டினான். மருந்து படீரென்று வெடித்தது. அரை மைலுக்கு அப்பால் அவனுடைய கால்கள் மட்டும் அகப்பட்டன. வேறொன்றும் அகப்படவில்லை. பனாமாப் பிரதேசத்தில் ஒரு கப்பலில் இவ் வெடிமருந்துப் பெட்டிகள் இருந்தன. அம் மருந்து வெடித்தது. கப்பல் பொடிப் பொடியாய்த் தகர்ந்து போயிற்று. பக்கத்தில் இருந்த கப்பலுக்கும் பலத்த சேதம் உண்டாயிற்று. அறுபது பேர் மாண்டு போனார்கள். பத்து இலட்சம் டாலருக்கு மேல் பணச் சேதமும் ஏற்பட்டது.

**"போரினால் உலகை அடக்கியாள விரும்பிய போர் வெறி பிடித்த அரசாங்கங்கள் அவரது வெடிமருந்தைப் பயன்படுத்தி, குண்டுகளைச் செய்து போரில் உபயோகித்தன. சமாதான விருப்பமுடைய மக்கள் அதை நன் முயற்சிகளில் பயன்படுத்தினர். ஆழக்கிணறுகள் தோண்டவும், சுரங்கங்களை அமைக்கவும், ரயில் பாதைகளை அமைக்கப் பாறைகளையும், மலைப் பாகங்களையும் தகர்த்து வழிகளை ஏற்படுத்தவும் பயன்படுத்தினார்கள்."**

இவ்வாறு வெடி விபத்துகள் பல நேர்ந்த போதிலும், ஆல்ஃபிரெட் நோபெல் மனம் தளராமல் மேன்மேலும் சோதனைகளை நடத்தி வந்தார். இவ்வாறு முயன்று வருகையில், ஒரு நாள் வெடிமருந்தை வைத்திருந்த பீப்பாயிலிருந்து நைட்டிரோ – க்லிஸரின் சிறிது கசிந்தது. அக்கசிவு பரவாமல் தடுப்பதற்கு மரத்தூளை உபயோகிப்பது வழக்கம். அன்று மரத்தூள் பக்கத்தில் இல்லாமல் போகவே அங்குள்ள வேலையாள் ஒருவன் அருகிலிருந்த உலர்ந்த களிமண்ணை எடுத்து அப் பீப்பாயை அடைத்து, அக்கசிவைத் தடுத்தான். அம்மண்ணும் நைட்ரோ – க்லிஸரினை நன்றாக ஒற்றியெடுத்தது. தற்செயலாக நேர்ந்த இந்த நிகழ்ச்சியை ஆல்ஃபிரெட் நோபெல் கவனித்தார். மருந்து ஊறிய களிமண்ணைப் பல வகையான சோதனைகளுக்கு உட்படுத்தினார். தாம் வெகுகாலமாகத் தேடி வந்த மருந்து – அபாயம் அற்ற, பலம் மிகுந்த மருந்து – எதிர்பாராத வண்ணம், கிடைத்து விட்டது என்பதை அறிந்தார். நைட்டிரோ – க்லிஸரினும் கைஸல்கர் என்னும் களிமண்ணுமாகக் கலந்த கலவைதான் டைனமைட்டு என்னும் பெயரால் இப்போது வழங்குகிறது. இதுவே நோபெலின் அளவிறந்த செல்வத்துக்கு வித்திட்ட விதை.

தாம் திரட்டிய செல்வம் அனைத்தையும் அவர் நன்கொடையாக அளித்து அறக்கட்டளையாக உருவாக்கினார். ஒவ்வொரு ஆண்டும் இயற்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம், அமைதிப்பணி என்னும் 5 துறைகளில், ஒவ்வொன்றிலும் மிகச் சிறந்த செயலைச் செய்த அறிஞருக்கு பரிசும், பொற்பதக்கமும் நற்சான்றிதழும் அளிக்க ஏற்பாடு செய்தார். உலகத்திலுள்ள மிகச் சிறந்த அறிவாளிகள் அனைவரும் இப்பரிசு பெறுதலையே மிகச் சிறந்த பேறாகக் கருதுகிறார்கள்.

போரினால் உலகை அடக்கியாள விரும்பிய போர் வெறி பிடித்த அரசாங்கங்கள் அவரது வெடிமருந்தைப் பயன்படுத்தி, குண்டுகளைச் செய்து போரில் உபயோகித்தன. சமாதான விருப்பமுடைய மக்கள் அதை நன் முயற்சிகளில் பயன்படுத்தினர். ஆழக்கிணறுகள் தோண்டவும், சுரங்கங்களை அமைக்கவும், ரயில் பாதைகளை அமைக்கப் பாறைகளையும், மலைப் பாகங்களையும் தகர்த்து வழிகளை ஏற்படுத்தவும் பயன்படுத்தினார்கள். டைனமைட்டு பயங்கரமான பேராற்றாலை அளிக்கிறது. அவ் ஆற்றலைப் போரில் பயன்படுத்தினால் அழிவும் நாசமும் ஏற்படும். ஆனால் மக்களின் நலத்தைப் பெருக்கும் நன்நோக்குடைய நற்செயல்களில் பயன்படுத்தினால் நன்மையே விளையும்.

ஆல்ஃபிரெட் பெர்ன்ஹாட்டு நோபெல் ஸ்வீடன் நாட்டின் தலைநகராகிய ஸ்டாக்ஹோம் என்னும் நகரில், 1834ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ஆம் தேதியன்று பிறந்தார். ஆல்ஃபிரெட் நோபெல் இத்தாலி நாட்டில் உள்ள ஸான் ரீமோவில், 1896ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் தேதியன்று காலமானார்.

*(பெ.நா. அப்புசாமி எழுதிய*
***"சர்வதேச விஞ்ஞானிகள்"***
*என்னும் நூலிலிருந்து).*

# இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் அந்நிய முதலீடுகளை அதிகமாக ஈர்க்கும் மாநிலம்!

இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் அந்நிய முதலீடுகளை அதிகமாக ஈர்க்கும் மாநிலம்; உள்கட்டமைப்பு வசதி மற்றும் நிருவாகமே இதற்குக் காரணம் என்று ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக ஆய்வு தெரிவிக்கிறது.

இந்தியாவில் அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் சூழல் பற்றிய குறியீட்டு எண் என்ற ஆய்வினை இங்கிலாந்து நாட்டில் இலண்டனில் உள்ள ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தைப் போலவே முதல் நிலையில் கருநாடகா, மகாராஷ்டிரா, டில்லி மற்றும் குஜராத் மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.

**ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக ஆய்வில் தகவல்**

இந்த மாநிலங்கள் அனைத்தும் பொருளாதார சிறப்புச் செயல்பாடுகளை உள்கட்டமைப்பிலும் மனித வளத்தை மேம்படுத்துவதிலும் சிறப்பாகச்செயல்பட்டுள்ளன. செயல்பாடுகளில் நிரந்தரமான நிருவாகமும் இங்குள்ளன.

இந்தியாவில் அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதற்கான சிறப்பான முன்னேற்றம் என்பது குறித்து ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் ஆயிரம் கல்விக் கழக உறுப்பினர்களிடம் ஆலோசனை பெற்றது.

இந்தியாவின் வணிக ஆய்வில் மாநில அளவில் குறிப்பிடத்தக்க காரணிகளில் மாநில அளவில் உள்ள வேறுபாடுகளை இந்த ஆய்வு எடுத்துக்காட்டுகிறது.

மனித வளத்தை மேம்படுத்துவதைப் பொறுத்தவரையில் இமாச்சலப்பிரதேசம், கோவா, புதுச்சேரி ஆகியவையே வியக்கத்தக்க வகையில் முதலீடுகளை ஈர்த்துள்ளன. இவற்றில் கோவா முன்னணியில் உள்ளது.

மேற்கு வங்கத்திலும் உத்திரப் பிரதேசத்திலும்தான் மிகக் குறைவான சூழ்நிலை நிலவுகிறது. வடகிழக்கில் உள்ள **8** மாநிலங்கள் குறைந்த நிலையில் உள்ளன. ஜார்கண்ட், அருணாச்சலப் பிரதேசம், பீகார் ஆகியவை மாநிலத்தில் குறைவான தகுதி காரணமாக உள்கட்டமைப்பு நிருவாகம் ஆகியவற்றில் கீழ்நிலையில் உள்ளன. ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வு, குறியீட்டு எண்ணில் இந்தியாவில் **28** மாநிலங்களும் **2** பெரிய யூனியன் பிரதேசங்களுமான டெல்லியும், புதுச்சேரியும் இடம் பெற்றுள்ளன.

❖ ❖ ❖


# படமும் செய்தியும்



புதுடெல்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்களை அவரது இல்லத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் சந்தித்து, மீண்டும் பிரதமராக பதவியேற்க இருப்பதற்காக தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.(19.5.2009)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை துணை முதலமைச்சராக நியமிக்கப்பட்ட மாண்புமிகு திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.தயாநிதி மாறன், மாண்புமிகு அமைச்சர்கள் திரு.ஆற்காடு நா.வீராசாமி, திரு.எ.வ.வேலு மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் துணைவியார் திருமதி.சாந்தா ஸ்டாலின், திரு.கலாநிதி மாறன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜெ.அன்பழகன் ஆகியோர் உள்ளனர்.(29,5,2009)




மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம்,
மைய அரசின் ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை, தமிழக அரசு அலுவலர்களுக்கு நடைமுறைப்படுத்துவது குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட அதிகாரிகள் குழுவின் அறிக்கையினை, குழுவின் தலைவரும் உள்துறை முதன்மைச் செயலாளருமான திருமதி.எஸ்.மாலதி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி,இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன்,இ.ஆ.ப., பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திரு.எம்.குற்றாலிங்கம்,இ.ஆ.ப., பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறைச் செயலாளர் திரு.கே.என்.வெங்கட்ரமணன்,இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர். (27.5.2009)



மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் 18ஆவது நினைவு நாளை முன்னிட்டு, சென்னை-தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள், கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதிமொழியை வாசிக்க, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி,இ.ஆ.ப., அரசு உயர் அலுவலர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள்.(21.5.2009)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில்,
இலங்கை-தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர்
திரு.இரா.சம்பந்தம், துணைத்தலைவர்
திரு.மாவை சேனாதிராஜா, உறுப்பினர் திரு.சுரேஷ் பிரேமசந்திரன்,
உறுப்பினர் திரு.செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள்.(30.5.2009)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை தலைமைச் செயலகத்தில்,
தேசியப் பாதுகாப்புப் படையின் தென் மண்டல போர்ஸ் கமாண்டராகப் (Force Commander-N.S.G.)
பொறுப்பேற்றுக்கொண்ட திரு.சுபாஷ் சந்திர ராஞ்சி அவர்கள்
மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார்.(27.5.2009)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் தலைமைச் செயலகத்தில்,
செயல் வழிக் கற்றல் முறையை தமிழக பள்ளிகளில் அறிமுகப்படுத்தியமைக்காக
2007-2008ஆம் ஆண்டிற்கான இந்தியப் பிரதமரின் மதிப்பிற்குரிய விருது பெற்ற
(PRIME MINISTER AWARD FOR EXCELLENCE IN PUBLIC ADMINISTRATION)
திரு.எம்.பி.விஜயகுமார், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் அவ்விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.
உடன் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு,
பள்ளிக் கல்வித்துறைச் செயலாளர் திரு.எம்.குற்றாலிங்கம், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர். (25.5.2009)



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள்,
சென்னை சேத்துப்பட்டு அப்பாராவ் கார்டனில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து
ஆறுதல் கூறி, நிவாரண உதவிகள் உடனடியாக வழங்கிட அலுவலர்களுக்கு ஆணையிட்டார். (26.5.2009)

# பள்ளி வளாகங்களிலேயே
# வேலைவாய்ப்புப் பதிவினை
# மாணவ, மாணவிகள் பதிவு செய்து கொள்ளலாம்

கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் அறிவித்தவாறு பத்தாம் வகுப்பு, மேல்நிலை வகுப்புத் தேர்வு முடிவுகளையொட்டி வேலை வாய்ப்பிற்குப் பதிவு செய்ய வரும் மாணவர்களை மாவட்டந்தோறும் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்து பதிவு செய்யப்பட்டது.

2008 – 2009 கல்வி ஆண்டில் 6,40,844 மாணவர்கள் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வு எழுதி, தேர்வு முடிவுகள் வெளியாகி சான்றிதழ்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்குப் பதிவுகள் மேற்கொள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த இடங்களில் பதிவு மேற்கொள்ளப்படுகின்றது என்ற விவரம் உரிய மாவட்ட நிருவாகத்தால் செய்தித் தாள்களில் வெளியிடப்பட்டு, மாநிலம் முழுவதும் 100 மையங்களில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2008–2009 ஆம் கல்வி ஆண்டில் 8,22,872 மாணவர்கள் பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதியுள்ளனர். பத்தாம் வகுப்புத் தேர்வு முடிவுகள் அண்மையில் வெளியாகி மதிப்பெண் சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது. இவர்களின் பதிவுக்காக மாவட்டத் தலைநகரிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் செல்வதற்காகப் போக்குவரத்துச் செலவினையும், கால விரயத்தையும், கூட்ட நெரிசல் போன்ற இடர்ப்பாடுகளையும் தவிர்க்கும் பொருட்டு மாணவர்களின் நலன் கருதி, அவர்கள் வசதிக்காக இந்த ஆண்டு முதல் மாணவர்கள் தாங்கள் பயின்று மதிப்பெண் சான்று பெறும் பள்ளிகளின் வளாகத்திலேயே பதிவு செய்து கொள்ள கல்வித்துறையின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, பள்ளித் தலைமை ஆசிரியர்கள் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து அவற்றுடன் மதிப்பெண் பட்டியல், சாதிச் சான்று, மாற்றுச் சான்றிதழ் ஆகியவற்றினைச் சரிபார்த்து, தலைமை ஆசிரியரின் முத்திரையுடன் கூடிய சான்றொப்பமிட்டு, பள்ளியின் மொத்த விண்ணப்பப் படிவங்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். ஒரு வார காலத்திற்குள் வேலைவாய்ப்பு அடையாள அட்டைகள் பள்ளிகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

# இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக தமிழக அரசினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் இலங்கை சென்றடைந்தன! 50 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறும்.

## ஏற்கெனவே 1.20 இலட்சம் சிப்பங்கள் உரிய நேரத்தில் விநியோகம்!

**ஏ**ற்கெனவே இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவும் பொருட்டு, தமிழக அரசின் சார்பில் இரண்டு கட்டங்களாக, நிவாரணப் பொருட்கள் அடங்கிய 80 ஆயிரம் சிப்பங்கள் 13.11.2008 அன்றும், 40 ஆயிரம் சிப்பங்கள் 22.4.2009 நாளன்றும் கப்பல்கள் மூலம் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டு, அவை இலங்கையில் தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள போரினால் பாதிக்கப் பட்டுள்ள இலங்கைத் தமிழ்க் குடும்பங் களுக்கு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாயிலாக விநியோகிக்கப் பட்டன.

இதைத் தொடர்ந்து இலங்கை யிலுள்ள தற்காலிக முகாம்களுக்கு கூடுதலாக இடம் பெயர்ந்து வந்து சேர்ந்துள்ள இலங்கைத் தமிழ் மக்களுக்கு விநியோகிப்பதற்காக, மூன்றாம் கட்டமாக, சுமார் 7 கோடி ரூபாய் மதிப்புடைய நிவாரணப் பொருட்கள் அடங்கிய 50 ஆயிரம் சிப்பங்கள் இலங்கைக்கு 9.5.2009 நாளன்று அனுப்பி வைக்கப்பட்டன. இதில் வழக்கமாக அனுப்பப்படும் அரிசி, பருப்பு, சர்க்கரை, தேயிலை, சோப்பு, பற்பசை, சேலை, பெண்களுக்கான ஆயத்த ஆடை, வேட்டி, கைலி, துண்டுகள் மற்றும் படுக்கை விரிப்புகள் ஆகியவற்றுடன், முதலுதவி செய்வதற்கான பிளாஸ்டர் சுருள், மருந்து தடவப்பட்ட பிளாஸ்டர், கட்டு கட்டும் துணி, பஞ்சு ஆகியவற்றுடன் தண்ணீர் சுத்திகரிக்கும் மாத்திரைகளும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

கடந்த 9.5.2009 ஆம் நாள் முற்பகல் 11 மணியளவில் எம்.எஸ்.சி. "ஹிமாலயா" என்ற கப்பல் மூலம் இந்த நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இவை ஏற்கெனவே கொழும்பு துறைமுகத்தை சென்றடைந்து, இந்திய தூதரக அதிகாரிகளினால் பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. கூடுதலாக இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு, இவை விரைவில் பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தினரால் விநியோகிக்கப்படும்.

ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்ட உணவுப் பொருட்கள், துணி வகைகள் மற்றும் பாத்திரங்கள் ஆகியவை போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்கப்பெற்றது பேருதவியாக அமைந்தது என்ற தகவலும் வெளியுறவு அமைச்சகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# இலங்கைத் தமிழர் பகுதியில் புனரமைப்புப் பணிகளுக்காக கூடுதலாக ரூ.500 கோடி நிவாரண உதவி

இலங்கையில் தமிழர் பகுதியில் புனரமைப்புப் பணிகளுக்காக கூடுதலாக ரூ.500 கோடி நிவாரண உதவிகள் வழங்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும் என்பதை இலங்கை அரசிடம் நேரில் வலியுறுத்தவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

போரால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையில் அப்பாவித் தமிழர்களுக்கு உதவுவதற்காக இந்திய அரசு நிவாரண உதவிகளை அனுப்பி வருகிறது. ஏற்கெனவே மாண்புமிகு பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், 100 கோடி ரூபாய் மதிப்பில் இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரண உதவி அறிவித்துள்ளார். தமிழக அரசும் 25 கோடி ரூபாய் அளித்துள்ளது.

இந்நிலையில் இலங்கைத் தமிழர்களுக்கு 500 கோடி ரூபாய் நிவாரண உதவியை மத்திய அரசு அறிவித்துள்ளதாக மாண்புமிகு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

# விவசாயிகளை பொருளாதார மேம்பாடு அடையச் செய்யும் செம்மை நெல் சாகுபடி

**தி**ருத்திய நெல் சாகுபடி என்று அழைக்கப்பட்டு வந்ததை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால், "செம்மை நெல் சாகுபடி" என்று பெயரிடப்பட்டு கடந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தி விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

குறைந்த செலவில் அதிக அளவு மகசூல் பெறுகின்ற வகையில் தமிழக அரசு இத்திட்டத்தை வேளாண்மைத்துறை மூலம் விவசாயிகளுக்குக் கொண்டு சென்று அவர்களுக்குத் தேவையான உபகரணங்கள், விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவை அனைத்தும் இலவசமாக வழங்கப் படுகிறது. வெற்றிகரான திட்டம் என்று விவசாயிகள் பாராட்டும் அளவிற்கு இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப் படுகிறது.

மதுரை மாவட்டம் நெல் சாகுபடியில் பழமை வாய்ந்ததாகும். சுமார் **65,500** எக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. பெரியாறு, வைகை பாசனத்திட்டம் மற்றும் மானாவாரி கண்மாய்கள் மூலம் பாசன வசதியினால் சாகுபடி செய்யப்படுகிறது.

இந்த ஆண்டு பெறப்பட்ட கூடுதல் மழையால் மானாவாரி கண்மாய்களும்

**சிவ. சு. சரவணன்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை.



நிரம்பியதால் 69,000 எக்டேர் அளவுக்கு நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நெல் சாகுபடி நிலங்கள் பல்வேறு தன்மைகளைக் கொண்டவைகளாக உள்ளதால் சராசரியாக குறுவைப் பருவத்தில் ஒரு எக்டேருக்கு 5,500 கிலோவும், சம்பா மற்றும் தாளடிப் பருவத்தில் 5,000 கிலோவும் மகசூலும் பெறப்பட்டு வருகின்றது.

மதுரை மாவட்டத்தில் குறுவை மற்றும் சம்பா பருவங்களில் 14,500 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. குறுவைப் பருவத்தில் ஒரு எக்டேருக்கு 8,870 கிலோ மகசூலும், சம்பா பருவத்தில் இதுவரை அறுவடை செய்யப்பட்ட பகுதிகளில் சராசரியாக ஒரு எக்டேருக்கு 8,140 கிலோ மகசூலும் பெறப்பட்டுள்ளது.

சாதாரண முறையில் ஒரு எக்டேர் நெல் நடவு செய்ய 8 சென்ட் நாற்றங்கால், 30 கிலோ நெல் விதை, 25 நாள் நாற்று வயது, 25 பேர் நடவுப் பணி மற்றும் களையெடுக்க 10 பேர் வீதம் இரண்டு முறை 20 பேர் தேவை. இதனால் ஒரு எக்டேருக்கு 26,000 மகசூல் 7,000 கிலோ, வைக்கோல் 10,500 கிலோ, வருமானம் ரூ.68,250, நிகர லாபம் ரூ.42,250 கிடைக்கின்றது.

தற்போது புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செம்மை நெல் சாகுபடியினால் ஒரு எக்டேர் நெல் நடவு செய்ய 1 சென்ட் நாற்றங்கால், 3 கிலோ நெல் விதை, 14 நாள் நாற்று வயது, 6 பேர் நடவுப் பணி மற்றும் களையெடுக்கும் கருவியோடு இரண்டு பேர் இருந்தால் போதும். இதனால் ஒரு எக்டேருக்கு 23,250, மகசூல் 8,500 கிலோ, வைக்கோல் 12,750 கிலோ, வருமானம் ரூ.82,875, நிகர இலாபம் ரூ.59,625 கிடைக்கின்றது.

ஆரம்பத்தில் விவசாயிகள் இம்முறையில் பயிர் செய்ய போதிய ஆர்வம் காட்டவில்லை. பயிரின் நிலைமை மற்றும் மகசூல் விவரங்களை நேரிடையாகப் பார்த்த பின்பு விவசாயிகள் அதிக ஆர்வமுடன் செம்மை நெல் சாகுபடி செய்ய முன் வந்துள்ளார்கள். இச்சாகுபடியில் ஒரு தூருக்கு 35 முதல் 40 கதிர்கள் வரையிலும், ஒவ்வொரு கதிரிலும் சுமார் 200 நெல் மணிகளுக்கு மேல் இருப்பதாலும், பூச்சி நோய்த் தாக்குதல் மிகக் குறைவாக இருப்பதாலும், நீர் சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டதாலும் அதிக மகசூல் பெறப்பட்டுள்ளது.

செம்மை நெல் சாகுபடியின் மூலம் பயனடைந்த விளாச்சேரி கிராமத்தைச் சார்ந்த, திருமதி. மரகதவள்ளி கூறும்போது, "முதலில் இந்த முறையினால் சாகுபடி செய்யத் தயங்கினோம். பின்பு வேளாண்மை அலுவலர்கள் பலமுறை இங்கு வந்து இந்த சாகுபடித் திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை எடுத்துக் கூறினார்கள். அதன் பின்பு இப்பகுதியைச் சார்ந்த 33 விவசாயிகள் 50 எக்டேர் பரப்பளவில் இத்திட்டத்தை செயல்படுத்தினோம். இப்போ நாங்க எதிர்பார்க்காத அளவுக்கு பெரிய மகசூலைத் தந்திருக்கு, தொடர்ந்து செம்மை நெல் சாகுபடி செய்ய முடிவு செய்துள்ளோம்" என்றார்.

திருப்பரங்குன்றத்தைச் சார்ந்த திரு. எஸ். ஜெயபெருமாள் கூறும்போது,

"எனக்கு வயது 60. சுமார் 45 வருஷமா விவசாயம் தான் தொழில். ஆனால் இந்த முறையை நான் இதுவரை கண்டதில்லை. முதலில் நம்பிக்கை இல்லை. பக்கத்துத் தோட்ட விவசாயிகள் எல்லாம் என்னை ஏளனமாகப் பார்த்தனர். வேளாண்மை அலுவலர்கள் இம்முறையைப் பற்றி விரிவாக விளக்கியும், நெற்பயிர் விதைக்கத் துவங்கியதில் இருந்து அறுவடை வரை அத்தனை உதவிகளையும் செய்தார்கள். என்னுடைய 2 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்ட இம்முறையினால் அதிக மகசூல் பெறப்பட்டுள்ளது. பக்கத்துத் தோட்டத்து விவசாயிகள் இந்த முறைக்கு மாற என்னுடைய ஆலோசனையைக் கேட்டுள்ளார்கள். ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கு. தென்கால் பாசனப் பகுதி முழுவதும் செம்மை நெல் சாகுபடியாக பரவப் போகிறது" என்று கூறினார்.

மேலும், செம்மை நெல் சாகுபடி குறித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திரு. பெரியசாமி கூறும்போது, "தமிழக அரசு விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டும் அவர்களின் பொருளாதாரத்தை மேம்பாடடையச் செய்யும் வகையில் இத்திட்டம் கொண்டு வரப்பட்டது. இதனால் 1 எக்டேர் பயிர்செய்யும் விவசாயிகளுக்கு தேவையான விதை, பயிர்களுக்கான கருவி, களையெடுப்புக் கருவி, உரம் போன்ற உபகரணங்களை நீர்வள, நிலவளத் திட்டம், ஆத்மா திட்டங்களின் மூலம் வழங்கி விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றது. சாகுபடி செய்யும் நிலப்பரப்பு குறைந்து வந்தாலும் செம்மை நெல் சாகுபடி செய்யப்படுவதால் உற்பத்தி குறையாமல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மதுரையைச் சுற்றியுள்ள கிழக்கு ஒன்றியத்தில் பட்டிணம், மேற்கு ஒன்றியத்தில் சத்திரப்பட்டி, வாடிப்பட்டி ஒன்றியத்தில் நீரோத்தல், அலங்காநல்லூர், திருப்பரங்குன்றம் போன்ற 286 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு குறுவைப் பருவத்தில் 2,002 எக்டேர், சம்பா மற்றும் தாளடிப் பருவத்தில் 12,498 எக்டேர்ஆக மொத்தம் 14,500 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு 7,111 விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள்.

இத்திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வை விவசாயிகளிடம் அதிக அளவில் ஏற்படுத்தும் விதமாக, ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ஒரு ஹெக்டேர் பரப்பில் ரூ.2,000 மானியத்தில் 1,600 ஹெக்டேர் பரப்புக்கு ரூ.3.20 இலட்சம் நீர்வள, நிலவளத் திட்டத்தில் ஒரு எக்டேருக்கு ரூ.7,750 மானியம் வீதம் 297 எக்டேருக்கு ரூ.23.01 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை விவசாயிகள் அதிக அளவில் பயன்படுத்த தமிழக அரசு தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. அனைத்து விவசாயிகளும் இம்முறையினைக் கடைப்பிடித்தால் நீர்சேமிப்பைக் கொண்டு கூடுதலான பயிர் சாகுபடி செய்து சாதனை படைக்கும்; புரட்சித் திட்டமாகத் திகழும். ❖

# ஏழைக் குழந்தைகளின் உயிர்காக்கும் இளம்சிறார் இருதய பாதுகாப்புத் திட்டம்

இதய நோயினால் பாதிக்கப்பட்ட இளஞ்சிறார்கள் இருதய அறுவை சிகிச்சைகளை இலவசமாக உடனடியாக, அறுவை சிகிச்சைகளை மேற் கொள்வதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சீரிய எண்ணத்தில் உருவான உயிர்காக்கும் திட்டம் “இளம்சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டம்'' ஆகும்.

இருதய அறுவை சிகிச்சைக்கான முழு செலவையும் அரசே ஏற்கும் வகையில் இளம்சிறார் இருதய பாதுகாப்புத் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 03.06.2008 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் தமிழக அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மற்றும் மருத்துவத் துறையின் மூலம் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்தில் குடும்ப வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 ஆயிரத்திற்குள் உள்ள குடும்பங்களைச் சார்ந்த, இருதய நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர் சிறுமியருக்கு அரசு மருத்துவமனைகள் மட்டுமின்றி அரசால் அறிவிக்கப்பட்ட தமிழ்நாட்டிலுள்ள 17 தனியார் மருத்துவமனைகளில் இருதய அறுவை சிகிச்சை மற்றும் இதய நோய் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் சிகிச்சை வழங்குவதற்காக தமிழ்நாடு நோயாளர்



நிதியுதவி அமைப்பின் மூலம் தனியார் மருத்துவமனைகளுக்கு, மூடிய அறுவை சிகிச்சைக்காக ரூ.10 ஆயிரம், சாதாரண திறந்த இருதய அறுவை சிகிச்சைக்காக ரூ.30 ஆயிரம், கடினமான, திறந்த அறுவை சிகிச்சைக்காக ரூ.70 ஆயிரம் என நிதி வழங்கப்பட்டது. தற்போது மூடிய அறுவை சிகிச்சைக்காக ரூ.20 ஆயிரம், சாதாரண திறந்த இருதய அறுவை சிகிச்சைக்காக ரூ.50 ஆயிரம், கடினமான, திறந்த அறுவை சிகிச்சைக்காக ரூ.1 இலட்சம் என நிதி உதவி உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 04.06.2008 அன்று மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர்

**த.ஹரிராம்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

திரு. என். சுரேஷ்ராஜன் அவர்களால், இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. மாவட்டத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் வருமுன் காப்போம் திட்டம் முகாம்களிலும் இருதய அறுவை சிகிச்சைக்கான ஆரம்பக்கட்ட பரிசோதனைகள் செய்யப்பட்ட சிறுவர் களுக்கு, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.




கன்னியாகுமரி மாவட்டத்தில் இத்திட்டச் செயலாக்கம் குறித்து மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. என். சுரேஷ்ராஜன் அவர்கள் தெரிவிக்கையில் :

இதய நோயினால் பாதிக்கப்பட்ட ஏழைக் குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் இளம்சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் அடிப்படையில் 182 சிறுவர்கள் இருதய நோயினால் பாதிக்கப்பட்டவர்களாக கண்டறியப்பட்டனர். அவர்களில் 47 பேர் இருதய அறுவை சிகிச்சைக்காக தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் 8 பேருக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு நல்ல உடல் நலத்துடன் ஆரோக்கியமாக உள்ளனர். மீதமுள்ளவர்களுக்கு விரைவில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப் படவுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு முதற் கட்டமாக ரூ. 13 இலட்சம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

இத்திட்டம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ராஜேந்திரகுமார் இ.ஆ.ப., அவர்கள் கூறுகையில்,

"கன்னியாகுமரி மாவட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சிறப்புத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வரும் இளம்சிறார் இருதயப் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ், பயனடைய, துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அலுவலகத்திலுள்ள மருத்துவ அவசர கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண்ணான (கட்டணம் இல்லாத) 1056 என்ற எண்ணுக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு தெரிவித்தால் போதும். அவர்களின் இல்லங்களுக்கு சுகாதாரப் பணியாளர்கள் சென்று குழந்தையை அழைத்துச் சென்று தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வர். தற்போது கோவை குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனையில் 8 இளம் சிறார்களுக்கு இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும்,



இவ்வாண்டு இறுதிக்குள் மாவட்டத்தில் இருதய அறுவை சிகிச்சைக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள அனைத்து இளம் சிறார்களுக்கும் இருதய அறுவை சிகிச்சை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட கிருஷ்ணன்கோவிலைச் சார்ந்த பிரவின்குமாரின் தாயார். திருமதி. நாகம்மாள் கூறும்போது தெரிவித்ததாவது :

எனது மகன் பிரவின்குமார் (5) எனது 3ஆவது குழந்தை. குழந்தை பிறந்த சிறிது நாட்களில் அடிக்கடி காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்பட்டது. இதனால் மருத்துவர்களிடம் ஆலோசனை கேட்டபோது மகனின் இருதயத்தில் ஓட்டை இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தார்கள். எனது கணவர் சுரேஷ்குமார் நாகர்கோவில் டீக்கடையில் பலகாரம் செய்பவராக வேலைபார்த்து வருகிறார். நாள் ஒன்றுக்கு ரூ.100 முதல் ரூ.120 வரை ஊதியமாகப் பெற்று வருவார். எனது மகன் பிரவின்குமாருக்கு இருதயத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பினால் அடிக்கடி மருத்துவமனைக்குச் சென்று மருத்துவ ஆலோசனை பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தற்போது எனது மகனுக்கு வயது 5 ஆகிறது. நான் எனது மகனை ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ மனையிலும், தனியார் மருத்துவ மனையிலும் அவனது இருதய ஓட்டையை சரிசெய்வது தொடர்பாக பலமுறை ஆலோசனை பெற்று வந்தேன். மருத்துவர்களின் ஆலோசனைப்படி திருவனந்தபுரத்திலுள்ள மருத்துவ மனையில் இருதய அறுவை சிகிச்சை செய்தால் இருதயத்தில் ஏற்பட்டுள்ள குறைப்பாட்டினைச் சரிசெய்யலாம் எனத் தெரிவித்தார்கள்.

திருவனந்தபுரம் மருத்துவ மனையில் எனது மகனை காண்பித்த போது, அறுவை சிகிச்சைக்காக மட்டும் ரூ.28 ஆயிரம் பணம் கட்டவேண்டு மென்றும், இது தவிர மருந்துகள் மாத்திரைகளுக்காக கூடுதல் செலவாகுமென்றும் கிட்டத்தட்ட ரூ.1.25 இலட்சம் வரை செலவாகலாம் என தெரிவித்தார்கள். ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த என்னால் அவ்வளவு பணம் செலவழிக்க இயலாத நிலையில் இருந்து வந்தேன். அப்பொழுது எனது வீட்டின் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப் பட்டுள்ள இளம் சிறார்கள் இருதயப் பாதுகாப்புத் திட்டம் குறித்து தெரிவித்தார்கள். மேலும் அரசு மருத்துவமனை மருத்துவர்களும் இத்திட்டம் குறித்துத் தெரிவித்தார்கள். நானும் எனது குடும்பத்தார்களும் மிகவும் கஷ்டப்பட்டு வரும் சூழ்நிலையில் இவர்கள் தெரிவித்த இத்திட்டம் எனக்கு பயனுள்ளதாக இருக்குமென்று அறிந்தேன். இது தொடர்பாக துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள்

அலுவலகத்தில் எனது மகனின் இருதய அறுவை சிகிச்சைக்காக விண்ணப்பம் செய்தேன்.

சுகாதாரத்துறையின் மூலம் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டது. பின்னர் **10.11.2008** அன்று எனது மகனுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்தார்கள். தற்போது எனது மகன் நல்ல சுகமாக உள்ளான். இருதய அறுவை சிகிச்சைக்காக என்னிடமிருந்து **1** ரூபாய் கூட வாங்கவில்லை. அரசே இலவசமாக இந்த அறுவை சிகிச்சையை செய்துள்ளது. இந்த உதவி செய்து எனது மகனை காப்பாற்றிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நானும் எனது குடும்பமும் உயிர் உள்ளவரை மறக்கமாட்டோம். எங்களைப் போல் ஏழை எளிய மக்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற வேண்டுமென்பதே எங்களது வேண்டுகோளாகும்.

இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட புல்லுவிளையைச் சார்ந்த தியாகராஜன் **(11)** தாயார் திருமதி. அன்னச்செல்வம் **(43)** தெரிவித்ததாவது :

எனக்கு **6** குழந்தைகள் உள்ளனர். எனது கணவர் **4** ஆண்டுகளுக்கு முன்னால் இறந்து விட்டார். எனது 4வது குழந்தை தியாகராஜன் அவன் தற்போது 5ஆம் வகுப்பு படித்து வருகிறான். அவன் பிறந்தபோதே அவனது இதயத்தில் ஒட்டை இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். **6** வயதிற்கு மேல் அவனுக்கு அறுவை சிகிச்சை செய்யலாம் என்று மருத்துவர்கள் தெரிவித்தார்கள். இந்தச் சூழ்நிலையில் எனது கணவர் இறந்துவிட்டதால் குடும்ப வருமானத்திற்கு வழியில்லை. மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் எனது இரண்டாவது மகன் கூலி வேலைக்குச் சென்று தினசரி ரூ.**120** சம்பாதித்து வருவான். இந்த வருமானத்தை கொண்டே நானும் எனது **6** குழந்தைகளும் வாழ்ந்து வருகிறோம். கடந்த ஆண்டு எனது மகன் தியாகராஜன் நோய் ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டான். ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ மனையில் மருத்துவ சிகிச்சை செய்து வந்தேன். இந்தச் சூழ்நிலையில் அவனுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்தால் உடல் நலம் சரியாகும் என மருத்துவர்கள் தெரிவித்தார்கள். தனியார் மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை செய்வதற்கு ரூ.**1.50** இலட்சம் வரை செலவாகலாம் எனத் தெரிவித்தனர். இந்த நிலையில் இருந்தபோது,

சிறு வயது குழந்தைகளுக்கு இலவசமாக இருதய அறுவை சிகிச்சை செய்வதற்கான திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து செயல்படுத்தி வருவதாக அறிந்தேன். எனது வீட்டின் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் ஆலோசனையின்பேரில் மருத்துவ சிகிச்சைக்கு விண்ணப்பித்தேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருணையால் எனது மகனுக்கு மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் **14.08.2008** அன்று இருதய அறுவை சிகிச்சை செய்தனர். தற்போது எனது மகன் ஆரோக்கியமாக உள்ளான். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் எனது குடும்பத்திற்கு செய்த இந்த உதவி எங்களது குடும்பம் என்றும் நினைவில் கொள்ளும்.

★ ★ ★

TAICO BANK

# தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

தாளமுத்து-நடராசன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை-600 008.
தொலைபேசி எண் 044-28411643, 28547952 தொலைநகல் 044-28416456
மின்னஞ்சல் taico@dataone.in, taico@vsnl.net, இணைய தளம் www.taicobank.com

**தாய்கோ வங்கி – 46 ஆண்டுகளாக மக்கள் சேவையில்**

# ரூ.25 இலட்சம்

# தொழில்கடன்

- குறு, சிறு மற்றும் குடிசைத் தொழில்கள்.
- புதிய தொழில் நிறுவனங்கள்.
- செயல்படும் நிறுவனங்கள்.

__பிணையம்:__ அசையா சொத்துக்கள் (விளை நிலம், காலிநிலங்கள் மற்றும் மனைகள் நீங்கலாக)

__விவரங்களுக்கு:__ தாய்கோ வங்கி கிளைமேலாளர் அல்லது
இணையதளத்தில் தொடர்பு கொள்ளவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| குன்னூர் | கோவில்பட்டி | சாத்தூர் | மதுரை | திருச்சி | சேலம் | வேலூர் |
| 0423 2206003 | 04632 220547 | 04562 260359 | 0452 2343464 | 0431 2462745 | 0427 2313189 | 0416 2212597 |
| நாகர்கோவில் | சேப்பாக்கம் | கோயம்புத்தூர் | தஞ்சாவூர் | திருநெல்வேலி | நெய்வேலி | ஈரோடு |
| 04652 233741 | 044 28547751 | 0422 2529207 | 04362 238288 | 0462 2322921 | 04142 268849 | 0424 2268024 |
| அம்பத்தூர் | காஞ்சிபுரம் | திருவண்ணாமலை | திண்டுக்கல் | காரைக்குடி | ஆழ்வார்பேட்டை | ஆத்தூர் |
| 044 26540223 | 044 27223562 | 04175 251058 | 0451 2433351 | 04565 233881 | 044 24342463 | 04282 242070 |
| கூடலூர் | தருமபுரி | சிவகாசி | கரூர் | தேனி | வியாசர்பாடி | நாமக்கல் |
| 04262 263712 | 04342 266744 | 04562 276867 | 04324 262636 | 04546 252163 | 044 25516566 | 04286 277616 |
| திருவாரூர் | கிருஷ்ணகிரி | ஈக்காட்டுத்தாங்கல் | திருப்பூர் | புதுக்கோட்டை | எழும்பூர் | விழுப்புரம் |
| 04366 220090 | 04343 230377 | 044 22252030 | 0421 2230250 | 0432 2220855 | 044 28411643 | 04146 222599 |
| இராமநாதபுரம் | | | பெரம்பலூர் | | | நாகப்பட்டினம் |
| 04567 220678 | | | 04328 279633 | | | 04365-[illegible] |

## நாமக்கல் மாவட்டத்தில்

# வேளாண்மைப் பொறியியல் துறையின் சீர்மிகு திட்டப் பணிகள்

நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்களின் சீர்மிகு ஆலோசனைப்படி பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயத்திற்குத் தேவையான நீர் ஆதாரங்களைப் பெருக்குவது, நில வளங்களை செப்பனிடுவது, நீர்ப்பாசன முறையை எளிமைப்படுத்துவது, நவீன பண்ணை இயந்திரங்களை விவசாயிகள் மானிய விலையில் பெற உதவுதல், நவீன கருவிகளை விவசாயிகள் உபயோகிக்க விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மின் சக்தியை மிச்சப்படுத்துதல் போன்ற அடிப்படை செயல்பாடுகளைத் தன்னகத்தே கொண்டு சீரிய திட்டங்கள் வகுக்கப்பட்டு, மிகச் சிறந்த முறையில் வேளாண்மைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நாமக்கல் உபகோட்டம் மூலம் நாமக்கல், ராசிபுரம் வட்டங்களிலும், திருச்செங்கோடு உபகோட்டம் மூலம் திருச்செங்கோடு, பரமத்தி வேலூர் வட்டங்களிலும் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் நிலம் மற்றும் நீர் வளங்களைப் பாதுகாப்பதிலும், மேம்படுத்துவதிலும், நிருவகிப்பதிலும் வேளாண்மைப் பொறியியல் துறை ஈடுபட்டிருக்கிறது.

விவசாயிகள் மத்தியில் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகளைப் பிரபலப்படுத்தும் பொருட்டும், பணியாளர் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டும், விவசாயிகளுக்கு டிராக்டர்கள், பவர் டில்லர்கள், கதிரடிக்கும் இயந்திரங்கள், நாற்றுநடும் கருவிகள், தானியங்கி கதிரறுப்பான்கள் போன்ற இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இயந்திரங்களின் விலையில் 25 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக கருவிக்குத் தகுந்தாற்போல் ரூ.30,000 வரை மானியமாக வழங்கப்படுகிறது. சிறு வேளாண் உபகரணங்களுக்கு 75 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. 2007–08 ஆம் ஆண்டு 44 டிராக்டர்கள், 17 பவர் டில்லர்கள், 47 ரோட்டாவேட்டர்கள் மற்றும் 10 கல்டிவேட்டர்கள் ஆக மொத்தம்

**கி. கண்ணதாசன்**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
நாமக்கல்.

118 இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ரூ.27.917 இலட்சம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 118 விவசாயிகள் பயனடைந் துள்ளனர். 2008–09 ஆம் ஆண்டு 10 டிராக்டர்கள், 1 பவர் டில்லர், 11 பண்ணைக் கருவிகளுக்கு மொத்தம் ரூ.4.39 இலட்சம் மானியமாக வழங்க நிதி பெறப்பட்டு, 22 விவசாயிகள் பயன்பெறும் வகையில் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம், இதுவரை 140 விவசாயிகள் மேற்கண்ட இயந்திரங்களை மானிய விலையில் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

நேரம் மற்றும் மின்சாரத்தை மிச்சப் படுத்தி பாசனத்திறனை அதிகரிக்கும் பொருட்டு, விவசாயிகளுக்குப் பழைய பம்புசெட்டுகளுக்குப் பதிலாக புதிய பம்புசெட்டுகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. 2007–08 ஆம் ஆண்டில் 66 ஆதிதிராவிட விவசாயி களுக்கு ரூ.4.927 இலட்சம் மானியத்திலும் 975 இதர விவசாயிகளுக்கு ரூ.58.453 இலட்சம் மானியத்திலும் புதிய பம்பு செட்டுகள் வழங்கப்பட்டு 1,041 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். 2008–09 ஆம் ஆண்டிற்கு 43 விவசாய பம்புசெட்டுகள் ரூ.3.20 இலட்சம் மானியத்தில் ஆதிதிராவிட விவசாயி களுக்கும், 1,004 விவசாய பம்புசெட்டுகள் ரூ.64.40 இலட்சம் மானியத்தில் இதர விவசாயிகளுக்கும் மொத்தம் 1,047 விவசாயிகள் பயன்பெறும் வகையில் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் 2,088 விவசாயிகள் பயனடைகின்றனர்.


மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில், மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மூலம், பழங்குடி விவசாயிகளின் நிலங்களில் மண் அரிமானத்தைத் தடுத்து உற்பத்தித் திறனைப் பெருக்கி, பழங்குடி விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்தும்பொருட்டு சம உயர கற்சுவர், தளர் தடுப்பணைகள் அமைத்துத் தரப்படுகின்றன. நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலை வட்டாரத்தில் சித்தூர் நாடு மற்றும் பெரக்கரை நாடு ஆகிய

**“அனைத்துப் பணிகளுக்கும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 95 சதவிகிதம் மற்றும் இதர விவசாயிகளுக்கு 90 சதவிகிதம் மானியத்தில் செயல்படுத்தப் படுகின்றன. மீதமுள்ள 5 சதவிகிதம் மற்றும் 10 சதவிகிதம் பயனாளி களிடமிருந்து பெறப்பட்டு தொகையானது வங்கிக் கணக்குகளில் சேமிப்பாக வைத்து, அத்தொகை வருங்காலங்களில் பராமரிப்பிற்கு உபயோகப்படுத்தப்படுகிறது.”**

கிராமங்களில், 2007– 08ஆம் ஆண்டில், 136 மலைவாழ் மக்களின் 154.44.0 எக்டேர் நிலம் பயன்பெறும் வகையில் ரூ.16.50 இலட்சம் செலவில் சமஉயர கற்சுவர்களும், ரூ.2.50 இலட்சம் செலவில் 20 தளர் தடுப்பணைகளும், 100 சதவீத மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் இந்நிதியாண்டில் 130 எக்டேர் பரப்பில் தளர் கற்சுவர், 16 தளர் கற்சுவர் தடுப்பணைகள் ஆகியவை அமைக்கப்பட்டு 134 மலைவாழ் விவசாயிகள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தில் இதுவரை 270 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

மழை நீர் அறுவடைத் திட்டம் மற்றும் செயற்கை முறையில் நீர் செறிவூட்டும் திட்டத்தில், மழைநீரின் ஓட்டத்தினைத் தடுத்து ஆங்காங்கே தேக்குவதின் மூலம் மழைநீரைச் சேமித்து நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்தி நிலத்தின் உற்பத்தித் திறனை உயர்த்தும்பொருட்டு, தடுப்பணைகள், கசிவு நீர்க்குட்டைகள், பண்ணைக் குட்டைகள், ரீசார்ஜ் சாப்ட்கள் முதலானவை கட்டப்படுகின்றன. அனைத்துப் பணிகளுக்கும் ஆதி திராவிட விவசாயிகளுக்கு 95 சதவிகிதம் மற்றும் இதர விவசாயிகளுக்கு 90 சதவிகிதம் மானியத்தில் செயல்படுத்தப் படுகின்றன. மீதமுள்ள 5 சதவிகிதம் மற்றும் 10 சதவிகிதம் பயனாளி களிடமிருந்து பெறப்பட்டு தொகையானது வங்கிக் கணக்குகளில் சேமிப்பாக வைத்து, அத்தொகை வருங்காலங்களில் பராமரிப்பிற்கு உபயோகப்படுத்தப் படுகிறது. 2007–08 ஆம் ஆண்டில் 10 சிறு தடுப்பணைகள், 15 பெரிய தடுப்பணை கள், 7 கசிவு நீர்க் குட்டைகள், 16 பழைய கிணறுகளைப் புதுப்பித்தல், 66 பண்ணைக் குட்டைகள் ஆக மொத்தம் 114 பணிகள்ரூ.69.05 இலட்சம் செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதனால் 356 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். 2008–09ஆம் ஆண்டிற்கு 112 தடுப்பணைகள், 14 கசிவு நீர்க் குட்டைகள், 113 பண்ணைக் குட்டைகள், 24 ரீசார்ஜ் சாப்டுகள் ஆக மொத்தம் 263 பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதனால் 679 விவசாயிகள் பயனடைவார்கள். இப்பணிகள் மூலம் மொத்தம் 1,035 விவசாயிகள் நேரடியாகப் பயனடைவதோடு கட்டுமானத் தொழிலாளர்களும் மற்றும் மறைமுகமாக விவசாயத் தொழிலாளர்களும் பயனடைவார்கள்.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், மழை நீரின் வேகத்தையும் மண் அரிப்பையும் கட்டுப்படுத்த வயல்களில் வரப்புகள் ஏற்படுத்தப்படுகிறது. ஆங்காங்கே மழை நீரின் ஓட்டத்தினைத் தடுத்துத் தேக்குவதற்கு உறையிடாத பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படுவதால் நிலத்தடி நீர் உயர வழிவகை செய்யப்படுகிறது. உறையிட்ட பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படுவதால், சேமிக்கப்பட்ட நீரை 5 எச்.பி. டீசல் இயந்திரம் மூலம் இறைத்து பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. கோடைக் காலங்களில் இந்நீரைக்



கொண்டு மானாவாரிப் பயிர்களுக்கு பாசன வசதி செய்யப்படுகிறது. 2007–2008 ஆம் ஆண்டில் 72 பயனாளிகளுக்கு ரோட்டா வேட்டர் கருவிகள் ரூ.15.71 இலட்சம் மானியத்தில் வழங்கப் பட்டுள்ளன. மேலும் 90 சதவீத மானியத்தில் ரூ.0.90 இலட்சம் செலவில் 2 பண்ணைக் குட்டைகள் அமைக்கப் பட்டுள்ளன. 2008 – 2009ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தில் நவீன பண்ணை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் 75 சதவிகிதம் வரை மானியத்தில் வழங்கப்படுவதால், விவசாயிகள் கால விரயத்தைத் தடுப்பதோடு அதிக நுட்பத்துடன் விவசாயம் சார்ந்த பணிகள் மேற்கொண்டு விளைச்சலைப் பெருக்க வழிவகை செய்யப்படுகிறது. இத்திட்டத்தில் இதுவரை 109 விவசாயிகள் பயனடையும் வகையில் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 16 விவசாயிகள் பயன்பெறும் வகையில் உறையிட்ட பண்ணைக் குட்டைகளும், 6 விவசாயிகள் பயன்பெறும் வகையில் உறையிடாத பண்ணைக் குட்டைகளும், 400.00.0 எக்டேர் நிலத்தில் 440 விவசாயிகள் பயன் பெறும் வகையில் வயல் களில் வரப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கான 2 ஏக்கர் இலவச நிலம் வழங்கும் திட்டத்தில், தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறையின் பொறுப்பில் உள்ள ஆக்கிரமிக்கப்படாத மற்றும் ஆக்கிர மிக்கப்பட்ட தரிசு நிலங்களைக் கண்டறிந்து அவற்றை வகைப்படுத்துதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நிலம் சீர்திருத்தம் செய்திட புல்டோசர், டிராக்டர் ஆகியவற்றைக் கொண்டு முட்புதர் அகற்றுதல், நிலம் சமன் செய்தல், சரிவுக்குக் குறுக்கே கரை அமைத்தல் மற்றும் உழவுப்பணிகள் தேவைக்கேற்ப அரசு வழிகாட்டுதலின்படி செய்து கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தில் இதுவரை 639 விவசாயிகள் பயன்பெறும்

வகையில் 947.79 ஏக்கர் நிலம் சீர்திருத்தம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

**பயனடைந்தோர் பேசுகின்றனர்**

இத்திட்டத்தில் பயனடைந்த கபிலர்மலை வட்டாரம், குரும்பல மகாதேவியைச் சேர்ந்த கே. துரைசாமி, கூறும்போது,

“நான் எனக்கு சொந்தமான நிலத்தில் அதிக செலவு செய்து கூலியாட்களைப் பயன்படுத்தி நெல் பயிர் நடவு, களை எடுத்தல் போன்ற பணிகளைச் செய்து வந்தேன். தற்போது வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 75 சதவிகித மானிய விலையில் வழங்கப்பட்டுள்ள கோனோ வீடர், நெல் விதை விதைக்கும் கருவி ஆகியவற்றைக் கொண்டு மிக எளிதில் மிகக் குறைந்த கூலியாட்களைக் கொண்டு பணிகளை முடித்துவிடுவதால், இதன் மூலம் கால விரயமும் அதிக செலவும் தவிர்க்கப்படுகிறது. கூலி ஆட்களைக் கொண்டு பண்ணைப் பணிகள் மேற்கொண்டபோது ஒரு ஏக்கருக்கு ரூ.1,500 செலவானது. தற்போது நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துவதால், ஒரு ஏக்கருக்கு ரூ.500க்கும் குறைவாகவே செலவாகிறது. தற்போது இன்னும் இதுபோன்ற நவீன வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்கிவருவது எனக்கு விவசாயத்தில் மேலும் ஈடுபட ஆர்வத்தை அதிகப்படுத்து வதாக உள்ளது’’ என்றார்.

எலச்சிபாளையம் வட்டாரம், கோக்கலையைச் சேர்ந்த ப.கோவிந்தராஜ் என்பவர் கூறுகையில்,

“டிராக்டர் வாடகை உயர்வு, கூலியாட்கள் செலவு உயர்வு ஆகியவற்றால் கடந்த இரண்டு வருடங்களாக எனக்குச் சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்யாமல் தவிர்த்து வந்தேன். தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இரண்டு ஏக்கர் இலவச நிலத் திட்டத்தின் கீழ், பல வருடங்களாக விவசாயம் செய்யாமல் தரிசாக இருந்த எனது நிலத்தை, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் டிராக்டரைக் கொண்டு, சட்டி கலப்பை உழவு மற்றும் உழவுப் பணி செய்து இலவசமாக சீர்படுத்தி கொடுத்ததால், தற்போது நான் மீண்டும் விவசாயத்தில் ஆவலாக ஈடுபட்டு உள்ளேன். சரியான நேரத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செய்யப்பட்ட இந்தப் பணியினால் நான் மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுக்கும், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்’’. என்று உணர்வு மேலிட குறிப்பிட்டார். ★

# பயன் அளிக்கும் பால் வளம்

பொறிஞர் **பா. செல்வன்,** பி.இ., எம்.ஏ., பி.எல்.,
துணை பொது மேலாளர், ஆவின்

**இ**ந்தியா மனித வளம் மிக்க ஒருநாடு. மனித வாழ்க்கைக்கு ஏற்ற சீரான தட்பவெப்ப நிலை நிலவும் நாடு. ஆனால் நீர் வளம், கனிம வளம் ஆகியவற்றைப் பரவலாகத்தான் பெற்றுள்ளது. ஒரு சில மேலை மற்றும் கீழை நாடுகளைப் போல மாபெரும் தொழிற்புரட்சி இல்லை என்றாலும் கூட மத்திய, மாநில அரசுகளின் கடும் முயற்சி காரணமாக தொழில் துறையில் உலக அரங்கில் வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது.

தொன்மையான இந்தியாவின் அடிப்படைத் தொழில் விவசாயம். அதன் துணைத் தொழிலாக கால்நடை வளர்க்கும் தொழில் இருந்து வந்ததாக கற்கால மற்றும் சமவெளி நாகரீக சான்றுகள் நமக்கு தெளிவுபடுத்துகின்றன.

“ஆ” காத்து ஓம்பி ‘ஆ’ப் பயன் அளிக்கும் கோவலர் வாழ்க்கையில் கொடும் பாடில்லை என்னும் காப்பிய வரிகள் பசுவைப் பராமரிப்பதை முதல் தொழிலாகக் கொண்டு, அதிலிருந்து பெறும் பயனைக் கொண்டு தமிழ்ச் சமூகத்தின் ஒரு பிரிவு அமைதியான முறையில் நல்வாழ்வு வாழ்ந்திருக்கிறது என்பதைத் தெளிவு படுத்துகிறது. வான்மழை பொய்த்து விவசாயம் ஏமாற்றும் சூழ்நிலையில் கால்நடைகளும் அவற்றின் பயன்களும் விவசாயிகளுக்கு வாழ்வாதாரம் வழங்கி அவர்களைக் காப்பாற்றி இருக்கின்றது என்பதை வரலாறு எடுத்து இயம்புகிறது.

இன்றைய காலத்தில் இளைஞர்கள் அரசுப் பணி, தனியார் நிறுவனப் பணி என சிறு, நடுத்தர மற்றும் கனரகத் தொழிற்சாலைகளைத் தேடி அவற்றில் பணியாற்றுவதில் ஆவல் கொண்டுள்ளனர். சுய தொழில் தொடங்குவோரும், மென்பொருள், கனரகத் தொழில் சார்ந்த தொழில்களின்மீதுதான் தங்கள் கவனத்தைச் செலுத்தி வருகின்றனர். இவற்றுக்கு அப்பால் கிராமப்புற இளைஞர்களுக்குப் பயன் அளிக்கும் பால் வளம் தொடர்பான தொழில்களைப் பற்றி சிந்திப்பது இல்லை. அவர்களது கவனத்தை ஈர்க்கும் வகையில் ஒரு கிராமத்து இளைஞர் பத்து கறவை மாடுகளைப் பராமரித்து, ஒரு சிறிய பால் பண்ணை நிறுவி, அதனை நிருவகித்து, பயன்பெற்று வருகிறார். அந்த விவரங்களைத் தர விரும்புகிறோம்.

**அடிப்படைக் குறிப்புகள்**

1. நாளொன்றுக்கு 12 லிட்டர் பால் தரும் கறவை மாட்டின் விலை ரூ.30,000/–
2. கறவை மாட்டை வளர்க்கத் தேவைப்படும் இடம் பசு ஒன்றுக்கு 50 சதுர அடியும், அதன் கட்டுமானச் செலவை சதுர அடி ஒன்றுக்கு ரூ.150/– வீதமும், இதர உபகரணங்கள் மாடு ஒன்றுக்கு ரூ.600/– வீதமும் கொள்ளலாம்.
3. கட்டட மற்றும் உபகரணங்களின் மதிப்பிறக்கம் (Depreciation) ஆண்டுக்கு 10 சதவிகிதம் மற்றும் 20 சதவிகிதம் முறையை எடுத்துக் கொள்ளலாம்.
4. கறவை மாடுகள் பராமரிக்கும் பணியாளர் ஒருவருக்கு வருட ஊதியம் ரூ.30,000/– ஆக கொள்ளலாம்.
5. காப்பீட்டுச் செலவு கறவை மாட்டின் மதிப்பில் 6 சதவிகிதம் ஆக கொள்ளலாம்.
6. ஒரு கறவை மாடு கறவை காலத்தில் நான்கு கிலோவும், கறவை இல்லாத காலத்தில் இரண்டு கிலோவும் தீவனம் எடுத்துக் கொள்வதாகக் கொள்ளலாம்.
7. தீவனத்தின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.12/– ஆக கொள்ளலாம்.
8. இரண்டு ஏக்கர் தரிசு நிலத்தில் விளைவிக்கப்படும் பசுந்தாள் / புல் பத்து கறவை மாடுகளுக்கு உணவாக பயன்படுத்தலாம்.

**நிலையான மூலதனம் (Fixed Investment)**

| | | | |
|---|---|---|---|
| 1. | கறவை மாடு ஒன்றுக்கு ரூ.30,000 வீதம் 10 கறவை மாடுகளின் விலை | : | ரூ.3,00,000.00 |
| 2. | கறவை மாடுகளைப் பராமரிக்கும் கட்டட மதிப்பு | : | ரூ. 75,000.00 |
| 3. | இதர உபகரணங்கள் மதிப்பு | : | ரூ. 8,000.00 |
| | மொத்த நிரந்தர முதலீடு | : | ரூ. 3,83,000.00 |

**நிலையான செலவுகள்** (Fixed Cost)

1. நிலையான மூலதனம் மீதான வருடாந்திர வட்டி (15%) : ரூ. 57,150.00
2. கட்டடம் மீதான வருடாந்திர தேய்மானம் (10%) : ரூ. 7,500.00
3. உபகரணங்கள் மீதான வருடாந்திர தேய்மானம் (20%) : ரூ. 1,200.00
4. காப்பீட்டுச் செலவு 6% : ரூ. 18,000.00
5. பணியாளர் சம்பளம் : ரூ. 30,000.00
6. பசுந்தாள்/ புல் பயிரிட செலவு : ரூ. 40,000.00

வருடாந்திர மொத்த நிலையான செலவு : ரூ. 1,53,850.00

**மாறிலி செலவு** (Variable Cost)

1. கால்நடைத் தீவன செலவுத் முதல் 300 நாட்களுக்கு மாடு ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 4 கிலோ வீதமும், மீதி 65 நாட்களுக்கு மாடு ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 2 கிலோ வீதமும், ஆக கிலோ ஒன்றுக்கு ரூ.12/– வீதம் (13,300 x ரூ.12 வீதம் விற்பதால் வரும் வருமானம்) : ரூ. 1,59,600.00
2. கால்நடை மருத்துவச் செலவு மாடு ஒன்றுக்கு ரூ.500/– வீதம் வருடத்திற்கு : ரூ. 5,000.00
3. மின்சாரச் செலவு மாதத்திற்கு ரூ.150/– வீதம் வருடத்திற்கு : ரூ. 1,800.00
4. இதரச் செலவுகள் மாடு ஒன்றுக்கு ரூ.100 வீதம் வருடத்திற்கு: ரூ. 1,000.00

வருட மொத்த மாறிலி செலவு : ரூ. 1,67,400.00

**ஒட்டு மொத்த வருட செலவு : ரூ. 3,21,250.00**

**வருமான விவரம் (Returns)**

1. வருடத்தில் 300 நாட்களுக்கு மாடு ஒன்றுக்கு சராசரியாக தினமும் பெறப்படும் 1 2 லிட்டர் பாலை அரசு நிர்ணயித்த விலையான லிட்டர் ஒன்றுக்கு ரூ.12/– வீதம் விற்பதால் வரும் வருமானம் : ரூ. 4,32,000.00
2. கால்நடை எருவை விற்பதன் மூலம் வரும் வருட வருமானம் : ரூ. 4,000.00
3. கால்நடைத் தீவன சணல்பை விற்பதன் மூலம் வருட வருமானம் : ரூ. 1,419.00

**வருட மொத்த வருமானம் : ரூ. 4,37,419.00**

**வருட நிகர இலாபத் தொகை : ரூ. 1,16,169.00**

மேற்படி 10 கறவை மாடுகளைப் பராமரிக்கும் இதே முறையைப் பயன்படுத்தி ஒரு அலகு (Unit)க்கு பத்து கறவை மாடுகள் வீதம் தங்களது தகுதிக்கேற்ப பத்து முதல் 100 வரை எத்தனை அலகுகள் வேண்டுமானாலும் பராமரித்து அதன் பலனை அடையலாம். இதனையே பெரும் தொழிலாகக் கூட மாற்றலாம்.

சிறு தொழிலாக ஒரு அலகு நடத்த விரும்பும் இளைஞர்கள் விவசாயத்தின் துணைத் தொழிலாக இதனை ஏற்றுக் கெண்டு பசுந்தாள் மற்றும் இதர கால்நடைத் தீவனங்களை துணைப் பயிராகப் பயிரிட்டு variable costஐ குறைத்து லாபம் ஈட்டுவதற்கும் வழி உண்டு.

கிராமத்து மகளிர் சுயஉதவிக் குழுக்களாக இணைந்தும் தகுதிக்கேற்ப அலகுகள் அமைத்து இத்தொழிலில் ஈடுபடலாம். இவர்கள் விரிவான உரிய ஆலோசனைகள் பெற தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கழைக்கழகத்தையும், தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறையையும் அணுகலாம். உற்பத்தி ஆகும் பாலை தனிப்பட்ட முறையில் விற்பனை செய்ய இயலாதபோது தமிழ்நாடு பால் உற்பத்தி கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களின் கீழ் இயங்கும் அவரவர் பகுதிகளுக்கு அருகில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திடமும் தாங்கள் உற்பத்தி செய்யும் பாலை வழங்கி அதற்கு அரசு நிர்ணயித்து உள்ள விலைத் தொகையை பயனாக பெறலாம்.

‘ஆ’ காத்து ஓம்பி ‘ஆ’ப் பயன் அளித்து கொடும்பாடில்லா இனிமையான வாழ்வு வாழ கிராமப்புற இளைஞர்களை அழைக்கிறோம். ❖





R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/09-11
&WPP No.TN/PMG(CCR)518/09-11